OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2- JAN 1925
MADRAS

R34
N24
128209

3015
1669

உ

சிவமயம்

அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸாக்ஷாத்
கார நிஜானந்த ஸ்வாநு பூதியிலிருக்கும்
ப்ரம்மஸ்ரீ பிரம்ம நிஷ்டாபரன்
அ வ தூ த ர்,

ஸதானந்தஸ்வாமிகளால்,

செய்யப்பெற்ற,

ஸமுதாயம்

என்னும்

பூலோகஜன சமுகச்

சீர்திருத்த சாஸ்திரம்.

Social Science.

முதற்பதிப்பு காப்பி 1000.

ஸ்ரீராமாநுஜம் பிரஸ், தென்காசி.

1924

(All Rights Reserved)

ஓம்.

சிவமயம்

முன்னுரை

பூமியின் நானாபாகங்களிலும் வஸித்துவருகின்ற ஜனங்கள் அவரவர்களின்வாஸஸ்தானங்களிலுள்ள ஐசுவரியத்தில் திருப்தியடையாது, அந்நியராஜ்யங்களிற்சென்று ஸஞ்சரித்துத் தரவிய ஸம்பாத்தியஞ்செய்தும் ஆங்காங்குள்ள பொருள்களின் தூட்பத்தை யறிந்துகொண்டும் வருகின்றார்கள். ஒரு ராஜ்யக்காரர்கள் வெகு காலமாய் அளவற்ற பிரயாஸப்பட்டுத் தேடிவைத்துள்ள செல்வக்குவியலை வேறோர் ராஜ்யக்காரர்கள் 'தமது யுத்த ஸாமர்த்தியத்தினாலும்'—புத்திசாதுரியத்தாலும் வெகுளிதாய்க்கைப்பற்றிக்கொள்ளுகின்றனர். பலமுள்ளவர்களாயும் பிரபுக்களாயும், செல்வாக்கெனும், உதவி வாய்ந்தவர்களாயு மிருக்கின்ற ஜனங்கள், முறையே பலஹீனர்களும் வறுமைப்பிணியினால் வருந்துவோரும் யாதொரு ஸகாய மற்றவர்களுமாகிய ஜனங்களை இவ்வுலக யாத்திரையில் மிதித்துப் பின்பே தள்ளித்தாங்களே முன்னணியிற் சென்று "ஸ்தானம்" கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென பகீரதப் பிரயத்தினஞ் செய்கின்றார்கள். கிறிஸ்தவர்களும் மஹம்மதியர்களும் "ஸத்யஸ்ரூபியாகிய கடவுளின் தத்துவத்தை அறிந்துகொண்டு உபாஸிக்கத்தக்க மார்க்கம் (தாங்கள்கூறுகின்றவண்ணம்) ஒன்றே உண்டென்றும், அந்த மார்க்கத்தை நிராகரித்துவிடின் ஒருவருக்கும் மோக்ஷங்கிடைக்கமாட்டாதென்றும் கூறி, வேறுகதியில்லையெனவும்" சித்தாந்தஞ் செய்கின்றனர். ஆனால் ஹிந்துக்களும் அவர்களின் உட்பிரிவினருமாகிய சிலர், "பல பலமார்க்கங்களாய்ச் செல்கின்ற நதிகளெல்லாம் கடைசியில் ஸமுத்திரத்தைச் சென்றடைதல்போல எவரெவர் எத்தகைய (ஸமய) மார்க்கத்தினைப்பின்பற்றி (யனுஷ்டித்து)ச்சென்ற போதிலும், முடிவில் மோக்ஷமாகிய இன்பம் பெறுதற்கு யாதோர்விரோதமும்" மில்லையெனப் பிரபலமாய் வாதித்து ஜயபேரியடிக்கின்றனர்.

சிலர், பிரகிருதி தத்துவத்தினுள்ளடங்கியுள்ள பதார்த்தங்களைத்தமது புத்திஸாமர்த்திய விசேஷத்தால் வேறொரு உருவம்

பெற்ற நிலைமைக்குக்கொண்டுவந்து, அவைகளை வெகு விநோத சமாசெய் செய்முறைகளினுலலங்கரித்து உலகத்தவர் கண்டு மயங்கி ஆச்சரியமடையச்செய்கின்றனர். வேறுசில மேதாவிகள் "இயல்பாயமைந்திருக்கின்ற சுதந்தரத்தையடையவேண்டுமானல் பிரகிருதி (Nature) யின் சுபாவத்தை அநுஸரித்தல் நலமா? அல்லது அதனை நிராகரித்தல் நலமா? என்பதனைப்பற்றி வாதிக்கின்றனர். ஒருராஜ்யம் அழுகுங்கால் மற்றொருராஜ்யம் சிரித்தலும், ஒருராஜயம் உறங்கும்பொழுது வேறொரு ராஜ்யம் கனவு காண்பதும் ஒரு ராஜ்யம் முன்னேக்கிச் செல்லும்பொழுது பின்னுமோரிராஜ்யம் கண்கொட்டி (சிமிட்டி) விழித்து விழித்து நோக்குவதும் வழக்கமாயிருக்கின்றது. புருஷஸ்திரீகள் (புருஷத் தன்மையுள்ள ஸ்திரீகள்) ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் வேண்டுமென்றும், புருஷ புருஷர்கள் (புருஷத்தன்மையுள்ள புருஷர்கள்) பூரணசுவதந்தரங்கொடுத்தல் ஸாத்யமல்லவென்றும், ஸ்திரீபுருஷர்கள் (ஸ்திரீ சுவபாவமுள்ள புருஷர்கள்) அதனுல் விரோதமில்லை கொடுக்கலாம், என்றும் பல பலவாறு அபிப்பிராயப்படுகின்றனர். இன்னும் சிலர், "ஜாதி, சிஷ்டாசாரம், பாஷை, வஸ்திரமுடுத்தும் ரீதி ஆஹாரம், இவைகளில் நவீன நாகரீகத்தை யனுசரித்துச் சீர்திருத்த (பரிஷ்கார)ம் வேண்டுமெனவும், மற்றுஞ்சிலர் அவை முற்றிலும் தேவையேயில்லை யென்றுஞ் சொல்லுகின்றனர். ஐக்மத்தியங்கொண்டு உலகத்தில் ஸர்வஸ்வந்தரத்தையும் அடைய வேண்டுமெனச்சிலரும், நாமெல்லோருமொன்று சேர்ந்து முன்னேற்றமடைவதனுல் அது கார்யஸித்திக்குப் பெருந்தடையாவ தோடு வெகுபிரமாதமாய் வந்துவிடுமென்று பின்னுஞ் சிலரும், ஊஹிக்கின்றனர்.

உயர்ந்த பட்ட பரீக்ஷைகளில் ஜயித்தால்தான் எளிதில்காரிய ஸித்தி கைகூடுமென்று ஒரு சாராரும், சிபார்சு பலந்தான் நல்ல தென்றுமற்றொரு சாராரும், "அதெல்லாம் முக்யமல்ல; காரியத்தை நிர்வஹித்து முடிக்குந்திறந்தான் பிரதானம்" எனப் பின்னுமோர் சார்பினரும் "இவைகளொன்றுமே காரணமல்ல; ஆனல் பாக்கிய பலமே பலம்" என்று வேறோர் கக்ஷியினரும் கருதுகின்றனர்.

மேல் நாட்டினரையே எல்லாவிதத்தாலும் பின்பற்றி நடத்தல்வேண்டுமென ஒரு பக்கத்தாரும், "அதுஸரியல்ல; கீழ்நாட்டி-

னைத்தான் அனுசரிக்கவேண்டும்" என்று வேறோர் சங்கத்தவரும் சொல்கின்றார்கள். சிலபண்டிதர்கள் "கண்டனுகற்கப்பண்டிதனுவான்" என்றபடி பற்பல புஸ்தகங்களைப்படித்தால்தான் அறிவு நன்குவளருமென்றும், வேறுசில வித்துவான்கள் "அப்படியல்ல; பிரகிருதித்துவங்களை (இயற்கைப் பொருள்களின் நுட்பங்களை) ஸூக்ஷ்மமாக ஆராய்ந்தறிவதானால் "அறிவுதிடப்படு"மென்றும், அபிப்பிராயங்கொள்கின்றார்கள். சிலதத்துவ சாஸ்திரிகள், ஒரு ஸ்தலத்தினின்று மாரம்பிக்கப் பெற்ற காரியமானது முடியும் பொழுதும் அவ்வாரம்பிக்கப்பெற்ற ஸ்தலத்திலேயே "சக்கிரகாரமான சேகைபோலும்" வந்து சேருமெனவும், வேறு சில பதார்த்தத்துவக்ஞானிகள் "அவ்விதம் வருவதில்லை" யெனவும் சாதிக்கின்றனர். ஸ்ருஷ்டியினுடைய ஆரம்பகாலத்தில், உலோஹ வர்க்கத்தினின்று ஸஸ்யவர்க்கமும், (புல்பூண்டு முதலியனவும்). அதில்நின்று மிருக வர்க்கமும், மிருக வர்க்கத்தினின்று மனித வர்க்கமும் முறையே விருத்திபடைந்து வந்தனவென்று சிலரும், "ஸ்ருஷ்டியின் ஆரம்பம்முதல் அந்தம்வரை எல்லாவர்க்கங்களுமே உண்டு" என்று இன்னுஞ்சிலரும், "லோகவர்க்கம், ஸஸ்யவர்க்கமாயும், மிருகவர்க்கமாயும் மனுஷ்யவர்க்கமாயும் வளர்ந்துவருவதில்லை" எனப்பின்னுஞ்சிலரும் ஸித்தாந்தஞ்செய்கின்றனர். "விச்வாஸம் சிரேஷ்டமா? தத்துவக்ஞானம் சிரேஷ்டமா?" என்று இரண்டுகக்ஷிகள் பலமாய் வாதிக்கின்றன. உலக விஷயகங்களில் மேன்மையடைவது சிரேஷ்ட மென்றும், ஆத்மக்ஞானத்தில் மேன்மையடைவது சிரேஷ்ட மென்றும் வேறு இரண்டுபாகக்காரர்கள் வியவஹரிக்கின்றார்கள். மத விஷயத்தை அடிப்படை (அஸ்திபாரம்) ஆக்கி, "கிருஷி, வியாபாரம், கைத்தொழில்" இவைகளை நடத்தவேண்டுமென்று ஒரு ஸங்கத்தாரும், அது முடியாதகாரியம், எங்குசென்றாலும் அதை இழுத்துக்கொண்டு வராமல் "அதனைத்தொலைத்துத் தலை மூழ்குதலே நலம்" என்று வேறொரு ஸபைக்காரர்களும் வாதாடுகின்றனர். ஸமுதாயம் மேன்மையடைவதற்காக ஒவ்வொருவரும் தனித் தனியே பாடுபடவேண்டுமென்று சிலரும், "அவ்விதம் தேவையில்லை; அவரவரின் காரியத்தை அவரவர்பார்த்துக்கொண்டு வந்தால் அதுவே ஸ்மூதாயத்தைக்காப்பாற்றியதுபோல்" என்று மற்றுமொரு கழகத்தவரும் கழருகின்றனர்.

ஸ்ருஷ்டியில் நாமநுபங்களோடு கூடிய யாதொரு வஸ்துக்களையும் பூஜித்தல் கூடாதென்று ஒருவர்க்கக்காரர்களும் "எல்லா வஸ்துக்களையும் பூஜிப்பதில் விரோதமொன்றுமில்லை" யென்று வேறோர் வர்க்கத்தவரும் பகருகின்றனர்.

இவ்வாறு தற்காலத் தினரின் சிரத்தையும் புத்தியும் பல பல மார்க்கங்களின் வழியே நுழைந்துகொண்டு தடை பற்றவெள்ளம்போலும் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் இவ்விதமான அபிப்பிராயங்களில் "எவை தள்ளத்தக்கன? எவை கொள்ளத்தக்கன?" என்னும் விஷயத்தைப்பற்றி இப்பொழுது நாம் ஆராயப்புகாது இதனை வேறோர் சமயம் கவனித்துக் கொள்ளலாமென நினைக்கின்றோம். (சமுதாய தத்துவம் விளங்கும் போது இவைகளின் உண்மை விளங்குமாதலின், இங்கு சிறிய வாதத்தில் பிரவேசிக்கவில்லை!).

இனி இத்தருணத்தில் உலகத்தினுக்கு அத்தியாவசியகமாய் வேண்டப்படுகின்ற ஸுகவாழ்க்கையைக்கொடுப்பதும் ஸ்வயேச்சையான வாஸத்தையே மூலகாரணமாகக்கொண்டுள்ளதுமாகிய ஸமுதாய நியாயத்தைக்குறித்து இங்கு ப்ரஸ்தாபிக்கப்புகுவோமாக.

ஸமுதாயம், அநுகரணம், பரிஷ்காரம்.

உலகத்தினது எந்த பாகத்தைப்பார்த்தாலும் ஸமுதாயமென்றும், ஸங்கமென்றும் கேட்கப்படாத ராஜ்யம் வெகு துர்லபமாயிருக்கிறது. முக்கியமாய் கவனித்தால் இக்காலத்தவராகிய இந்தியர்களின் மத்தியில் இது இப்பொழுது மிகவும் வ்ருத்தியாக ஆரம்பித்திருக்கின்றது. "நாஷனல்காங்ரஸும், நாஷனல் கான்பரன்ஸும் இன்னுமிதுபோன்ற பலவும் இதற்கு திருஷ்டாந்தங்களாகும்.

இவைபற்பல சுதேச விதேச உத்யோகஸ்தர்களின் சிரத்தைகளைப்பிரத்தியேகமாய்க் கவர்ந்து கொண்டிருக்கின்றன! அன்றியும் வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம், மதம் முதலிய விஷயங்களைக்குறித்தும் (தனித்தனியே) சங்கங்கள் கூடி வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றன. ஆனால், இவை பெரும்பாலும் மேல்நாட்டவரை அனுஸரித்து நடக்கவேண்டுமென்று விரும்பி

யுள்ள இந்தியர்களின் மயக்க மாகும்'' என்பது சிலருடைய அபிப்பிராயம். இந்திய மஹாராஜ்யத்தின் ஆளுகையை ஆங்கில கவர்ண்மென்டார் 1858-ம் வருஷம் முதல் நிர்வஹிக்கத்தொடங்கினர். அதற்கு முன்பு ஸுமார் 850-வருஷகாலம்வரை இந்தியர்கள் ''அந்நிய ராஜ்யவாஸிகளுடன்'' இடைவிடாது பொருதிக் கொண்டிருந்தனர். அப்பால் இந்தியர்களுக்குத் ''தோல்வி கிடைத்துவிட்டது'' என்று நம்பிக்கைவந்தபொழுது ''அநுகூண(அநுஸரிக்கின்ற) உபாயந்தான் நல்லதும் மேன்மையதுமாகு'' மெனப் பலரும் ஆலோசிக்கலாயினர். அவ்வநுகூண புத்தி தான் இப்பொழுது இந்தியாவைப் பலமாக ஆக்கிரமித்து நிற்கின்றது.! சுடந்த 47-வருஷத்திற்குள் ''தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்'' என்றநியாயப்படி, ஏதோ சிறிது பேசத் தெரிந்தவர்கள் எல்லாம் தந்தம் வாக்கு ஸாமர்த்தியங் கொண்டு ஸமூதாயத்தைக் கை தூக்கிவிடவும் சீர்திருத்தஞ் செய்யவும் ஆரம்பித்தனர். நாம் எல்லோரும் 'ஆங்கிலேயர்களைப்போலிருக்க வேண்டுமென்' பதே இவர்களிற் பெரும்பாலாருடையவும் ப்ரஸங்கஸாரம். இவர்களில் அநேகர், ''தற்காலத்திய வஸ்த்ரமுடுத்தும் முறை, பேச்சு, ஆஹாரக்ரமம், விவாஹரீதி ஆகிய இவைகளையடியோடுமாற்றி இங்கிலீஷ்காரர்களுடைய ஸம்ப்ரதாயங்களை இந்தியர்களினிடையில் ''ப்ரதிஷ்டை'' செய்துவிடவேண்டு''மென்பதற்காக அளவற்ற ப்ரயத்நமெடுத்துக்கொள்ளுகின்றனர். இது ஸ்வல்பம் பலிக்கவில்லையென்று சொல்வதற்கில்லை.! ஆனால் ஒரு ஸமூதாயமானது, மற்றொரு ஸமூதாயத்தை ''அநுஸரித்தல் வேண்டுமெனத் துணிகின்றவிஷயத்தில் ஆழ்ந்து ஆலோசனைசெய்யவேண்டிய ஆவச்யகம் உண்டு. ஒருஸமூதாயம் அபிவிருத்தி நிலையில் வந்ததாகக் காணப்படும்பொழுது, ''அந்த ஸமூதாயத்தைப்போல நாமுமாகிவிட்டால் நல்லது'' என்று, தாழ்ந்த நிலையில் இருக்கின்றதாய்க் கருதப்படுகின்ற மற்றொருஸமூதாயம் 'மோஹிப்பது' ஸர்வ ஸாதாரணம். ஆனால், அநுஸரிக்கத்தக்கதுபோல்தோற்றுகின்ற அந்த ஸமூதாயமானது எந்தெந்த விஷயங்களில் அபிவிருத்தியடைந்திருக்கின்றதென்றும், அந்த ஸமூதாயம் தனக்கு என்ன நியமத்தை அஸ்திவாரமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது என்றும், அந்த நியமமானது ''ஸ்வல்பகாலஞ்சென்றவுடன் நஷ்டமாய்விடுவதோ? அல்லது ஸ்ருஷ்டியினுடைய முடிவு வரை நிலை நிற்கத்தக்கதோ?''

என்றும் அறிந்து கொள்ளவேண்டியதாகும். அவ்விதஞ்செய்யாது ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு ஸமுதாயக்காரர்களின் அபிவிருத்தியைக்கண்டு ப்ரமித்து; (மயங்கி) ''அநுஸரிக்குந் தொழிலைக் கைக்கொண்டால் அதுமிகவும் பாமரத்தன்மையைக் கொடுத்துப் பரிஹாஸஞ்செய்வதற்குஹேதுவாகுமேயன்றிவேறொன்றுமின்று. இதற்கு உதாரணம், இந்தியர்களின் தற்கால அநுபவமேயாம். சிறிதுகாலமாக ஆங்கிலேயர்களின்உயர்வைக்கண்டு மயங்கியவராய் ''நாமெல்லோரும் இங்கிலீஷ்காரர்களைப்போலாகவேண்டும்: நாம் எல்லோரும் சுத்தஜோப்பியர்களைப்போலாகவேண்டும்'' என்ற தீவிரமான நிஷ்டையோடி கூடிய இந்தியர்கள், இப்பொழுது ஜேர்மானியர்களின் ஜயத்தோடுசேர்ந்துகொண்டு, 'ஜப்பான்காரரைப்போலாகவேண்டும் என்று ஆரவாரிக்கத் தொடங்கி இருக்கின்றனர்.! முன்னர் ''இங்கிலீஷ்காரர்களைப்போலாகவேண்டும்'' என்றவிருதத்தில் இந்தியர்கள் எவ்வளவு பலமாய் தீவிரமாய் வளர்த்தனரோ அதில், இருநூறுபங்குமேலாய் தற்காலம் ஜப்பான்காரர்களை யநுஸரிக்க வேண்டுமென விரும்புகின்றார்கள்! (ஆக்ரஹிக்கின்றார்கள்). இந்த மயக்கந்தான் இந்தியர்களின் அதோகதிக்கு (தாழ்ந்த நிலைமைக்கு) க்காரணமாக முடிகின்ற தென்பதைக்குறித்து, 'பூர்வகாலத்தில்' நிகழ்ந்ததோர் ஸம்பவத்தை இங்கெடுத்துக் காட்டுகின்றோம்.

ஒருகாலத்தில் ''க்ரீஸ்காரர்கள்'' மிக்கமேன்மையை யடைந்திருந்தார்கள். அக்காலத்தில் அவர்களோடு எதிர்த்து ஜயிப்பதற்குப் போதுமான புத்தி ஸாமர்த்திபம் வாய்ந்த சத்துருக்கள் ஒருவருமே இருந்திருக்கவில்லை செல்வமோ, நிறைந்திருந்தது. கலைகள், தத்துவசாஸ்திரங்கள், புத்திசக்திகள் முதலிய எல்லாவிதத்தாலும் அவர்கள் மிக்க அபிவிருத்தியடைந்து விளங்கினர்கள். தற்காலத்தில் ஜப்பானியர்களைப்போல் ஆகிவிட வேண்டும் எனப்பறையறைந்து முழக்கின்ற யோக்கியர்கள் அக்காலத்தில், ''ஜீவித்திருந்தார்கள்'' என்றுவந்தால் நரம் 'எல்லோரும் க்ரீஸ்காரர்களைப்போல் ஆகிவிடவேண்டும்,' என நிச்சயமாய்க்கூறுபவராயிருந் திருப்பார்! இப்பொழுது ஜப்பானியரைப் போலாக வேண்டுமென்று கூக்குரலிடுகின்ற தற்காலத்திய வித்துவான்களின் அபிப்பிராயமானது, ''முற்காலத்திய இந்தியர்களின் மனத்

நிலுவித்திருக்கும் பக்ஷத்தில்'' இப்பொழுது இந்தியாவின் மேன்மையானது பெயர் மாத்திரமே மீந்ததாகித் தீர்ந்திருக்கும். கிரீஸ் காரர்களின் இப்பொழுதுள்ள நிலைமையைக்கொண்டு இது அநுமானிக்க (ஊஹிக்க)த்தக்கதாகின்ற தல்லவா? இன்றைய தினம் ஜப்பானிலிருந்து சில ஜனங்கள் விகார வேஷந்தரித்துக்கொண்டு இந்தியாவிற்கு வந்து ஏதேனும் சில உபதேசங்களுஞ் செய்ய முயற்சிப்பதானல், இந்தியஜனங்களால் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாய்ப்பழக்கப்பட்டுள்ள நடையுடைபாவனைகளைச்சிறிதும் பிரயாசமின்றிக்களைந்து விடுவார்களென்பதில் சொற்பமும் அதிசயோக்தி (*மிகைப்படக் கூறல்–வியப்புறக் கூறல்) உண்டெனத் தோற்றவில்லை! இன்று ஜப்பானியர்களை அமெரிக்கர்களும், நாளை அமெரிக்கர்களை ஜெர்மானியர்களும், அதற்கடுத்த நாள் ஜெர்மானியர்களை பிரான்ஸியரும், யுத்தம்முதலிய காரணங்களைக்கொண்டு ஜெயித்துவிடுவார்களாயின் நமக்கு அவர்களையெல்லாம் அப்பொழுது அநுஸரிக்க வேண்டியதாய்வரும். இவ்விதம் உலகத்திலுள்ள ஒவ்வொரு ஸமுதாயங்களுடையவும் ஜயாபஜயங்களெல்லாம் இந்தியாவிற்கு அநுஸரிக்கத் தக்கவைகளாய்த் தீர்ந்துவிடுமாயின் இந்தியாவிற்கு ''ஸ்வயபுத்தி'' அடியோடு நசித்துப்போய்விட நேரிடும்!

மேலே காண்பிக்கப்பட்ட நியாயங்களால் இந்தியாவிற்கு அந்நிய ஸமுதாயங்களோடுள்ள அநுஸரிக்கும் முறை ஸாத்யமல்லவென்பது ஸ்பஷ்டமாகும். இதனல் இந்தியர்கள் அந்நிய ராஜ்யங்களிற்சென்று தொழில்நுட்பம்முதலிய ஸம்பிரதாயங்களைப்படித்து வருதல் கூடாதென நாம் கருதுவதாகப் படிப்போர் மாறுபாடான அபிப்பிராயங் கொள்ள வேண்டாம். ஆனல் மஹாமேதாவியாகவிருக்கின்ற ஒருவனுடைய ஆசாரநடவடிக்கைகளை ஒருஸமூதாயம் முழுதும் அநுஸரிக்கலாமோ எனில், அதுவும் கூடாது. ஏனென்றல் ஒருஸமுதாயத்திற்கு வேண்டிய எல்லாபாகங்களிலும், அந்த மேதாவி பிரவர்த்திக்தல் (முயலுதல்) ஸாத்யமாகுமென்பது அஸாதாரணமாதலாலும், அல்லது அவ்விதமே ஸாத்யமாகுமெனினும், எல்லாக்காலங்களிலும் அது உசிதமாயிருப்பதில்லை. இந்த நிலைமையில்(ஸமுதாயமானது) எந்த நியாயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அனுஷ்டிக்கவேண்

டும்? என்ற பலமான ஸம்சயத்தை இவ்வு வெகுளிதாய நீக்குவதற்கு முயல்வோம். ஒருஸமுதாயத்தை நிலை நிறுத்த வேண்டுமாயின் ஸ்ருஷ்டியிடைய நியமத்தை அஸ்திபார மாகக்கிப் பலப்படுத்த வேண்டும். ஸ்ருஷ்டியின் நியாயங்கள் ஸ்ருஷ்டியுள்ள காலம்வரை சாஸ்வதமாய் (அழிவற்றதாய்) நிலைத்து நிற்பதாகும். ஆனல் ஸ்ருஷ்டியினுடைய நியாயமுழுதையுமனுஸரித்து அமைக்பட்டதுதான் மனிதனுடைய சரீரமும். ஒருசரீரத்திற்கு சுரோத்திரம் முதலிய ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்கு முதலிய ஐந்து கர்மேந்திரியங்களும், பிராணன் முதலிய பத்து வாயுக்களும், மனம் முதலிய உட்கரணங்கள் நான்கும், இவைகளுக்கு உரிய விஷயங்களும் (பொருள்களும்), ஜீவனும், ஆத்மாவும் எவ்வண்ணம் நீக்கிவிடுவதற்கு ஸாத்ய மில்லாதிருக்கின்றதோ அவ்வண்ணமே ஒருஸமுதாய சரீரத்திற்கும். கிருஷி, கைத்தொழில், வியாபாரம், ஆக்ஷி, ஆத்மக்ஞானம் முதலியன ஒழித்தற்கு ஸாத்யமில்லாதனவாம்.

ஸமுதாயத்தின் மூவிதநிலைமை

ஒரு ஸமுதாயத்திற்கு "பால்யம், யௌவனம், வார்த்தகக்கியம்" என்றும் இம்மூன்று பருவங்களிருப்பதாக வைத்துக்கொள்வோம். அதாவது; ஒருசரீரம் மாதாவினுடையகர்ப்பத்தில் பிண்டாகிருதியிலிருக்கும் பொழுது (புரோடப்ளாஸம்) என்னும் மூலப்பிராணவஸ்தையில் அதற்குஒருஸமுதாயத்தினுடைய பால்யப்பருவத்தையும், பிறந்த பின்னர் கைகால் முதலிய அவயங்களுடன் நல்ல புஷ்டியடையும் பொழுது அதற்கு யௌவனப்பருவத்தையும், அச்சரீரத்தினது அவயவங்களுக்கு இயல்பாகிய தொழில்களை அவை கிரமப்படி செய்துவருவதற்கு முடியாமற் போகுங்கால், அந்நிலைமையோடு ஸமுதாயத்தினுடைய வார்த்தகக்கியாவஸ்தையை (நோயுண்ட முதுமைப்பருவத்தை)யும் உவமித்துக்கூறலாம். இவற்றில் இப்பொழுது முதலாவது, ஸமுதாயத்தினுடைய பாலியப் பருவத்தை விவரிப்போம்.

பாலியம்

கர்ப்பத்திலுள்ளபிண்டமானது பிரகிருதி ஸாம்யத்திலும் பதார்த்தபக்குவ ஸாம்யத்திலும் இருந்துவரும் பொழுது அந்த பிண்டத்திற்கு எல்லாபாகமும்கொண்டு காண்

பதற்கும், கேட்பதற்கும், ஸ்பர்சிப்பதற்கும், சுவையறிவதற்கும் முகருவதற்கும், இங்குமங்குஞ் சலிப்பதற்கும், நடப்பதற்கும். கொடுப்பதற்கும், இன்பம் நுகருவதற்கும், மல ஜலம் விடுவதற்கும், ஆஹாரம் உட்கொண்டு ஜீரணிப்பதற்கும் (மற்றும் பல செய்வதற்கும்) ஸாத்யமாகும்.

அதாவது:- மேற்கூறிய ப்ரோடப்ளாஸ நிலைமையிலிருக்கின்ற பிண்டத்திற்கு "எல்லாபாகத்தினாலேயும் எல்லாஞ்செய்வதற்கும், எல்லாபாகத்தினாலேயும் ஜீவிப்பதற்கும். இயலுய" என்பதாம். இவ்வாறு ஒரு ஸமுதாயத்திலுள்ள எல்லா ஜனங்களும் (Division of Labour) தொழிற்பிரிவு நியாயத்தையனுசரித்து வியவசாயம் முதல் எல்லாத்தொழில்களையும் செய்வார்கள். அது எவ்விதமென்றால் 100–பேர்கூடிய ஒரு ஸமுதாயத்தில் 100-பேர்களும் வியவஸாயஞ் செய்வார்கள்; 100–பேர்களும் வியாபாரம் செய்வார்கள்; 100–பேர்களும் செருப்புத் தைப்பார்கள்; 100–பேர்களும் குடைசெய்வார்கள்; 100–பேர்களும் வஸ்திரம் நெய்வார்கள்; 100–பேர்களும் ஆகஷி புரிவார்கள். இங்ஙனம் இன்னும் அந்த ஸமுதாயத்திற்கு எவை யெவை தேவையாயிருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் ஒவ்வொருவரும் செய்துகொண்டு ஜீவிப்பார்கள். இந்நிலைமைதான் ஸமுதாயத்தினுடைய "பால்யாவஸ்தை" (Savage Condition)யென்று சொல்லப்படும்.

யௌனம். இனி யௌவனதசையை நாடுவோம். ஸ்ருஷ்டியின் இயல்பான நியாயவிசேஷத்தால் எல்லா பாகங்களைக் கொண்டும் பார்த்தல், கேட்டல், முதலிய எல்லாத்தொழில்களையும் அனுஷ்டித்துக்கொண்டுவந்த அந்த கர்ப்ப பிண்டமானது, ஒவ்வொரு அங்கமாகத் தனித்தனியே பிரிந்து க்ரமமாய் (வரவர) புஷ்டியடைந்து பிறக்கும்பொழுது "மூறையே நேத்ரேந்ரிய மாயும், சுரேத்ரேந்ரியமாயும், துவக்கிந்ரியமாயும், கிர ணேந்ரியமாயும், வாக்காயும், பாதமாயும், பாணியாயும், குதியாயும், குதமாயும், வயிறுயும், உருவம் பெற்று, சரீரப்பாதுகாப்பின் பொருட்டு அவ்வவற்றின் தொழில்களை இயல்பாகவே அவையவை செய்ய ஆரம்பிக்கும். இவ்விதமாகவே 100–பெயர்கள் கூடிய ஒரு ஸமுதாயத்தில் எல்லோரும், வியவஸாயமும்

வியாபாரமும் கைத்தொழிலும் ஆகியும் ஆத்மோபதேசமும் செய்துகொண்டிருந்தது நீங்கி, வியவஸாயப்பிரிவு நியாயத்தை அனுஸரித்து வியவஸாயஞ்செய்வதற்கும், வியாபாரஞ்செய்வதற்கும், சேருப்புத்தைப்பதற்கும், வஸ்திரம் நெய்வதற்கும், ஆகி புரிவதற்கும், பிரஹ்மோபதேசஞ்செய்வதற்குமாக வியவஸாயியாயும், வைசியனுயும், செம்மானுயும், சாலியனுயும், க்ஷத்திரியனுயும், பிராஹ்மணனுயும் ஆகிவிட்டனர். இந்நியமத்தோடு கூட அவரவர்க்கும் சுமத்தப்பட்டிருக்கின்ற தொழில்களே கிரமமாகநடத்தி வருகின்ற ஒருஸமுதாயத்தினுடைய நிலைமைதான் "ஸமுதாயத்தின் பௌவனுவஸ்தை (Civilised Condition)" யென்று சொல்லப்படும்.

அநாரோக்கியம் (சுகமின்மை,)

இனி ஸமுதாயத்தினுடைய வார்த்தக்கியாவஸ்தையை அதாவது- சோகாவஸ்தையை (Deceased Condition) ஆராய்வோம். நல்ல வாலிபப்பருவம் வாய்ந்த ஒருமனிதன், தனது கைகால் முதலிய அவயவங்களினுலும் மனம், முதலிய ஸூக்ஷ்மேந்திரியங்களினுலும் கிரமமாயும் யதொருமுயற்சியுஞ் செய்யாமலும், சரீர தர்மத்திற்கு அநுகூலமான ஆஹாரம், —விஹாரம்—சரீப்பயிற்சி முதலியவைகளே ஒரு நியமத்தோடு அனுஷ்டித்து வராமலும், சரீரப்பாதுகாப்பிற்கு விரோதங்களாகிய செயல்களைக்கைக்கொண்டும் இருப்பானுயின் அவனே ரோகமானது (வெகு) விரைவில் பிடித்துத் துன்புறுத்தி அவனே "ஸ்வயகாரியத்தைக்கூட நிர்வஹிப்பதற்குச் சக்தியிழந்தவனுக்கித் தீர்த்துவிடும். இந்த நிலைமைதான் மனிதனுடைய முதுமைப்பருவம்— நோயுற்றபருவம்—என்று அறியத்தக்கதாம். ஒரு ஸமுதாயத்திலுள்ள வியவஸாயவிபாக நியாயத்தால் ஒவ்வொரு ஜாதிகளென்று பெயரிட்டழைக்கப்படுகின்ற "கர்ஷகன் (வியவஸாயி), வைசியன், செம்மான், சாலியன், க்ஷத்திரியன், பிராஹ்மணன் முதலானவர்கள், தாங்கள் ஒவ்வொருவரும் செய்யத்தக்க தொழில்களேவிட்டும் ஒருவர் மற்றொருவருடைய தொழிலில் பிரவேசித்தும் ஒருவருக்குள்ள பாத்தியதையைமறந்து தொழில் செய்யாதிருந்தும் தாழ்ந்த நிலைமையடையும் பொழுது, அன்னவஸ்திரமுதலியனவும், மற்றும் போதுமானவரை நன்முகக்கிடைக்கப் பெறுதவர்களாகி, ஒருவருக்கொருவர்

சண்டையிட்டுக்கொண்டு அதனால்ஸமுதாயசக்தி அழிந்துபோகும். இதுதான் ஸமுதாயத்தினுடைய முதுமைப்பருவம் (பிணியுண்ட நிலைமை) என்றுசொல்லப்படும்.

ஸமுதாயத்தின் சிரஜீவித்துவம். மேலே தெரிவித்துள்ளபடி ஒரு சரீரத்தையும் ஒரு ஸமுதாயத்தையும் ஒன்றுக்கொன்று ஸாதிருசியப்படுத்திக்காட்டியதுகொண்டு சரீரத்தினுடைய "இளமை, வாலிபம், முதுமை" ஆகிய இக்காலங்களின் வரையிலேயே ஒரு ஸமுதாயமும் வாழுமென்று ஒருவரும் கருதவேண்டாம்.

ஒரு மனிதனுக்கு நூறு வருஷமாகும்பொழுது கிழமையும் ஸாசமுமுண்டாகும். அவ்விதமே நூறு பெயர் கூடிய ஒரு ஸமுதாயத்திற்கு 100-வருஷமாகும் பொழுது "கிழமை வந்தது" என்றுவரும். அப்பொழுது அந்நூறுபெயர்களின் புத்திரர்களும் வாலிபப் பருவத்தில் வந்து விடுவார்கள். அப்புத்திரர்களுக்கும் முதுமை வருங்கால் அவர்களின்புதல்வர்கள் "நல்ல யௌவனர்களாகி" விடுவார். இவ்விதமாகப்பார்க்கும்பொழுது ஒரு ஸமுதாயத்தினுடைய கிழப்பருவமானது "ஸ்ருஷ்டியினுடைய முடிவுகாலத்தில் தான் வரும்படி" நேருமென அறியவேண்டியதாம்.

ஆனால், ஒருவனுக்குத்தன்னுடையவாலிபதிசையில்(ஸ்ருஷ்டியின் மத்தியகாலத்தில்) சரீரத்தொழில்களை நடத்துவதற்கியலாதுபோகுமேல், அவனுக்கு ரோகமுண்டாயிருக்கின்றதென்று தீர்மானஞ்செய்யவேண்டியதாகும். அதுபோலவே ஒரு ஸமுதாயத்தினுடைய "வார்த்தாக்கியாவஸ்தை" — கிழப் பருவம், என இங்கு கூறியுள்ளதை "—ரோகாவஸ்தை—நோயுற்ற காலம்" எனத்தீர்மானித்துக்கொள்ளவேண்டும். கிழமையைநீக்கவேண்டிய ஔஷதமும் கொள்ளுதல் ஆவசியகம், என்பது அஸாதாரணமன்றே? இங்குக்கூறிய காரணத்தால் ஸமுதாயத்தின் பாலிய யௌவன ரோகதசைகள் இன்னவை என்பதும், ஸமுதாயம் ஸ்ருஷ்டியின் நியமத்தை அடிப்படையாகி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகுமென்பதும் நன்கு விளங்குகின்றதல்லவா?

ஸமுதாயத்தை உத்தாரணஞ் செய்யத்தக்க மூன்று உபாயங்கள்.

ஒருஸமுதாயத்தை மேன்மைக்குக் கொணர்ந்து விருத்திசெய்யவேண்டுமென விரும்புகின்ற ஒருவன், அந்த ஸமுதாயமானது மேலே விவரிக்கப்பட்ட மூன்று நிலைமையில் "எந்தநிலைமையடைந்திருக்கின்றதென்"பதையல்லவாமுதலில் அறிந்துகொள்ளவேண்டும்? இந்ததத்துவத்தை யுணராது "இதோபரிஷ்காரஞ்செய்யப்போகிறேன்" எனக்கூறி மேளங்கொட்டுவது வீண் பரிஹாஸமாகவல்லவோ முடியும்? ஒரு ஸமுதாயத்தை அபிவிருத்திக்குக்கொண்டு வருவதற்கு மூவித உபாயங்களுண்டு. அவையாவன:–

1. பரிஷ்காரணோபாயம்,
2. பரிபாலனோபாயம்,
3. உத்தாரணோபாயம்.

இவற்றில்முதலாவது பரிஷ்காரணோபாயமாகியசீர்திருத்தமுபாயம் ஒரு ஸமுதாயத்தினுடைய இளம்பருவத்திலும், இரண்டாவதாகிய உத்தாரண (கைதூக்கிவிடும்) உபாயம் நோயுண்டபருவத்திலும் உபயோகிக்கவேண்டியதாகும். கிழமையை நீக்கலாமென்பதைப் பற்றியும்– அதற்காகக் கையாளவேண்டிய சுக்கிய வழிகளையும், ஔஷதங்களையும், ஸ்வாமிகள் எழுதியிருக்கின்ற "மரணத்தைத் தடுத்தல்" என்னும் புத்தகத்தில் தெளிவாய்க்காணலாம். அவ்விதஞ் செய்யாது "தோன்றியவாறு உபாயப்பிரயோகஞ்செய்தால்" அது அபாயப்பிரயோகமாகவே (விபரீதமாகவே) முடியும்!

ஹிந்து ஸமுதாயத்தின்தற்கால நிலைமை.

இனி,நமது இந்திய ஸமுதாயம், மேற்கூறப்பட்ட மூன்றுநிலைமைக்குள் எந்தநிலைமையிலிருக்கின்றதென்பதைக்கவனிப்போம். எல்லாந்தொழில்களையும் அவரவர்கள் (தங்கட்குத்தாமே) செய்துவருவதாகக்காணப்படாததால் இது இளம்பருவமல்ல. குறித்தஸமுதாயத்திற்கு ஆவசியகமாயுள்ள கிருஷி, கைத்தொழில், வியாபாரம், ஆகஷி, ஆத்துமோபதேசம் முதலியவை, தொழிற்பிரிவுநியாயத்தையநுஸரித்து ஏற்படுத்தப்பட்டனவாய்க் காணப்படுகின்றன. என்றாலும், "நோயாளிக்குவைத்தியன் தேவை" என்பதுபோல் வெளிநாட்டு ஸமுதாயங்களின் அபேக்ஷையானது ஹிந்துஸமுதாயத்திற்கு இன்றியமையாததாய் வந்திருக்கின்றது. அந்த

அந்தத்தொழில்களை நிறைவேற்றக்கடமைப்பட்டவர், அவரவரின் பாத்தியதையை நேர்மையுடன் நிறைவேற்றுமலும் ஸமுதாயத்தினுடைய வரவு செலவு (Supply and demand) பண்டமாற்று செல்வத்தின் உற்பத்தி விநியோகம், கைமாற்றம், (Production, distribution and Exchange) என்னும் இவைகளின் நியாயங்களை ஸூக்ஷ்மமாய் கரஹித்துச்செய்து கொள்ளாமலும் விபரீதமாய் முயற்சித்துக்காலக்ஷேபஞ்செய்துகொண்டும் வருவதனால் வறுமை (தரித்திரம்) மஹாவியாதி (பெருநோய்), அற்பாயுள், உடல்மெலிவு முதலிய கொடுந்துன்பம் இப்பொழுது ஸமுதாயத்தைப் பீடித்துவருவதாய்க்காணப்படுகிறது. அதனால் ஹிந்துஸமுதாயம் இப்பொழுது பால்யவெளவன தசைகளிலல்ல இருப்பது; ஆனால் "நோயாளிநிலையிலாகும்" என, விசேஷமாய்க்கூறவேண்டியதில்லையல்லவா?

சோகாவஸ்தையிலிருக்கிற ஸமுதாயத்தை அபிவிருத்திசெய்வதற்கு உத்தாரணோபாயமே உரியதாகுமென முன்னர்விவரித்திருக்கின்றோம். ஹிந்துஸமுதாயத்தினுடைய "உத்தாரணம்—கைதூக்கிவிடல்" இக்காலத்தில் இன்றியமையாதகாரிய மாதலால் இவ்விஷயத்திலாவலுள்ள ஸர்வஜனங்களாலும், அடியில்விவரிக்கின்றலக்ஷணங்கள் "ஞாபகத்திற்"கொள்ளத்தக்கனவாகும்.

அவரவரின்ஸ்தானத்தில்அவரவர் சிரேஷ்டர்.

ஒருசரீரத்தில் 'காது' கேட்பதிலும், 'கண்' பார்த்தலிலும், 'மெய்' தீண்டுதலிலும், 'நாக்கு' சுவையறிதலிலும், 'மூக்கு' முகர்வதிலும், 'வாக்கு' பேசுவதிலும், 'கை' கொடுத்தலிலும், 'கால்' நடத்தலிலும், 'மறைவானது' மூத்திரவிஸர்ஜனஞ்செய்வதிலும், 'குதம்' மலங்கழிப்பதிலும், 'பிராணன்' உன்மூச்சு வெளிமூச்சுவாங்குவதிலும். 'மனம்'ஸங்கல்பம் செய் (எண்ணு) தலிலும், 'சித்தம்', ஆலோசிப்பதிலும், 'புத்தி' நிச்சயிப்பதிலும், 'அஹங்காரம்' அபிமானிப்பதிலும், 'ஜீவன்' பந்தமோக்ஷமடைவதிலும், 'ஆத்மா' நித்தியனுபவிப்பதிலும் ஒரேமாதிரியாக சிரேஷ்டங்களாகின்றன. மேற்கூறப்பட்டனவற்றுள் அதன் ஸ்தானத்தில் 'அதற்குள்ள சிரேஷ்டத்துவம் போல்' மற்றொன்றினுக்குமில்லை. கண்ணிற்குக் கேட்பதற்கும், காதிற்குப்பார்ப்பதற்கும், முடிவதில்லை! அதனால் தான் அததன் ஸ்தானத்தில் அததற்கு இவ்வளவு சிரேஷ்டத்து

வம்சற்பிக்கப்பட்டது. இவ்விதமாக எல்லாம் ஒரேசிரேஷ்டத் தன்மையோடு கூடியவையாகின்றன. அதுபோலகிருஷிகன் 'கிருஷியிலும்' வைசியன், வியாபாரத்திலும், 'சாலியன்' வஸ்திரம் நெய்வதிலும், 'செம்மான்' (சக்கிலியன்) செருப்புத் தைப்பதிலும், 'கூத்திரியன்' ஆக்ஷிபுரிவதிலும், 'பிராஹ்மணன்' பிரஹ்மோபதேசஞ்செய்வதிலும் ஒரேவிதமாய்சிரேஷ்டராவர். செம்மான்மார்க்குவஸ்திரம் நெய்தற்கும், சாலியர்களுக்கு செருப்புத்தைப்பதற்கும் தச்ச ஆசாரிகட்குப்பொன்வேலை புரிவதற்கும், தட்டான்மார்க்குமரவேலை செய்வதற்கும் ஸாத்யப்படுவதில்லை. செருப்புத்தைக்கிற விஷயத்தில் செருப்புத்தைக்குஞ்செம்மானுக்கிருக்கின்ற அளவுசிரேஷ்டத்துவம், ப்ரஹ்மோபதேசஞ்செய்கிற ஒருபிராஹ்மணனுக்கில்லை. வஸ்திரம் நெய்கின்றசாலியர்க்குள்ள சிரேஷ்டத்துவம் அவ்விஷயத்தில், அரசாக்ஷிபுரிகின்ற ஒருகூத்திரியனுக்கில்லை. இவ்விதமாகவே எல்லோரையும்அறிந்துகொள்ளவேண்டும்.

ஸமூதாயத்தின் விபாஜ்யதசை (பிரிக்கத்தக்க நிலைமை)

ஒருஸமுதாயம் பால்யதசையிலிருக்கும் பொழுது அதனைப்பிரிக்கலாம். கர்ப்பபிண்டம் பதார்த்த பக்குவஸம்பியத்திலிருக்கும் பொழுது அதன் எல்லாபாகங்கொண்டு எல்லாஞ் செய்வதற்கும் ஜீவித்திருப்பதற்கும் முடியுமென முன்னரே சொல்லப்பட்டிருக்கின்ற தல்லவா? அந்தகர்ப்பபிண்டத்தை எவ்வளவுபாகங்களாக்கின்றோமே அவ்வளவு சரீரங்கள் பூரண அவயவங்களோடுகூடஉண்டாகிவிடும். திருதராஷ்டிர மஹாராஜாவின் பத்தினியாகிய 'காந்தாரீ' பிரஸவித்த மாம்ஸபிண்டத்தைத் துண்டித்துத்தனித்தனியே காப்பாற்றிவைத்ததாகவும் அப்பிண்டங்கள் துரியோதனன் முதலியோராகிவிட்டதாகவும் கூறுகின்ற இதிஹாஸ விருத்தாந்தம் இங்குதிருஷ்டாந்தமாகும். அன்றியும் *''சர்வார்த்தசித்தி'' என்னும்அரசனது, போகஸ்திரீயாகிய ''முரை'' என்பவள் ''மௌர்யனை''ப்பெற்றவுடன், பூரணகர்ப்பவதியாயிருந்தவளும் சர்வார்த்தசித்தி அரசனது பட்டமஹிஷியுமாகிய சுநந்தைஎன்பவன் தனக்கு இன்னும் குழந்தைபிறக்கவில்லையென வருத்த முற்று உலக்கையினால் இடித்துக்கொள்ளவே அப்பிண்டமானது ஒன்பது மாப்ஸத்துண்டுகளாக விழுந்தன அதனையறிந்த ''ராக்ஷஸன்'' என்னும் மந்திரி, அவைகளைத்தனித்

தனியே ஒருவித நெய்யில் வைத்து வளர்த்துவரச்செய்து அப்பாலவ்வொன்பது பிண்டங்களே "நவநாத்தர்களாயின" வென்பதும் பிரத்தியக்ஷநிருஷ்டாந்தமாகின்றது. அதுபோலவே மூன்புவிவரிக்கப்பட்டபடி பால்ய லக்ஷணத்தோடுகூடிய ஒருஸமூதாயத்தையும் அநேக பாகங்களாகப்பிரித்துவிடலாம். இவ்விதஞ்செய்வதனால் குறிப்பிடத்தக்கபடி நஷ்டங்களொன்றும் ஸம்பவித்துவிடுவதற்கில்லை. எவ்விதமென்றால், வஸ்திரம்நெய்வதற்கும், வியவசாயஞ் செய்வதற்கும், செருப்புத்தைப்பதற்கும், அரசாக்ஷி புரிவதற்கும் ஆத்மோபதேசஞ்செய்வதற்கும் எல்லோருமறிந்தவர்களாயிருக்கின்ற ஒருஸமூதாயத்தினின்றும் ஏதோசிலர் தனியே பிரிந்து போனதனாலோ, அல்லது அந்தஸமூதாயம் தானாகவே பலபாகங்களாகப்பிரிக்கப்படுவது கொண்டோ, ஒருவர்க்கொருவர் எதிர்த்துச்சண்டையிட்டுப்போனதினாலோ, மேற்படி ஸமூதாயத்திற்கு யாதொருகுற்றமும் சேரிடுவதில்லை. இதற்குக்காரணம் "ஸமூதாயம் பால்யதசையிலிருக்கிறது" என்பதாகும்.

ஸமூதாயத்தின் அவிபாஜ்ய தசை. (பிரிக்கமுடியாத நிலைமை)

ஒருஸமூதாயத்தினுடைய யௌவனதசையில் அதனைப்பிரித்தற்கு யாத்யப்படுவதில்லை. கர்ப்பபிண்டமானது கை கால்முதலிய அவயவங்களோடுகூடப் பிரஸவிக்கப்பட்டபின்னர், அதனை ஒருக்காலும் பிரிப்பதற்குமுடியாது. கை கால் தலை இடுப்பு முதலிய (அதனது) அங்கங்களைப்பிரித்தால் (துண்டுதுண்டாகக்கண்டித்தால்) அந்த க்ஷணத்திலேயே அச்சிசு இறந்துவிடும். அன்றியும், கைகால் முதலிய அவயவங்கள் சரீரஸ்தானங்களில் நின்றும் வேறுபட்டு, அவை தனித்தனி அவயவங்களாகவோ அல்லது தனித்தனி சரீரங்களாகவோ ஜீவித்திருப்பதற்கு முடியாது!.

அதுபோலவே, தொழிற்பிரிவு நியாயமுறைப்படிப்ராஹ்மணஸமூதாயம், க்ஷத்திரியஸமூதாயம், வைசியஸமூதாயம், சூத்ரஸமூதாயம், நாயர்ஸமூதாயம், புலையர்ஸமூதாயம் என்று பேர்கொண்டோ மற்றும் பலபெயர்கள் தரித்தோ தனித்தனியே ஸமூதாயங்களுண்டாகி உயிர்வாழ்வதற்கும் முடியாது. செவி, மெய், கண், நாக்கு, மூக்கு இவைகட்கும், வாக்கு, கை, கால், குதம், குஹ்யம் ஆகிய இவைகட்கும் சரீரநியமத்தையனுஸரியாது (தள்ளிவிட்டுத்)

தனித்"தனியே பிரிந்து ஜீவிப்பதற்குமுடியும்" என்றால், மேற் சொல்லப்பட்ட பிராஹ்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூழவர், நாயன்மார், புலையர் முதலானவர்க்கத்தினர்க்கும் இந்திய ஸமுதாய நியமத்தைத்தள்ளிவிட்டுத்தனித்தனியே ஜீவித்திருக்கமுடியும். இது ஸ்ருஷ்டியின் நியமத்திற்கு மூற்றிலும் விரோதமாகுமென்பது ஸ்பஷ்டமாகையால், மேற்புகலப்பட்ட பிரத்தியேகஸமுதாயங்கள் ஸ்ருஷ்டிகோடியில் நிலைபெற்று நிற்கின்றவையல்ல; ஸ்ருஷ்டிகோடியில் நிலை நிற்காத ஸமுதாயத்தினால் ஸ்ருஷ்டியுள்ள காலம் வரை ஒருவருக்கும் உபயோகப்படுவதுமல்ல. இதனால் தான் ஒரு ஸமுதாயத்தை ஸ்தாபிப்பதானால் ஸ்ருஷ்டியினுடைய நியமத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்தாபிக்க வேண்டும், என முதன்முதலிலேயே பிரஸ்தாபித்தோம்.

ஸமுதாயத்தின் அங்க அங்கித்தன்மை.

மேற்சொல்லப்பட்டநியாயங்களால்இப்பொழுது இந்திய ஸமுதாயத்தில் என்ன என்ன ஜாதிப் பிரிவுகள் காணப்படுகின்றனவோ அவையவையெல்லாம் ஸமுதாயமாகிய சரீரத்தினுடைய அவயவாதிகளெனக்கருதி முயற்சிக்கவேண்டியதாகுமென்றும், அவ்விதஞ்செய்யாவிடில்— (தனித்தனி ஸமுதாயங்களாகுமேல்) ஸமுதாய நியாயங்கள் ஸ்ருஷ்டி நியாயத்தோடு பொருந்தாத காரணத்தினால் ஸ்ருஷ்டி கோடியில்நின்றும் அவைதேய்ந்து போவதற்கும், அவயவாதிகள் நசிக்கும்பொழுது அவயவியாகிய சரீரமும் நஷ்டமாகிப்போவதுபோல, ஹிந்து ஸமுதாயமும் ஸ்ருஷ்டியில் நின்று கிரமமாகத்தேய்ந்து போகுமெனவும் நிரூபித்தோம்.

ஸமுதாயங்களின் பரஸ்பர ஸஹாயம்.

ஒருசரீரத்தினுடைய அவயவங்களில் ஒன்றாகிய கண்ணில் ஒரு ரோகமுண்டாயிற்றென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால், பிணிவாய்ப்பட்டிருக்கின்ற கண்ணிற்கு சுயமே—— தனக்குத்தானே— மருந்துதேடி உபயோகித்து வியாதியை ஸ்வஸ்தஞ் செய்து கொள்ளுதற்கு முடியாதல்லவா? ஆகவே, சரீரத்தினுடைய மற்ற எல்லா அவயவங்களும் ஒன்று சேர்ந்து கொண்டு, முயற்சித்துக்கண்ணையைச் சமனஞ்செய்யும். அதுபோல, ஹிந்துஸமுதாயசரீரத்தினுடைய அவயவங்களில்

ஒன்றுபட்ட புலையர் வர்க்கத்திற்கு நாசமோ அல்லது ஈழவர்வர்க்கத்திற்கு ஆபத்தோ உண்டாகுமானால் அப்பொழுது அவர்களால் தமக்குத்தாமே அவைகளை நிவர்த்திசெய்து கொள்ளல் முடியாது. மேற்படி அபாயத்திற்குட்படாத ஸமூதாய சரீரத்தினுடைய "பிராஹ்மணர், க்ஷத்திரியர் வைசியர்" முதலிய வர்க்கத்தினராகிய மற்ற எல்லா அவயவங்களும் கூடச்சேர்ந்து ஒன்றுகி (புலைய ஈழவர்க்கக்காராகிய) அவயவங்களை இரக்ஷிக்கவேண்டியதாகும்.

ஒரு வர்க்கத்திற்கு ஸகாயஞ்செய்தல் ஸமுதாயத்திற்கே ஸகாயஞ்செய்ததுபோலாகும்.

இந்திய ஸமுதாயத்தில் ஒரு வர்க்கக்காரர் மற்றொரு வர்க்கக்காரருக்கு ஸஹாயஞ்செய்வதாலும் அந்த ஸஹாயமானது, குறித்த ஸமுதாயத்திற்குட்பட்ட எல்லா வர்க்கக்காரர்களுக்கும் தனித்தனியே ஸஹாயஞ் செய்யப்பட்டதாகக் கருதவேண்டும். இந்த சூக்ஷ்மதத்துவத்தை யறியாததால்தான் தற்காலம் பிராஹ்மணர்களும், நாயன்மாரும், ஈழவரும் மற்ற வர்களுமாகப் பரஸ்பரம் கலகமிட்டு வருகின்றார்கள். எவ்விதமென்றால் "பிராஹ்மண வர்க்கமானது புலையர் வர்க்கத்திற்கு உதவி செய்தது" என்றிருக்கட்டும். அப்பொழுது நாயர்வர்க்கமும் ஈழவர் வர்க்கமும் சாலியர் வர்க்கமும் தட்டார் வர்க்கமும் இன்னும் மற்ற வர்க்கங்களும் பிராஹ்மண வர்க்கத்தைப்பார்த்து நிந்திக்கத் தொடங்குகின்றது. "பிராஹ்மணர்கள் புலையர்க்கு ஸஹாயஞ்செய்கின்றார்கள். அவர்களுக்குப் புலையர் பேரில்தான் அதிகப்பிரியம். நாயர், ஈழவர் முதலியோராகிய நமக்குப் 'பிராஹ்மணர்கள் ஏதேனும் ஸஹாயஞ் செய்கின்றார்களா?' நம்மீது பிராஹ்மணர்களுக்குக் கொடிய விரோதமுண்டு, நம்மைக்கொன்று போடுவதற்குக்கூட அவர்களுக்கு இஷ்டந்தான். இது இன்று நேற்று உண்டானதா? அல்ல; பண்டைக்காலமுதலே இருந்துவருகிறது! பிராஹ்மணர்களும் புலையர்களும் ஒன்றுசேர்ந்து விட்டார்கள்! இதனால் அவர்களுக்கு ஜாதிப்பிரஷ்ட தோஷங்கூடச் சொல்ல வேண்டியதுதான். அவர்கள் பணத்தைக்கண்டு மோஹித்துப் பிரவர்த்தி செய்கின்றவர்கள். நாம் பிராஹ்மணர்களுக்கும் புலையர்களுக்கும் யாதொரு உதவியும் செய்தல் கூடாது. சத்துருக்களுக்குச் செய்

கின்ற உபகாரம் "பாம்பிற்குப் பால்வார்த்து விஷத்தை வளர்ப்பது போலாம்". இதுதான் நாயர், பிராமணர் முதலியோர், ஈழவர்க்கும் புலையர்க்கும் சகாயஞ்செய்வதால் வருகின்ற பலன்.

ஆனால் இதில் எவ்வளவுதூரம் நியாயமுண்டென்று ஸ்ருஷ்டியின் நியமத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு நோக்குவோம். இப்பொழுது சரீரத்தினுடைய அவயவங்களில் ஒன்றுகிய வயிற்றிற்கு ஒரு பலமான ரோகமுண்டாயிற்று என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் உடனே கையானது மருந்து சேகரித்துக்கொடுத்து ரோகத்தைச்சமனஞ்செய்து விடுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வயிற்றிற்குச் செய்தது போல மற்றெல்லா அவயவங்கட்கும் கையானது பிரத்தியேகமாய் ஔஷதம் கொடுத்து ஸுகப்படுத்தியது எனக்கருதவேண்டும். ஏனென்றால் வயிற்றிலுண்டான ரோகமானது விருத்தியாகும்பொழுது சரீரம் முழுதும் மஹா கஷ்டஸ்திதிக்கு வந்துவிடும். சரீரத்தினுடைய இந்த நிலைமையானது, சரீரநியமத்துடன் ஸம்பந்தித்திருக்கின்ற எல்லா அவயவங்களையும் பாதிக்கும். வயிற்றிற்கு ஸுகமுண்டானால் சரீரத்திற்கும் அதன் எல்லா அவயவங்களுக்கும் தனித்தனியே ஸுகமுண்டாகின்றது. ஆதலால் வயிற்றிற்கு மருந்தளித்து உதவிசெய்த அக்கையானது தனக்கும் மற்ற எல்லா அவயவங்கட்கும் தனித்தனியே ஸகாயஞ்செய்ததாய் அறிந்து கொள்ளல் வேண்டும். மேற்சொல்லப்பட்ட நியாயங்களால் கையானது (அந்தரங்க) ஸ்நேகத்தால் வயிற்றிற்கு ஸகாயஞ்செய்தது என்றுவது, வயிற்றினிடத்தில் லஞ்சம் (கைக்கூலி) வாங்கிக்கொண்டது என்றுவது, மற்றுள்ள காது, முதலிய அவயவங்களோடு பகையுண்டு என்றுவது, உதரத்திற்கு உதவி செய்ததகையானதால் அதற்கு மற்ற அவயவங்கள் யாதொரு குணமுஞ்செய்வதில்லை யென்றுவது, உதர நோய்க்கு ஸகாயஞ்செய்த கையானதால் அதற்கு ஜாதிப்பிரஷ்டம் வந்துவிட்டதென்றுவது, சிரசு முதலிய அவயவங்களாகிய நமக்கு யாதொரு உபகாரமுஞ் செய்யாமல் உதரத்திற்கு மாத்திரம் உபகாரஞ்செய்த நம்முடைய சத்துருவாகிய கைக்கு குணஞ்செய்து வருவது "பாம்பிற்குப் பால்வார்ப்பது போலாகும்" என்றுவது, அவ்வவயவங்கள் நினைப்பதுண்டோ?

இந்த நியாயங்களால் இந்திய ஸமுதாயத்தில் ஒருவர்க்கமான (வகுப்பான) து, மற்றோர் வர்க்கத்திற்கு உதவி செய்தும் நேசித்தும் வந்தால் அது, மற்ற எல்லா வர்க்கத்தினரையும் தனித்தனியே உதவி செய்ததற்கும் நேசித்ததற்கும் ஸமமாகுமென நிரூபித்திருக்கின்றோம்.

தாழ்ந்த ஜாதியிலுட்பட்டவரைக் கண்டு தூரவிலகுதலும் * தீண்டல் முதலிய காரணங்களால்தள்ளிவைப்பதும் ஸமுதாயத்திறகு ஹானிகரம்

புலையர் பரையர் முதலியோர் நீச ஜாதிகளாவர். அவர்களுக்கு வெகுதூரம் தீண்டலுண்டு. அவர்களைக் கண்டாற்கூடத் தலை முழுகல் வேண்டும். அவர்களுடுத்தியுள்ள ஆடைகள் மிக்க அழுக்கடைந்தவைகளாயும் துர் நாற்றத்தோடு கூடிய வைகளாயுமிருக்கின்றன. அவர்களின் ஆகாரமோ வெகு அருவருப்புள்ளது. வாஸஸ்தலத்தைப்பற்றிப் பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டியதில்லையல்லவா? அவர்கள் இந்திய ஸமுதாயத்திற்கு உள்பட்டவர்களென்று சொல்வது கூட நமக்கு மிக்க அவமானமாகும். அவர்களுக்கு இஷ்டமுள்ள ஸமுதாயத்திற் போய்ச்சேர்ந்து கொள்ளட்டும். அதனால் நமக்கு யாதொரு நஷ்டமும் வரப்போவதில்லை. நம்முடைய வேலைகளுக்கு அவர்களில்லாவிட்டால் வேறே மனிதர்களுண்டு. அவர்கள் மஹாபாபிகளாக இருந்ததனாலல்லவா நீச ஜாதியிற் போய் பிறந்தனர். அவர் பிராஹ்மணராகவாவது அல்லது க்ஷத்திரியராகவாவது, மற்றுமுள்ள எந்த மேல் வகுப்பினராகவாவது பிறந்திருக்கலாகாதா? அவர்கள் நமக்கெதிரே துணிக்குடை பிடிக்க ஆரம்பித்து விட்டனர்!. வெள்ளைத்துகிலுடுத்தவுந் தொடங்கிவிட்டனர்! இதெல்லாம் காலக்கொடுமையினாலுண்டான வைபவம்!" என்றும் மற்றும் பலவாறு செய்கின்ற ஸம்பாஷணைகள் முழுதும், புலையர் முதலிய வர்க்கக்காரர்களின் செவிகளில் தழைய ஆரம்பித்து வெகு காலமாகிவிட்டதனால் அவர்களில் பெரும்பாலாரும் இதன் பரிகாரத்தை விரும்பியும் தமது வர்க்கத்தவரின் தற்காப்பிற்கு வேண்டியும் "கிறிஸ்தவர், மஹமதியர்,, முதலிய ஸங்கங்களில் சேர்ந்து கொண்டு விட்டனர். மீதியுள்ளவர்களும் ஹிந்து ஸமுதாயத்தை உதறி எறிந்துவிட்டு இதோ வெளியேருவதற்காகத் தயாராக இருக்கின்றனர்!. தீண்டலும் அசுத்தியும் விகாரரூபமுண்டென்று

* இதனைப்பற்றிய ரகசியங்கள் இந்துமதஸம்ரக்ஷணம் என்ற புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஊஹிக்கப்படுகின்ற இவர்கள் பிரிந்து போவதனால் ஹிந்து ஸமுதாயத்திற்கு நாசம் எவ்விதமாய்ச் சம்பவிக்குமென்பதை இதனடியில் விவரிப்போம். சரீரத்தினுடைய எல்லா அவயவங்களிலிருக்கும் மல விஸர்ஜன வழியாகிய குதமானது எவ்வளவு அசுத்தமேறியதாயிருக்கின்றது? அதைத்தொட்டுவிட்டால் அக்கணமே தண்ணீர் கொண்டு கைகழுவிச் சுத்தஞ்செய்தல் வேண்டும். அது மஹா துர்நாற்றமுள்ளதாகும். அழகோ, ஒரு லவலேசமுமில்லை! இவ்வளவு அசுத்தமாகிய குதத்தை நம்முடைய யோக்கியதை பொருந்திய சரீரத்தினுடைய அவயவங்களில் ஒன்றாய் எண்ணுவதுதான் சரீரத்தினுடைய ரஸிகத்தன்மைக்கு ஒரு பெருங்கேடாகின்றது. அதனுடைய பாவத்தன்மையினாலல்லவா அது இவ்விதமாயிற்று? அது, கண்ணாகவோ அல்லது மூக்காகவோ உற்பத்தியாயிருக்கக்கூடாதா? அது அதற்கிஷ்டமுள்ள இடத்திற்குப் போய்க் கொள்ளட்டும். அது போனால் நமக்கு வேறு அவயவங்களில்லையா? குதம் நமக்குப்பயந்து நடக்கின்றதா? நம்மைப் பெருமையாக நினைக்கின்றதா?

அதற்கு வெள்ளைத்துகிலுடுத்தவதேனோ? இதெல்லாம் கலிகாலத்தினால் விளைந்த அனர்த்தமல்லவா? இனி, குதத்தையறுத்துதூர எறிய வேண்டியதுதான்,, என்று இங்ஙனம் உலகத்தில் எவரேனும் எண்ணுகின்றவருண்டோ? பெரும்பாலும் இரார்! ஆனால் அவ்விதமே ஒருவரிருப்பதாக வைத்துக்கொள்வோமே. அப்பொழுது குதத்தையடைத்துவிடவோ அல்லது அறுக்கி எறிந்திடவோ வேண்டும். குதத்தை அறுக்குவதானால் மலமூழுதும் கீழேயொழுகிப்போய் விடும். அல்லது முதலாவதுபாயத்தை யனுஸரித்து அதை யடைத்து விடுவதானால், உட்கொள்ளுமுணவானது, மீண்டும் மேல் நோக்கி வாய்வழியே வந்து வாந்திசெய்து இறக்கவேண்டியதாகும்! ஆனதினால் சரீரத்தினுடைய அவயவங்களில் ஒன்றாகிய குதம் போய்விட்டால் சரீரம் முழுதும் எவ்விதம் நஷ்டமாகின்றதோ அவ்விதமே ஹிந்து ஸமுதாயத்தினுடைய அவயவங்களில் ஒன்றாகிய புலையர் வர்க்கமோ பரையர் வர்க்கமோ போய் விட்டால் ஹிந்து ஸமுதாயம் முழுதும் நஷ்டமாய்ப் போய்விடும். ஆதலால் ஹிந்து ஸமுதாயத்திலுள்ள வெவ்வேறு

பெயருள்ள எல்லா ஜாதிகளையும், சரீரத்தினுடைய அவயவமுதலானவைகளைப் போல நினைத்து ஒருவர்க்கொருவர் (பரஸ்பரம்) ஸஹாயமாயும் அன்போடும் அனுஸரித்து நடந்து வரவேண்டியதாகின்றது.

ஸமுதாயத்தினுடைய மரணவஸ்தை.

ஒரு ஸமுதாயத்திலுள்ள ஒவ்வொரு தொழில் வகுப்பினர்க்குமுண்டாகின்ற ஸுகதுக்கங்களையும் லாபநஷ்டங்களையும் எல்லாத்தொழில் வகுப்பினருமாகப்பரஸ்பரம் பங்கிட்டுக்கொள்ளல் வேண்டும். மனித சரீரத்தினுடைய ஒருகையானது நோயினால் மரணமடைந்து அதாவது இரத்த ஓட்டம் முழுதுமில்லாததாகி வரண்டு உலர்ந்த தடிபோல் உணர்ச்சியற்றதாகிவிட்டதென வைத்துக்கொள்வோம். ஆனால் உணர்ச்சியுள்ளனவாகிய மற்ற அவயவங்களுக்குண்டாகின்ற ஸுகதுக்கங்களையாவது குறைவு நிறைவுகளையாவது, இறந்த தான அக்கையானது அறிவதில்லை. இங்கிலண்டில் "மூன்றுவது ஹென்றி" என்பவர் அரசாக்ஷி செய்து வருங்காலத்தில், ஒருசமயம் ஒரு ஸ்திரீயானவள் அடியிற்கண்ட வண்ணம் ஒரு பெண் குழந்தையைப் பெற்றனள். "அதற்கு இரண்டு சிரஸுகளும், நான்கு கைகளும் இருந்தன. ஒரு முகம் தெற்கு நோக்கியிருந்தால் மற்றோர் முகமானது, அதற்கு நேர் வடக்கே நோக்கிக்கொண்டிருக்கும். ஒன்றினது பின்புரம் மற்றொன்றினோடு சேர்த்துப் பிணிக்கப்பட்டிருந்தது. இக்குழந்தை இரண்டு முகங்களாலும் ஏக காலத்தில் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருப்பது வழக்கமாகும். அது யௌவனத்தையடைந்து வெகு காலம்வரை வாழ்ந்து வந்தது. அப்பால் அவற்றில் ஒன்று இறந்து விடவே, மூன்றுவருஷ காலம் வரை அவ்விறந்துபோன பாகத்தை (ஒருதலையும், இரண்டு கைகளுமாகிய பாகத்தை) உயிரோடிருந்தபோதே சுமந்துகொண்டு நடந்தும் வந்தது: அது போல உயிரோடு வாழ்ந்து வருகின்ற அவயவங்களின் ஸுகதுக்கங்களையும் குறைவு நிறைவுகளையும் மற்ற அவயவங்களாலறிதற்கு ஸாத்யப்படுவதில்லை. இதற்குக்காரணம் அவை "இறந்து போய் விட்டன" என்பதாம். "ஜீவித்திருக்கின்ற அவயவங்களின் ஸுகதுக்கங்களை அறியவேண்டும்" என்றால் ஜீவனோடிருக்கின்ற அவயவங்களுக்கு மட்டுமே அது முடியக்கூடியதா

கும். சரீரமுழுதும் இறந்துவிட்டால் யாதொரு அவயவங்களுக்கும் ஒன்றுக்கொன்று அறிந்து கொள்ளவியலாது. இவ்விதமாகவே ஒரு ஸமுதாய சரீரத்தினுடைய அவயவங்களாகிய ஒவ்வொரு தொழில் வகுப்பினர்க்கு மூண்டாகின்ற ஸுகதுக்கங்களையும் இலாப நஷ்டங்களையும் ஒருவர்க்கொருவரியாமலும் பங்கு கொள்ளாமலும் இருந்தால் அந்த ஸமுதாயத்தை "இறந்த ஸமுதாயம்" "சவஸமுதாயம்" என்று அறிந்து கொள்ளவேண்டும். (இது இந்து ஸமுதாயத்தின் தற்கால நிலையையுணர்த்தும்.)

ஸமுதாயத்தின் நாசகாரணங்கள்

ஒரு ஸமுதாயத்திலுள்ள எல்லாத் தொழில் வகுப்பினரும் கல்வி, செல்வம், சக்தி முதலிய வைகளில் எல்லோரும் ஸமத்துவமுடையவர்களாய் இருத்தல் வேண்டும். (இதனால்தான் பூர்வகாலத்திலிருந்த இந்திய அரசர்களனைவரும் பணத்தைக் கட்டி வைத்திருந்த ஜனங்களிடத்திலிருந்தும் அவைகளை யெடுத்துப் பொது ஜனங்களின் உபயோகத்திற்காகச் செலவிட்டு வந்தனர்.)

ஆனால் இதற்கு விரோதமாய், ஒருவகுப்பினர் மற்றோர் வகுப்பினருடைய கல்வி, செல்வம், பலம் (வித்தை, தனம், சக்தி ஆகிய) இவைகளை எந்த உபாயத்தினாலாவது கைப்பற்ற முயல்வாராயின் அந்த ஸமுதாயமானது அடியோடு நாசமடைந்து விடும்.

சரீரத்தின் அவயவங்களில் ஒன்றாகிய காலானது, மற்ற எல்லா அவயங்களிலும் ஒன்றுபோல ஸமமாய் வியாபித்திருந்த இரத்தத்தைப் பலாத்காரமாக இழுத்துத் "தன்னுடைய வசமாக்கிவிட்டது" என்றிருக்கட்டும். அப்படியானால் எல்லா அவயவங்களிலும் இருந்த இரத்தமானது காலில் வந்து சேர்ந்து விடும். அப்பொழுது காலானதுமுன்னிலும் பன் மடங்கு வீங்கிப்—பருத்ததாய்த்—தனது தொழில்களாகிய "போக்கு, வரவு செய்வதற்குங்கூட" முற்றிலும் இயலாததாகிவிடும். மற்ற அவயவங்களுக்கோவென்றால் இரத்தம் பூசாவும் இல்லாமையின் அவற்றின் செயல்களையெல்லாம் தவிர்க்கவேண்டியனவாய் வருகின்றன. காலிலிருக்கவேண்டிய அளவுக்கு மிஞ்சி இரத்தமானது மிகுதிப்பட்டுவிட்டதனால் காலிற்குப், மற்றுள்ள அவயவங்களுக்குச் சிறிதும் இரத்

தமின்மையினால் (இரத்தம் சோஷித்துப் போனமையால்) அவை கட்கும் தம் தம் கடமைகளை நிறைவேற்றுதற்கு இயலாதனவாகி விடுகின்றன. ஆதலால் சரீரத்தினுடைய யாதொரு அவயவங்க ளுக்கும் அவ்வவற்றின் காரியங்களைச்செய்ய முடியாமல் சரீரமுழு தும் நஷ்டமாய்ப்போகின்றது. அது போல ஸமூதாயத்தினுடைய அவயவங்களாகிய எல்லாத்தொழில் வகுப்பினரிடங்களிலும் ஒரே விதமாய் பரவியிருக்க வேண்டியதாகிய கல்வி செல்வம் சக்தி முத லான ஸாதனங்களை ஒருவகுப்பினர் அல்லது இரு வகுப்பினர் ஏதோ சில தந்திர (உபாய)ங்களால் "ஸ்வாதீனப்படுத்திக்கொள் வது என்று வந்தால் மேலே விவரிக்கப்பட்ட கல்வி செல்வங்" கள் காரணமாக அவர்கள் இருமாப்புற்றும் (அஹங்காரங் கொண் டும்) சோம்பேரிகளாயும் ஆவதோடு அவையில்லாதவர்களாகிய மற்ற வகுப்பினர் கல்வி செல்வ சாமர்த்தியங்களில்லாத நிமித்தம் தங்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுதற்கும் அசக்தர்களாய் "சூழ்நிலையடைந்தும்" இவ்விதமாய் முடிவில் இருதிறத்தவரும் நாசமடைகின்றார்கள்.

ஸமூதாய தர்மம், அல்லது ஸமூதாயத்தின் கடமை.

ஒரு ஸமூதாயத்திலுள்ள ஒவ்வொரு தொழில் வகுப்பினரும் பரஸ்பரஞ்செய்கின்ற ஸஹாயங்க ளை தங்கள் ஸ்வதர்மங்களாய் (கடமைகளாய்) நினைக்கவேண்டுமேயல்லாது ஏதோ பரோபகா ரஞ்செய்து விடுவதாக நினைத்தல் கூடாது. ஒரு தனவான் ஒரு தரித்திரனுக்கு அன்ன வஸ்திரங்களுக்காக மாதந்தோறும் 10 ரூ கொடுத்து வருவதாக வைத்துக்கொள்வோம். இதற்குப் பரோப காரமென்று சொல்லுகின்றோம். ஆனால் அந்த தனவான், தரித்தி ரனுடைய நிலைமைக்கு வரும்பொழுது முன்போல் கொடுப்பதற்கு (அவனால்) ஸாத்தியப்படுவதில்லை. அப்பொழுது பரோபகாரத்தை நிறுத்தி அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயலுவான். தன் னைக் காப்பாற்றிக்கொள்வ தென்பது ஸ்வதர்மம்—தன் கடமை— எனக்கூறவேண்டும். அதாவது தன் கையினால் வேலைசெய்து வயிற்றிற்கு ஸகாயஞ்செய்வது ஸ்வதர்மமாகும். ஒருவன் எவ்வ ளவுதான் தரித்திரனாயிருந்த போதிலும் அவனுடைய வயிற்றிற்கு கை செய்யவேண்டிய ஸகாயங்களை அது ஓர் காலத்திலும் நிறுத் திவிடுவதில்லையல்லவா? இவ்விதமின்றிக்கையானது வயிற்றிற்கோ

கண்ணிற்கோ காலிற்கோ செய்கின்ற ஸகாயங்கள், "பரோபகார மாகும்" என்று தவருதலாகக்கருதுமாயின் பரோபகாரம் எல்லாக் காலங்களிலும் செய்யமுடியாமற்போவதற்கும் அப்பொழுது தன் கடமைக்குக் கேடுவந்து தன் சரீரம் நசித்துப்போவதற்கும் இட மாகும். கை கால் முதலிய அவயவங்கள் எக்காலங்களிலும் அந்நி யோந்நியமாய் — ஒன்றுக்கொன்று — சரீரப் பாதுகாப்பிற்காக ஸகாயஞ்செய்யக் கடமைப்பட்டவைகளாகும். தனவானுக்கு, தன மிருக்கின்ற காலம் வரையிலேயே தரித்திரனுக்கு ஸகாயஞ்செய்ய வேண்டிய தாகிய கடமையுண்டு.

அது போல ஹிந்து ஸமுதாயம், மிகவும் புஷ்டியுள்ளதாயி ருக்கும்பொழுது தான் விதேசிய (அந்நிய ராஜ்ய) ஸமுதாயங்க ளுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றது. ஆனல், ஹிந் துஸமுதாயத்தினுடைய அவயவங்களாகிய ஒவ்வொரு—தொழில் வகுப்பினரும், ஒருவருக்கொருவர்—கை கால் முதலிய அவயவங் களைப்போல தம் தம் கடமைகளாகிய ஸகாய காரியங்களை நடத்தி வருவதற்கு ஸதாகாலமும் கட்டுப்பட்டவர்களாயிருக்கின்றர்கள். ஆதலால் ஹிந்து ஸமுதாயத்தினுள்ளடங்கிய எல்லாவகுப்பினரும் பரஸ்பரஞ் செய்கின்ற உதவிகளைப் பரோபகாரமாய் எண்ணிக் கொள்ளாமல் தம் தம் கடமையாகவே கருதவேண்டியதாகின்றது.

ஸமுதாயம் என்றால் என்ன?

ஸமுதாயம் என்றால் அநேகம் ஸ்திரீ புருஷர் கள் ஒன்று சேர்ந்து அவர்களின் இகலோக ஸம் பந்தமாயும் பரலோக ஸம்பந்தமாயுமுள்ள ஸக லதிகளைச் சாதித்துக் கொள்ளவேண்டிய எல்லாக் காரியங்களையும் அந்நிய ஸமுதாயங்களின் அபேக்ஷையின்றி நிர்வஹித்துக்கொள் ளத் தக்க நிலையில் எல்லாத்தொழில் வகுப்பினருமுள்ளடங்கிய ஒரு பொது ஸங்கமாகும். ஒரு மனிதனுடைய சுரோத்திரம், தவக்கு, சக்ஷு, ஜிஹ்வை, கிராணம் என்பனவாகிய ஞானேந்தி ரியங்களும் சப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம்என்பனவாகிய அவற்றின் விஷயங்களும், வாக்கு, பாணி, பாதம், பாயு, குஹ்யம் குதம் என்பவைகளாகிய கர்மேந்திரியங்களும் வசனம், ஆதானம், கமனம், ஆனந்தம், விஸர்க்கம் என்பனவாகிய அவற்றின் செயல்

களும், ஸமானன், வியானன், உதானன், அபானன், பிராணன் என்னுமிவ்வைந்து வாயுக்களும், அவற்றின் ஸஹாய வாயுக்களாகிய நாகன், கூர்மன், க்ருகரன். தேவதத்தன், தனஞ்சயன் என்பனவும், ஹிருதயம், மனஸ், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் முட்காரணங்களும் அவற்றின் விஷயங்களாகிய தாரணை செய்தல், ஸங்கர்ப்பித்தல், நிச்சயித்தல், ஆலோசித்தல், அபிமானித்தல் என்பனவும், ஜீவனும் ஆத்மாவும் (ஆகிய இவையெல்லாம்) ஒன்று சேர்ந்து அதன் இஹ பர ஸுக க்ருத்தியங்களை நடத்துதற்கும் போதிய ஒரு பூரண சரீரமாகும், எனக்கருதவேண்டும். மேலும் மூன்று கோடி கைகளோ நான்கு கோடி கால்களோ நூறு கோடி கண்களோ பதினாயிரங் கோடி புத்திகளோ கூடிச் சேர்ந்தால் (அது) ஒரு சரீரமாவதில்லை. இவ்விதம் ஒரு ஸமுதாயத்தினுடைய அவயவங்களாகிய க்ருஷிகன் முதல் எல்லாத்தொழிற்காரர்களும், —குறைந்தபக்ஷம்— ஒவ்வொருவர் வீதமாகவோ அல்லது இருவர் வீதமாகவோ ஒன்று சேருவதனால் அதனை ஒரு சிறிய ஸமுதாயமென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவ்விதமின்றி இரண்டு கோடி சாலியர்களோ, மூன்று கோடி (தக்ஷ) ஆசாரிகளோ, ஏழு கோடி க்ஷத்திரியர்களோ, பதினாயிரங்கோடி பிராஹ்மணர்களோ மாத்திரம் சேர்ந்திருப்பதனால் அதனை ஒரு "ஸமுதாயம்" என்று வியவகரித்தல் அநுசிதமும் அஸாத்தியமும் ஆகும்.

ஸமுதாயத்தின் ஜீவன் மதாபிமானம்.

உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் முக்யமாய் விரும்புவது செல்வத்தை. புத்ரனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கும் பொழுது "ராஜத்தைச்செலவு செய்து விட்டால் அவனை அப்பாபத்தினின்றும் காப்பாற்றி விடலாம்" என்று வரும்பக்ஷத்தில் புத்ரனை ஸம்ரக்ஷிக்க வேண்டி அளவற்ற பிரயாஸப்பட்டுத்தேடி வைத்திருக்கின்ற அச் செல்வக்குவியலைப் பெரிதாக நினையாது அக்கணமே அள்ளி யிரைத்து விடுவார். இதனால் பணத்தினைக் காட்டிலும் "புத்ரனே அதிகப்பிரியமாம்" எனத்தெரிகின்றது. புத்ரன் மீதுவந்த கொலைக்குற்றம் பிதாவின்மேல் சுமத்தப்படும் பொழுது பிதாவானவன் புத்ரனைத்தள்ளிவிட்டுத் தனது சரீரத்தை ரக்ஷித்துக்கொள்ளுகின்றான். இது, புத்ரனிலும் அதிகப்பிரியம் "தன்பேரில்" என்பதைக் காட்டுகின்றது. ஒருவன் மற்

ஒருவனுடைய கண்ணைக் குத்தவரும்போழுது கையினல் தடுத்துக் கண்ணைக் காப்பாற்றிக் கொள்ளுகின்றன். இந்த அனுபவத்தினல் "கர்மேந்திரியங்களில்" ஒன்றுகிய கையைக்காட்டிலும், ஞானேந்திரியங்களில் ஒன்றுகிய கண்ணினிடத்தில்தான் அதிகப் பிரியமென்பது தெளிவாகின்றது. தூக்கிவிடுவதற்காகப் பிடித்துக்கொண்டு போகப்படுகின்ற ஒருமனிதனைப்பார்த்து "தூக்கில போடட்டுமா? அல்லது கண்களைத்திருகி எடுக்கட்டுமா? எதில் உனக்கு இஷ்டம்?" எனக்கேட்டால் அதற்கு அவன் கூறும் மறு மொழியாவது:- "கண்களைத் திருகிக்கொள்" என்பதே. இதனல் கண் முதலிய அவயவங்களைக் காட்டிலும் அதிகப் பிரியமானது "தான் உயிர் வாழ்வதில்"தான் என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. உயிர்வாழ்ந்து வருகின்ற ஸர்வ ஜனங்களுக்கும் உயிரைப்போல பிரியமுள்ள வஸ்து வேறொன்றுமே இருப்பதாகக் காணப்படவில்லை. முக்கியமாய் சரீரத்தினுடைய எல்லா அவயவங்களும் இந்திரிய வியாபாரங்களும் ஜீவனே யாசிரயித்திருக்கின்றன. ஜீவனில்லாவிடில் ஸ்தூல சரீராதிகளின் வியாபாரங்களுமில்லை. ஆனல் ஸ்தூல சரீரமில்லாவிடினும், ஜீவன் இருந்துகொண்டேயிருக்கும். இந்த நியாயத்தினல் ஜீவன் ஆதாரமும் சரீரமுதலிய அவயவங்கள் ஆதேயமும் ஆகின்றன. சரீரத்தினுடைய எல்லா அவயவங்களுக்கும் இந்திரியங்களுக்கும் தனித்தனியே பெயர்களும் தொழில்களும் வெவ்வேறுகக்காணப்பட்டபோதிலும் அவைகளின் ஆதாரமாகிய ஜீவனில்லல்லவா இவைகளின் அபிமானம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது? ஜீவனுக்கு ஏதேனும் "ஒரு அபாயம் ஸம்பவிக்கப்போகின்றது"எனத் தெரிந்தவுடன் எல்லா அவயவங்களும் ஒன்று சேர்ந்து ஜீவனே ரக்ஷிப்பதற்காகத் தயாராகிவிடும். ஜீவனைக் காப்பாற்ற வேண்டி அவயவங்கள் பரஸ்பரம் முயர்ச்சிக்கவேண்டுமென முன்னமேயே யாதொரு உடம்படிக்கை (ஒப்பந்தம்) களும் செய்து கொள்வது வழக்கமில்லை. ஜீவனுடைய மோக்ஷதசையில் எல்லா அவயவங்களுக்கும் இந்திரியங்களுக்கும் ஸுகமும், பந்த தசையில் துக்கமும் உண்டாகின்றது. இவ்விதமாகவே மதமானது ரக்ஷிக்கப்படும் பொழுது ஸமுதாயத்திற்கு ஸுகமும், மதமானது அழியும் பொழுது ஸமுதாயத்திற்கு துக்கமும் ஸம்பவிக்கின்றது. ஆதலால் ஸமுதாய சரீரத்தினுடையவும் அதன் அவயவங்களுடையவும்

ஜீவன், மதமாகின்றது. வெவ்வேறான பெயர்களும் தொழில்களு முள்ள அவயவங்களெல்லாம் ஜீவனே ரக்ஷிப்பதற்காக ஒன்றுசேர்ந் து முயர்ச்சிப்பதுபோல மதரக்ஷையின் நிமித்தம் ஸமுதாயசரீரத் தினுடைய நானாஜாதிகளாகிய அங்கங்களும் ஐகமத்தியத்துடன் கூடிப்பிரயத்தினஞ் செய்ய வேண்டியவைகளாகின்றன. சரீரத்தி னுடைய காலோ கையோ போய்விட்டபோதிலும் ஜீவித்திருக்க லாம்." எனக்கருதுவது போல ஒருக்கால் ஸமுதாயத்தில் செருப் புத்தைக்கின்ற செம்மான்களோ, குடை செய்பவர்களோ இல்லா மற்போய்விட்டபோதிலும் ஸமுதாயம் ஜீவித்து உயிரோடு இருக் கும்" என எண்ணிக்கொள்வோம். ஆனல் ஜீவன் போய்விட்டால் சரீரமே இல்லாமற்போவதுபோல மதம் அழிந்து போய்விட்டால் ஸமுதாயமே இல்லாமற்போய்விடும். ஜீவஹானியை உண்டுபண் ணவேண்டி முயலுகின்ற சத்ருவை எதிர்ப்பதற்கு எல்லா அவய வங்களும் ஒன்று சேர்ந்து எத்தனிப்பது போல, மதத்தை இல் லாமற் செய்ய வருகின்ற பிராஹ்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூலியர், தட்டார், கர்ஷகர், செம்மார் முதலிய எல்லா ஜாதிக்காரர் களுமொன்றுசேர்ந்து கொண்டு எதிர்க்கவேண்டியவராவார். இத னலன்றே ஹிந்துக்கள் ஸமுதாயத்திலுள்ள எல்லாத்தொழில்க ளிலும் மதத்தைக்கலந்து ப்ரதிஷ்டை செய்தனர். எல்லா அவய வங்களுக்குமாய்ச் சேர்ந்து ஒரு ஜீவனே இருப்பது போல எல் லாத்தொழில் வகுப்பினர்க்குமாக ஒரு மதமே இருக்கின்றது. சரீரத்திலுள்ள கை கால் முதலிய அவயவங்களுக்கு எத்தகைய கேடுகள் சம்பவித்த போதிலும் உயிருக்குமட்டும் அபாயம் வரா மல் காப்பாற்றிக் கொண்டால் அப்பால் அவயவ முதலானவை களுக்குத்தக்கபடி வைத்தியஞ்செய்து காப்பாற்றிக் கொள்ளலா கும். இவ்விதமாக ஸமுதாயத்திலே உள்ள அங்கங்களாகிய ஒவ் வொரு ஜாதிக்காரர்களுக்குள், ஏதாவது கலகம் முதலியன ஸம் பவித்திருந்த போதிலும் மதத்தைமட்டும் தள்ளிவிடாமல் காப் பாற்றிக் கொண்டால் பிறகு கலகங்களின் மூல காரணங்களைத் தெரிந்து கொண்டு அவற்றிற்கேற்றவண்ணம் பரிஹாரஞ்செய்து காப்பாற்றிக்கொள்ளலாம். ஆதலால் ஸமுதாயத்தினுடைய அபி மானம், முக்கியமாய் மதத்திலேயே இருத்தல் வேண்டும்.

ஸமூதாயோத்தார ணம் தொழில்க ளனைத்தையும் ப ற்றி நிற்கின்றது.

ஒரு ஸமூதாயத்திலுள்ள எல்லாத் தொழில் வகுப்பினரும் தாழ்ந்த நிலையை யடைந்திருக் குங்காலத்தில் வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய தொழில்களைச்செய்து வரு கின்ற எல்லா வர்க்கத்தினரையும் ஒன்றுகவே கைதூக்கிவிட வேண்டியதாகும். ஆனல் அதற்கு விரோதமாய், அவற்றில் ஏதேனும் ஒரு தொழிலினை (அல்லது தொழில் வகுப்பி னரை) உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர விரும்பி அதற்கு எனய தொழில்களைப்பார்க்கினும் உயர்வினைக்கற்பித்துக் கொண் டாடவோ புகழவோ செய்தால் எல்லாத்தொழில்களுக்கும் அத னல் பெருங்கேடு விளைவதாகும்.

சரீரமுழுதும் ரோக பீடையினல் மிகவும் கஷ்டத்தையனு பவிக்கின்றது, என வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஒரு வைத்தியன் வந்து அவயவங்களுக்குள் வேலை செய்கின்ற விஷ யத்தில் கை பிரதானமாதலின் அதற்கு சிகித்ஸை செய்தால் சரீ ரமுழுதும் ஸுகமடைவதாகும் எனக்கூறி வைத்தியஞ்செய்ய ஆரம்பிப்பான். சில நாட்செல்லும்பொழுது சரீரத்திற்கு ஸுக மூண்டாவதற்குப் பதிலாய் துக்கம் விருத்தியாகி வருவதால் வேறோர் வைத்தியன் வந்து, நடக்கின்ற விஷயத்தில் காலிற்குப் பிரதான்யம் அதிகமாதலால் அதையல்லவா மூதலில் ஸ்வஸ்தப் படுத்தவேண்டும்? எனப்புகன்று, கைக்கு வைத்தியஞ்செய்வதை நிறுத்தி, காலிற்கு வைத்தியஞ்செய்ய ஆரம்பிப்பான். பிற்பாடும் துன்பமதிகமாகின்றதே யல்லாது சிறிதேனும் ஸௌக்யமுண்டா வதேயில்லையென்று வரும்பொழுது இனியுமோர் வைத்தியன் வந்து காண்கின்ற விஷயத்தில் கண்ணிற்கே உயர்வு அதிகமென்று சொல்லவேண்டுமாதலால் கண்ணிற்கு வைத்தியஞ்செய்தால் தான் உடம்பிற்கு பூரண ஸுகங்கிடைக்குமென்றும், இதற்கு முன்பு செய்த வைத்தியங்களெல்லாம் "வயிற்று வலிக்குத் தலைகூவரம் செய்ததுபோல்" விபரீதமாகிவிட்டன., எனவும் நவின்று நேத் ராவைத்தியத்தை மஹாப்பிரயத்தின்த்தோடு செய்து வருவான். இதனல் ஒவ்வொரு அவயவங்களுக்குமாகத் தனித்தனியே செய் கின்ற வைத்தியங்களும் (மருந்துகளும்) பத்தியங்களும் ஒன் றொன்று விபரீதகுணமுள்ளனவாய்ப் போவதற்கும், அது

காரணமாக சரீரத்திற்கு முன்னிலும் பன்மடங்கு ரோகம் பெருகி சரீரம் வெகு சீக்கிரத்தில் அழிந்து போவதற்குமிடமுண்டாகும்.

ஆனால் எல்லா அவயவங்களுக்கும் ஒரே விதமாய் ஸுகமளிக்கத்தக்க ஔஷதங்களை உபயோகித்திருப்போமானால் சரீரத்திற்கு யாதொரு ஆயாஸமுமின்றி வெகு எளிதில் ஸௌக்யமுண்டாக்கக்கூடியதாயிருந்தது. இதுபோலவே ஹிந்து ஸமுதாயத்தினுடைய அவயவங்களில் விவஸாயமுதலிய எல்லாத்தொழில் வகுப்பினரும் ஒரேமாதிரியாகத்தாழ்ந்த நிலைமையையடைந்திருக்கின்ற இக்காலத்தில், "ஸமுதாயத்தின் மேன்மையை விரும்புகின்றவர்கள்" என அபிமானம் பூண்டிருக்கின்ற சிலபண்டித ஸிம்ஹங்களின் அதியுத்ஸாஹத்தால் இந்தியாவின் தலை நகரங்களில் பெரிய பெரிய ஸபைகள் கூடி அளவற்ற ஜனங்களை யழைத்து வந்து அரசாங்க உத்யோகத்தினுடைய அத்தியாவஸ்யகத்தைக் குறித்தும் அதன் குறைவினால் இந்தியர்களுக்குள்ள கஷ்டநஷ்டங்களையும் உத்யோகத்தின் பெருமைகளையும் வாசரம கோசரமாய் வர்ணித்துப்பிரஸங்கஞ்செய்வார்கள். அப்பொழுது அங்கு ஹாஜராயுள்ள பற்பல தொழில் வர்க்கக்காரர்களுடைய மனதும் உத்யோகத்துறையில் பலமாக ஆகர்ஷிக்கப்படும். பின்னர் ஸ்வல்ப காலத்திற்குள் உத்யோகத்தைப் பற்றிய உபந்நியாஸங்களை இந்தியர்களின் மத்தியில் விருத்தியாக ஆரம்பித்து அதனை நிறைவேற்றிக்கொள்ளவேண்டி, ஸாதனங்களை—பரீக்ஷை ஸர்டிபிகேட்டுகளை தேடிக்கொள்வதில் பலரும் பேராவல் கொண்டவர்களாய் பகீரதப்பிரயத்தினஞ் செய்ய ஆரம்பிப்பார்கள். இவ்வளவு தடபுடல்களும் முடியும்பொழுது இந்தியா பூராவும் ஒரு உத்யோக நாடக ஸபையாகிவிடும். என்பது மட்டுமல்ல: இது (இந்தியா) ஒரு உத்யோகப்பைத்தியக்காரர்களின் மாத்ருகை ராஜ்யம் ஆகவும் முடிந்துவிடும். இதனால் கிருஷி, கைத்தொழில், வியாபாரம் மதம், என்பனபோன்ற விஷயங்களில் வேலைசெய்வதற்கு ஆள் குறைந்துவிடுவதற்கும், அதனால் இந்தியாவிற்குத் தேவையாயுள்ள பொருள்களை இங்கேயே பெறுவதற்கும் மார்க்கமின்றி அந்நிய ராஜ்யங்களிலிருந்தும் (கெருப்புக்குச்சு முதல்) கடன் வாங்க வேண்டியதாய் வருகின்றது.! இக் காரணத்தால் தான் இந்தியாவிற்கு பலமான கொடிய தாரித்ரியம் வந்துசேருவதற்கு

இடமுண்டாயிற்று. இவ்வுண்மையை ஏதோ சில யோக்கிய புருஷர்கள் தெரிந்துகொண்டும் உத்தியோகத்திலுள்ள வெறுப்பினாலும் இந்தியாவைப் பிடித்திருக்கின்ற கோரதாரித்திய பைசாசத்தைக்கண்டு அனுதாப மடைந்தும் "உத்யோகமே வேண்டாம்! உத்யோகமே வேண்டாம்!!" என வீரிட்டுக்கதறிக்கொண்டு இக்கரைக்கு அக்கரை பச்சை, என நினைத்து ஓடியலைந்து கடைசியாகப் பட்டினிகிடைக்கின்ற பசுவைப் போலும், எல்லோரும் கைத்தொழில்தான்செய்யவேண்டும், என ஆரவாரிக்கத்தொடங்குவார்கள். பின்னர் கைத்தொழில் நடத்தவேண்டியதற்காகச்சங்கங்கள் கூடவும் வியவஸாயப் பொருட்காக்ஷிசாலே திறந்து வைக்கவும் ஆரம்பிப்பார்கள் அப்பொழுது உத்தியோகத்திற்காகப் பிரயத்தினஞ் செய்தவர்களும் மற்றுமுள்ள தொழிலாளிகளும் தட்டுக்கெட்டுத்தடுமாறிக் கைத்தொழில் அரங்கத்திற்கு வந்துசேருவர் இது இப்படியிருக்க வேறொருவர் இந்தியாவினுடைய எல்லாவிதமான மேன்மைக்கும் பிரதானமாயிருப்பது வியவஸாயந்தானெனவும் அதனை யுயர்வாகிக்கொணர்ந்தால் மட்டுமே இந்தியாவிற்கு க்ஷேமமுண்டாகுமெனவும் பிரஸங்கஞ் செய்தால் அதனைக் கேட்டவுடன் கைதொழில்களைக் கைவிட்டுக் கர்ஷகர்களாகத் தொடங்குவார்கள். இவ்விதமாக கவனித்துப்பார்க்கும்பொழுது ஹிந்துக்கள் எல்லாத்தொழில்களிலும் ப்ரமித்து (மயங்கி) ஓடிக்கொண்டிருப்பதனால் இந்தியாவானது பூரணமாய் ஒரு தொழிலினுடைய பிரயோஜனத்தையும் அநுபவிக்க முடியாமற் போவதுடன், முன்பு இருந்த ஸ்மர்த்தியத்தைக்கூட இல்லாமற்செய்துவிடுகின்றது, எனத்தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவனுடைய வாழ்நாளில் 4-வருஷம் வியவஸாயியாகவும் 5-வருஷம் கைத்தொழிலாளியாகவும் 3-வருஷம் வியாபாரியாகவும் 10-வருஷம் உத்யோகஸ்தனுமிருந்தால் அவனுக்கு யாதொரு தொழிலிலும் ஸரியானபடி அனுபோக ஸாமர்த்தியம்ஸம்பாதிப்பதற்கு ஸாத்தியப்படுவதில்லை யென வருகின்றது. ஆதலால் ஸமுதாயத்திற்கு ஆவசியகமுள்ள எல்லாத் தொழில்களையும் நன்றாக விசாரித்து (ஆராய்ந்து) தெரிந்து கொண்டு ஸமுதாயத்தை ஒரே விதமாக கைதூக்கிவிட்டு மேன்மைக்குக்கொண்டுவாவேண்டும். எவ்வளவு தொழிற்பிரிவுகள் தேவையாயிருக்கின்றனவோ அவ்வளவையும் ஒவ்வொரு தொழில்களில் எவ்வளவு பெயர்கள் வேலை செய்ய

வேண்டுமென, ஸமுதாயத்தினுடைய வரவு செலவுவித்தியாசங்களால் கணக்கெடுக்கப்படுகின்றதோ அதையனுஸரித்து,(தொழில் துரையில்) ஜனங்கள் மிகுதியாக இருந்தால் குறைத்தும், குறைந்திருந்தால் (கணக்குப்படி) கூட்டியும் (ஸமஞ்ஜஸ) செய்யவேண்டும்.

மேற்கூறப்பட்ட விஷயங்களுக்கு அடியில் தெரிவிக்கின்ற நியாயப் (பிரமாண)ங்கள் எவ்வளவு தூரம் ஸஹாயஞ்செய்கின்றன வென்பதைக்கவனிப்போம்.

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதனம்ச்ரேய: பரதர்மோ பயாவஹ: ||

மிகத்தெளிவோடு நன்றுகச்செய்யப்பட்ட அந்நியர்களின் தொழில்களைக்காட்டிலும், குணமில்லாத (மதியீனத்தால் தனக்கோ பிறர்க்கோ சிரேஷ்டமல்லவெனத் தோற்றினும்) தனது தொழில் உயர்வுடையதாகும். தனது தொழிலைக் கடைப்பிடித்தொழுகின்றவனுக்கு மரணங்கூட உத்தமமாகும்! பிறர் தொழிலானது (மகா தரித்திரமாகிய) நரகமுதலிய லக்ஷணங்களையுடைய பயத்தையளிக்கும்.

ஸ்வேஸ்வேகர்மண்ய பிரத: ஸம்ஸித்திம் லபதே நர: |

"ஸமுதாயக் கோட்பாட்டினது நியாய வாயிலாக அந்தந்த தொழில் காரர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலையனுசரித்து சிரத்தையோடு அனுஷ்டித்து வருகின்ற மனிதன் ஞானசித்தியை(யோக்கியதையை) யடைகின்றான்"

ச்ரேயாந் ஸ்வதர்மோவிகுண: பரதர்மாத்ஸ்வனுஷ்டிதாத் |
ஸ்வபாவ நியதம் கர்ம குர்வந்நாப் நோதிகில்பிஷம் ||

தன்னுடைய தொழிலானது குண்மில்லாததாய் (அறிவின்மையால், பெருமையற்றதெனக்) காணப்பட்டாலும் நன்றுகச்செய்யப்பட்ட பிறர்தொழிலைக்காட்டிலும் உயர்வுள்ளதாகும். தனது இயற்கைவாசனையை யனுசரித்து விதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலைச்செய்து வருகின்றவன் பாவத்தையடையமாட்டான்.

ஸர்வேஷாமாச்ர மாணாஞ்ச ஸ்வதர்மச்ச யச: பரம் |
ஸ்வாமத ஹீநா காகே பதந்தி மூட சேதஸ ||

எல்லாத்தொழிலாளிகளுக்கும் ஆச்ரமிகளுக்கும் அவாவற் கேற்ற வாசனையை யனுசரித்துச் செய்கின்ற தொழில்களே உயர்ந்த புகழளிப்பதாம். அவ்விதம் வாஸனை முதிர்ந்து தேர்ச்சி பெற்றுள்ள தொழிலைச் சிரத்தையோடு செய்யாது, அலக்ஷியஞ் செய்கின்ற மூடபுத்தியுள்ளவர்கள் தாரித்ரிய துக்கமாகிய நரகத் தில் வீழ்ந்து ஆழ்ந்து போவார்கள்.

மேலே எடுத்தாளப்பட்டிருக்கின்ற பிரமாணங்களால் எல்லா விதமானஜாதித்தொழிலாளிகளுக்கும் ஒரேவிதமான சிரேஷ்டத் துவமே உண்டென்றும் அந்தந்தத் தொழிலாளிகளுக்கு விதிக்கப் பட்டிருக்கின்ற தொழில்கள் கர்மங்கள் அந்தந்தஸ்தானத்தில் ஒரே விதமான பெருமையை வகித்து நின்று (மோக்ஷமாம்) பய னையளிப்பனவாயிருக்குமென்பதும் தெளிவாகும். "ஜாதி,வர்ணங் கள்" என்று சொல்லப்படுகின்ற இடங்களிலெல்லாம் அர்கள் பற் பல தொழில் வகுப்பினர் என்று அர்த்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஜாதிகள் "பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் எனும் இந்நான்குமாத்திரமல்ல: எவ்வளவு தொழில் களுண்டோ அவ்வளவு ஜாதிகளுண்டென அறிந்து கொள்ளுதல்வேண்டும். அந்தந்த தொழில்களே மதநியமத்தையனுசரித்து ஸ்ருஷ்டி நியா யத்தின் ப்ரகாரம் சிரத்தையாயும் பயனே விரும்பாமலுஞ்செய்து ஈசுவர புத்தியோடு (அதாவது தானே "ஸர்வத்திற்கும் ஆதார மாகிய பரப்பிரஹ்ம ஸ்வரூபம்" என்னும் திருட பாவனையோடு) கூட ஜீவித்து வருகின்ற மனிதற்கு இதாத்தொழில்களேச்செய்யா மலேயே இவ்வுலக இன்பமும், முடிவில் மோக்ஷபதவியாகிய பேரின்பமும் ஸித்திக்கக் கூடியதாயிருக்க, ஒரு வகுப்பினரின் தொழிலே மற்றொரு வகுப்பினர்க்கனுஷ்டிக்கவேண்டிய ஆவசிய மில்லையல்லவா?

இவ்வளவு விஸ்தாரமாயும் ஸ்ருஷ்டி நியமங்களே மிக அனுச ரித்தும் பல தத்துவங்களே வெளியிடுகின்ற ஹிந்துமதம் (ஸநாத னதர்மம்) மனித ஸமுதாயத்தினுடைய ஆணிவேர் என்பதில் என்னஸந்தேகம்? இப்பரிசுத்தமாகிய தத்துவகோடியால் தாங்கப்

பட்டு வருகின்ற ஹிந்து ஸமுதாய சரீரத்தினுடைய அவயவங்களாகிய செம்மான்மார், ஈழவர், குறவர், புலையர், பறையர் முதலிய ஜாதிகளைத் தாழ்ந்த ஜாதிகளாகக் கருதப்படுவதற்குக் காரணம் யாதெனில், இந்தியாவில் மஹம்மதியர்களின் படையெழுச்சிக்கு முன்னேயே தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தவர்களும், வேதங்களின் பொருள் மூட்பங்களை (வேதார்த்த ரஹசியங்களை) ஸ்ருஷ்டி நியமங்களோடு பிரத்தியக்ஷமாய் சேர்த்து அர்த்தஞ்செய்துகொள்ளமுடியாதவர்களுமாகிய "சில புராண ஸித்தாந்திகளின் மகா அடாபிடித்தனங்கள் ஸாஹஸ க்ருத்தியங்கள்" என்றே தெரிந்து கொள்ளவேண்டும். சீர்திருத்த விரும்புகின்றவர்களைப்போல அபிமானித்துக் கொண்டிருக்கின்ற வித்துவான்கள், இந்தக் குறை ஸவத்தான் இப்பொழுது தூரத்தூக்கி எறியவேண்டும். "ஸமுதாய அபிவிருத்தி" என்னும் பயிரையழித்து நாசஞ்செய்கின்ற விட்டில்கள் இவைகளேயாம்.

ஸமுதாயத்தின் விருத்தியும் க்ஷயமும்.

ஒரு ஸமுதாயத்திலுள்ள ஜனங்களின் தொகை பெருகும்பொழுது லாபமும், ஸுகமும் அவர்களின் தொகை குறையும்பொழுது நஷ்டமும் துக்கமுமுண்டாகும். ஒரு மனித சரீரத்தினுடைய கை கால் முதலிய அவயவங்கள், இயல்பாகவே தமக்கு விதிக்கப்பட்டுள்ள தொழில்களைச் ஸமமாய்ச்செய்து கொண்டு ஜீவித்திருக்கும். இது சரீரஸுகத்திற்கு மிகவும் உசிதமாயிருப்பதாம். ஆனால் இதற்கு நேர் விரோதமாக ஒரு மனிதனுடைய கால்கள் முறிந்து விட்டதென நினைத்துக்கொள்வோம். கால்களின் வேலையாகிய "போதல், வருதல், சரீரத்தைத் தாங்குவதற்கு இன்றியமையாததல்லவா? இச்சமயத்தில் கொடுக்கல், வாங்கல், தொழில் செய்தல், முதலிய உத்தியோகத்தில் ஏற்பட்டிருக்கின்ற கையானது, சொந்த ஜோலிகளோடுகூட, போதல் வருதலாகிய 'கால்களின் உத்தியோகங்களையுஞ்சேர்த்து' வஹிக்க வேண்டியதாய் வருகின்றது! அதாவது இரண்டு கைகளையும் பூமியில் ஊன்றியூன்றி ஸஞ்சரிப்பதுதான். இது கைக்கு என்பது மட்டுமல்ல. சரீரமுழுதிற்குமே மகாப்பிரயாசத்தையும், அசதியையும் விருத்திசெய்யக்கூடியதாகும். இம்மூடவனுக்கு நாவுங்கூட அறுந்துவிட்டது, என்றிருக்கட்டும். அப்பொழுது அம்மூட

வன் தன்னுடைய அபிப்பிராயங்களை அந்நியர்களுக்கெடுத்துக் கூற முடியாததாய் வரும். இது சரீரத்தின் பாதுகாப்பிற்கு ஒரு பெருந்தடையாகும். ஸம்பாஷணை யுத்தியோகம்வகிக்கு வருகின்ற நாவினுடைய ஜோலியையும், முன்பிருந்த ஜோலிகளோடு கூட மேற்குறித்த கையே ஏற்றுக்கொண்டு நடத்தி வருகின்றது. பேசவேண்டியதற்குப் பதிலாய் ஜாடை காட்டும்படி கேர்ந்த கைக்கு முன்னிலும் (பன்மடங்கு) வேலைகள் பெருகிவிட்டன! இம்மனிதனுடைய இரண்டுகண்களும் தன்படியே குருடாகி விட்டன என வைத்துக் கொள்வோம். காணுயில்லாவிடின் வஸ்துக்களின் ஸ்வரூபக்ஞானம் எவ்விதமுண்டாகும்? ஸ்வரூபக்ஞானமானது சரீர ரக்ஷணைத்திற்கு மிகவும் அபேக்ஷிக்கப்படுகின்றதல்லவா? அப்பொழுது கண்ணினுடைய "காக்ஷி" யென்னும் வேலையும் அந்தக்கைகளுக்கே நடத்தவேண்டியதாய் வருகின்றது! கண்ணானது வஸ்துக்களைப்பார்த்து மனத்தினில் பதியச்செய்வதற்கு பதிலாய் கையானது தடவித்தடவிப்பொருள்களின் ஸாமான்ய அறிவைக்கிரஹித்துக் கொள்ளுகின்றது. கையானது, அக்கைக்கு விதிக்கப்பட்ட வேலைகளைச் செய்துமுடித்த பின்னரே ஸ்ருஷ்டி நியாயத்திற்கு விரோதமாகிய காலினுடையவும் நாவினுடையவும் கண்ணினுடையவுமாகிய உத்தியோகங்களைச் செய்ய வேண்டியதாக வந்ததனால் அக்கைக்கும் சரீரத்திற்கும் தாங்க முடியாத கஷ்ட நஷ்டங்களும், நாவினுதற்கரிய நாசமும் ஸம்பவிக்கின்றது. இவ்விதம் 100 பேர் கூடிய ஒரு ஸமுதாயத்திற்கு செருப்பு, குடை, அன்னம், வஸ்திரம் முதலான 100வித சாமான்கள் தேவையாயிருக்கின்றன என வைத்துக்கொள்வோம். ஆனால் 100 விதமான ஸாதனங்களையும் (பொருள்களையும்) உற்பத்தி செய்வதற்கு 100 பேரும் 100 தொழிற்காரராகவேண்டும். இது சரீரத்தினுடைய அந்தந்த அவயவங்களைக்கொண்டு அவ்வவற்றின் இயல்பான தொழில்களைச் செய்வது போலாகும். எவ்வளவு தொழிற்பிரிவுகளிருக்கின்றனவோ அவ்வளவு மனிதர்களும் சரியாக இருந்தால்தான் ஸ்ருஷ்டி நியமத்தை ஆதாரமாக்கி யேர்ப்படுத்தப்பட்ட ஒரு ஸமுதாயமெனக் கருதலாமென்று ஸமுதாயதத்துவத்தை முன்னோ பிரஸ்தாபித்திருக்கின்றுமல்லவா? சரீரத்தினுடைய அவயவங்களில் ஒன்றுகிய கால், முறிந்துபோன பொழுது கையானது, அக்கையினுடையவும், காலினுடையவும்

வேலைகளைச்செய்யவேண்டியதாய் வந்ததுபோல, முன் வகுக்கப் பட்ட 100 வித தொழிற்காரர்களுள்ள ஸமுதாயத்தினின்றும் 50 பேர்கள் போய்விட்டால் மீந்துள்ள 50-பேர்களுக்கும் இரண்டிரண்டு தொழில்கள் (அதாவது ஒருவனுக்கு வியவசாயமும் வேசவும், மற்றொருவனுக்கு வியாபாரமும், செருப்புத்தைத்தலும் வேறொருவனுக்குப் பொன் வேலையும் மா வேலையும் ஆக இரண்டு வேலை) வீதம் செய்யவேண்டியதாய் வருகின்றது. மூடனுடைய நாவும், கண்களும் போய்விட்டபொழுது கையானது, நாவினுடையவும் காலினுடையவும் கண்ணினுடையவுமாகிய வேலைகளைத் தனது ஸ்வபாவத்திற்கு விரோதமாய்ச் செய்யும்படிக்கும் அக்காரணத்தால் கைக்கும் சரீரத்திற்கும் அளவற்ற சங்கடங்கள் அனுபவித்து நஷ்டமாய்ப் போவதற்கும் இடமானது போல மேற்சொல்லப்பட்ட 50 பேர்களிலிருந்தும் 25 பேர்கள் போய்விட்டால் ஒவ்வொருவருக்கும் 4 தொழில்கள்வீதமும் 25 பேர்களிலும் 15பேர் போய்விட்டால் மீதியுள்ள 10 பேர்களுக்கும் 10 தொழில் வீதமும் 10 பேர்களிலிருந்தும் 9-பேர்கள் பிரிந்துவிட்டால் மீதியுள்ள ஒருவனுக்கு 100 தொழில் வீதமும் (எல்லாத்தொழில்களாயும் தானே) செய்வதற்குப் பாத்தியமுண்டாகின்றது. ஒரு சரீரத்திற்குத் தேவையாயுள்ள எல்லாப்பொருள்களும் அச்சரீரத்தினுடைய ஒவ்வொரு அவயவங்களுக்கும் தனித் தனியே வேண்டியிருப்பதுபோல ஒரு ஸமுதாயத்திற்குத்தேவையாயிருக்கின்ற எல்லாப்பொருள்களும் அச்சமுதாயத்தினுடைய அங்கங்களாகிய ஒவ்வொரு மனிதற்கும் ப்ரத்யேகமாய்த் தேவையாகின்றது. சரீரத்தினுடைய ஒரு அவயவமாகிய கைக்கு வேண்டிய எல்லாப்பொருள்களையும் அக்கையினாலேயே உண்டாக்கிக்கொள்வதற்கு முடியாததுபோல ஸமுதாயத்தினுடைய அங்கங்களாகிய ஒவ்வொருமனிதற்கும் எல்லாத் தொழில்களையுஞ்செய்து எல்லாவிருப்பங்களையும் பூர்த்திசெய்து கொள்வதற்கு ஸாத்யப்படாது. இந்த நியாயத்தால் ஸமுதாயத்தில் மனிதர்கள் குறையுந்தோறும் வேலைகள் அதிகமாயும் கஷ்ட நஷ்டங்கள் பெருகியும் வருவதாகின்றது. (ஸமுதாயத்தின் லக்ஷியம்) ஆனால் இதற்கு நேர் விரோதமாகப் பார்ப்போமாயின் 100 பேர்களுள்ள ஷே ஸமுதாயத்தில் இன்னும் 100 பேர்கள் சேருவார்களாயின் ஒவ்வொரு தொழில்களுக்கும் இரண்டுபேர்களாகவும், 1000 பேர்கள் சேரு

வதானல் ஒவ்வொரு தொழில்களுக்கும் 10பேர் வீதமும் 10,000 பேர்கள் சேருவதானல் ஒவ்வொரு தொழில்களுக்கும் 100 பேர் வீதமும் ஆக இவ்விதமாய் வர வர விருத்தியடைந்து, ஸமுதாய மானது நல்ல பலமுள்ளதாயும் இன்ப வடிவமாயும் ஜீவிக்கும். இந்த நியாயத்தையனுஸரித்து நடைபெருகின்ற ஸமுதாயமானது பெரும்பாலும் எல்லையற்ற மஹாத்துமியத்தையும் மேன்மையையும் வெகு எளிதிலடைந்து விடும். இந்த ரஹஸ்யக் கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டோ அல்லது எக்காரணத்தாலோ கிருஸ்தவர்கள், அவர்களின் ஜனத்தொகையை வ்ருத்திசெய்வதில் இடைவிடாத முயர்ச்சியோடிருப்பதாய்க் காணப்படுகின்றூர்கள். ஆதலால் ஹிந்து ஸமுதாயத்தின் முன்னேற்றத்தை விரும்புகின்றவர்கள், ஸமுதாய அங்கங்களைப் பெருக்குவதற்குப் பாடுபட வேண்டுமேயல்லாது இப்பொழுது (அனுஷ்டானத்தில்)நடந்துவருவதைப்போல ஹிந்து ஸமுதாய அங்கங்களாகிய புலேயர், பறையர் முதலிய ஜாதிகளை ஒதுக்கி வைத்துத் தள்ளுவதற்கு சம்மதமளித்தல் கூடாது. ஆனல், அவர்களை மிகுந்த அக்கரையோடும் அபிமானத்தோடும் பரிபாலித்து விருத்தி செய்து வரவேண்டும்.

ஸமுதாய நியந்தாவின் லக்ஷணமும் கடமையும். நியந்தா = தலேவர்

ஒரு சமுதாயத்தின் தலேவன் அச்சமுதாய சரீரத்தின் அங்கங்களாகிய "கர்ஷகன், சாலியன், செம்மான், தட்டான், வைசியன், க்ஷத்திரியன், ப்ராஹ்மணன்" என்னுமிவ்வெல்லா ஜாதிகளுக்கும் அப்பாற்பட்டவனுய் ஸாக்ஷிமாத்திரனுய் ஒரு ஜாதிக்காரரது ப்ரத்தியேகமான ஸ்நேகத்திற்கோ துவேஷத்திற்கோ அல்லது இரண்டிற்குமோ, உள்படாத மகா தீரனுய் இருக்கவேண்டியவனுவன். இவ்விதமில்லாவிடில் அச் சமுதாயத்திற்கு அபாரமான ஆபத்து விளேந்துவிடும்.

சரீரம்என்பது வாக்குமுதலிய கர்மேந்திரியங்களும், ச்ரோத்ராதிமுதலிய ஞானேந்திரியங்களும் ப்ராணன் முதலிய வாயுக்களும் மனம் முதலிய உட்கரணங்களும் ஜீவனும் ஆத்மாவும் சேர்ந்த ஒருசமுதாயமாகும், இச்சமுதாயத்திற்கு சுரோத்ராதிம் முதலிய எல்லா அங்கங்களும் தனித்தனியே ஒவ்வொரு தொழில்களேச்செய்து (தமது) ஸமுதாயத்தின் உத்தேசத்தை (அதாவது

இந்த பாஸுகங்களை) நிறைவேற்றிக்கொள்ளுகின்றன. சரீரமூ தாயத்தின் தலைவன், இதில் நித்தனுய் (அழிவற்றவனுய்) வாழ்ந்து வருகின்ற ஆத்மாவாகின்றது, ஆத்மாவின் ஸந்நிதானமஹிமையை உதவியாகக்கொண்டல்லவா ஞானேந்திரியமுதலானவை தம் தம் தொழில்களைக்கிரமமாக நடத்திவருகின்றன? தலைவனுகிய ஆத்மா விற்கு, ஜீவனும் மனம் முதலிய உட்கரணங்களும் இந்திரியங் களும் இயல்பாகவே அடங்கியுள்ளனவாம். ஞானேந்திரியங்கள் வழிதவறிச்சஞ்சரிப்பதானுல் ஆத்மா அவைகளுக்கு உண்மையான மார்க்கத்தினைவறிவிக்கும். ஆத்மாவினுடைய (ஸந்ததிகள்) புத்திரர் கள் என்ற நிலைமையில், மனது முதலிய எல்லா அவயவங்களும் சரீரஸமுதாயத்திலிருந்து வருகின்றன. ஞானேந்திரியங்களாகிய அவயவங்கள் ஆத்மாவினுடைய ஹிதத்திற்கும், ஆத்மா ஞானே ந்திரியாதியவயவங்களின் நன்மைக்கும், அவை இரண்டுமாக ஜீவ னதுஸுகவாழ்விற்கும் பாத்யப்பட்டவைகளாகின்றன. ஞானேந் திரியங்கள் முதலிய அவயவங்களால் ஸம்பாதிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களையும் ஆத்மாவினுடைய அநுமதிபெற்று எல்லா அங் கங்களும் பக்ஷபாதமின்றி அனுபவிக்கின்றன. இவ்விஷயத்தில் சரீரத்தின்தலைவனுகிய ஆத்மா ஞானேந்திரிய முதலிய அவயவங் களில் சிறிதும் ஸம்பந்தப்படாதவனுயும், அகந்தை மமதையற்ற வனுயும் யாதொருமாறுபாடுகளையுமடையாதவனுயும் சலன மற்ற வனுயும் நிர்ப்பயனுயும் இருந்துகொண்டு காரியங்களை விசாரித்துச் செய்துவருவான். இந்த நிலைமையானது, எல்லா அவயவங்களுக் கும் எவ்வளவு இன்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது? இவ்விதமான நியமத்தையனுஸரித்து வருகின்ற சரீரஸமுதாயத் தில் துக்கம் லேசங்கூடஉண்டாவதில்லை. ஸ்ருஷ்டிநியமத்தையனு ஸரித்துப்பிரவர்த்திக்கின்ற சரீரம் இவ்விதமேயாம். இதற்கு முற்றிலும் விரோதமாக நடைபெறும் ஒருஸமுதாயத்தைக்கவ னிப்போம். ஆத்மசக்தியைக்கீழ்மிதித்துத்தள்ளி ஜீவனும், மனம் முதலிய அந்தக் காரணங்களும் இந்திரியங்களும் பிரவர்த்திக் கின்றன. அப்பொழுதுதலைவனுகிய ஆத்மா, மேற்சொல்லிய ஜீவன், மனஸ், இந்திரியம்முதலியவைகளுக்கெல்லாம் அடிமையாகி விடும். இந்திரியங்களுக்குத்தாழ்ப்படிந்த மனிதனுடைய வாழ்க்கை, வீணோஷ்டமாய்ப்போவது எவர்க்கும் பிரத்யக்ஷ அநுபவமல்லவா கோபநிஷத்தானது இவ்விதந்தெரிவிக்கின்றது.

நாவிரதோதுச்சரிதாந் நாசாந்தோநாஸமாஹித: |
நசாந்தமாநஸோவாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் ||

"தூர்நடத்தையில் நின்றும் நீங்காதவனும், காமம், குரோதம் முதலியவைகளை அடக்கியாளாதவனும், ஞானத்தினால் பரமாத்மாவையடையமுடியாது" என்பது இதன் பொருள், வேறோரிடத்தில் பின்வருமாறுகாணப்படுகின்றது:—

யஸ்த்வவிஜ்ஞாநவாந்பவத்யயுக்தேநமநஸாஸதா |
தஸ்யேந்த்ரியாண்யச்யாநி துஷ்டாச்வாகிவஸாரதே: ||

"ஞானமில்லாதவனுயும் மனத்திடமில்லாதனுயுமிருப்பவனுக்கு, துஷ்டக்குதிரைகள் தேர்ப்பாகனுக்கடங்காதன போலும் இந்திரியங்கள் அடங்குவதில்லை" என்பது இதன்கருத்து.

இந்த்ரியாணம்ஹி சரதாம்யந்மநோநு விதீயதே |
தத்தஸ்யஹரதிப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி ||

எவனுடைய மனமானது விஷயங்களில் (சிற்றின்பநுகர்ச்சியில்) விருப்பமுள்ள இந்திரியங்களைப்பின்பற்றிச் செல்கின்றதோ அம்மனது, காற்று, கப்பலை நடுச்சமுத்திரத்தில் எவ்விதம் அடித்துக்கொண்டு போகின்றதோ அவ்விதமே, புருஷனுடைய விவேகத்தை இழுத்துச்சென்றுவிடும். ஒருசரீரஸமுதாயம் இந்தநிலைமைக்குவந்தால் அவன் எல்லா அவயவங்களாலும் ஸம்பாதித்து வைத்திருக்கின்ற பொதுதனத்தை அவைகளில் ஏதேனும் ஒரு அங்கமாகிய இந்திரியமானது பலமடைந்து ஸ்வயேச்சையாய் (தனக்குவேண்டிய இன்பானுபவங்களுக்காக) செலவுசெய்யும். தலைவனுகிய ஆத்மா, பிரத்யேகமாய் நேத்திரேந்திரியத்திற்கு வசமாகிவிட்டால் நேத்ரானந்தகரமாகிய நாடகம் ஸதிர் முதலிய காக்ஷிகளுக்கும், ஜிவ்ஹேந்திரியவசனுல் ஜிவ்ஹைனுக்கு (நாவுக்கு) இன்பமளிக்கத்தக்க மிருதுவானபடுக்கை, குளிர்ந்தபுஷ்பம் முதலிய மெல்லிய வஸ்துக்களுக்கும், குஹ்யேந்திரியவசனுயின் பரஸ்த்ரீ ஸம்போக ஸல்லாபங்களுக்கும், இதேபிரகாரம் இன்னுமெந்தெந்த இந்திரியங்களுக்கு வசப்படுகின்றனோ அந்தந்த இந்திரியங்களின் திருப்தியை விரும்பி, மனம் முதலிய எல்லா

அங்கங்களாலும் ஸம்பாதிக்கப்பட்ட பொதுச்செல்வத்தை செல வழித்துவிடுவான். இக்காரணத்தினால் சரீரஸமுதாயம் நாசமடைந்ததாய் அவனுடைய வாழ்க்கை யழிந்ததற்கொப்பாய் முடிந்துவிடும்.

மேலே தெரிவிக்கப்பட்டிருக்கின்ற வண்ணம் கர்ஷகன், காலியன், தட்டான், வைசியன், க்ஷத்திரியன், பிராஹ்மணன் என்பன போன்ற வெவ்வேறு தொழில் வகுப்பினருடைய தலைவனும் சரீரஸமுதாயத்திற்கு ஆத்மாவைப்போல ஒன்றினும்ஸம்பந்தப்படாதவனும் விருப்பங்களை வென்றவனும், மமதையற்றவனும் ஆனால் ஸமரஸனும் இருந்து வரல்வேண்டும். சரீரத்தினுள்ள ஆத்மா யாதொரு இந்திரியங்களுக்கும் வசமாகி விடாதது போல ஸமுதாயத்தின் தலைவனும் கர்ஷகன் முதலிய ஒரு வகுப்பினரிடத்திலும் பிரத்தியேகமான அபிமானம் பூண்டு வசப்பட்டவனாயிருத்தல்கூடாது. ஞானேந்திரியம் முதலான அவயவங்கள் வழிதவறிப்போய் விட்டால் அவைகளுக்கு, ஆத்மா நேரானவழியைக்காட்டுவது போல "கர்ஷகன்முதலிய தொழில் வகுப்பினர் ஒருவருக்கொருவர் கலகமிட்டுக் கொண்டால் அவர்களைத்தலைவன் நேரானநிலைமைக்குக்கொண்டு வந்துசேர்த்து அவர்களின் தொழில்களைக் கிரமப்படி நடத்தி வைக்கவேண்டியவனுவன். சரீரத்தினுடைய எல்லா அவயவங்களாலும் ஸம்பாதிக்கப்பட்டபணத்தை இந்திரியங்களை ஜயித்தவனும் ஆசைகளைவென்றவனும் தலைவனுமிருக்கின்ற ஆத்மாவினுடைய ஹிதத்தையனுஸரித்து, பொதுவாய் எல்லா அவயவங்களிலும் மிதமாய் உபயோகித்து ஜன்மஸாபல்யத்தைத் தேடிக்கொள்வதுபோல, பற்பல தொழில்வகுப்பினசால் தேடப்பட்ட தனக்குவியலை, தலைவன், ஸமுதாயப்பொதுவில் யாதோர் பக்ஷபாதமுமின்றி உபயோகித்து, குறித்தஸமுதாயத்தின் கோரிக்கைகளை ஸபலமாக்கிவிடவேண்டும்.* இதற்குவிரோதமாய்தலைவனுகிய ஆத்மாவை ஒருஇந்திரியமானது தனக்கு வசப்படுத்திக்கொண்டு சரீரத்தினுடைய எல்லா அவயவங்களாலும் ஸம்பாதிக்கப்பட்ட பொதுப்பணத்தை ஒரு அவயவத்தினுடைய பிரீதிக்காகச் செலவு செய்து ஜீவிதத்தை (வாழ்க்கையை) நஷ்டமாக்குவது போல், கர்

* இந்த நியாயங்களை, ஒவ்வொரு ஹிந்துமதத் தலைவரும், மடாதிபதிகளும், ஸ்ட்டாயம் படித்து மனத்தில் உறப்பித்துக்கொள்ளவேண்டும்.

ஷத்ரியன் சாலியன் முதலிய வகுப்பினரில் (ஜாதிக்காரர்களில்) எவ்வ தனும் ஒரு வகுப்பானது, தலைவனைத்தன் வசமாக்கிக்கொண்டு பற் பல தொழில்வகுப்பினர்களால் ஸம்பாதித்து வைத்திருக்கப்பட்ட ஸமுதாய (மூல) தனத்தை ஒரு வகுப்பினரின் ஸுகத்திற்காக உபயோகித்து ஸமுதாய உத்தேசத்தை நிஷ்பலமாகச் செய்து விடுகின்றது. இக்காரணத்தினால், காரணஜாதிக்காரர்களால் தெரிந் தெடுக்கப்படுகின்ற ஒருஸமுதாயத்தின் தலைவன் ஜாதி, பெயர், வர்ணம், குலம், கோத்ரம், பாஷை, வேஷம், ஸ்திரீ, புருஷன் முதலிய அபிமானங்களுக்கு முற்றிலும் உள்படாத ஒரு பிரஹ் மக்ஞானியாயிருக்கவேண்டும். இந்தநிலைமையிலிருக்கின்ற ஒருவன் "ஜீவன் முக்தன், என்றும், பிரஹ்மகவசன் என்றும் விதவத் ஸந்யாஸீ என்றும் ராஜரிஷியென்றும் வேதங்களினாற் புகழப்படு கின்றான். பூர்வகாலத்தில் வாழ்ந்து வந்த *ஸ்ரீராமனும் ஜனகரும் இதற்குஉத்தம திருஷ்டாந்தபுருஷர்களாவர். ஆதலால் ஒருஸமுதா யத்தின் தலைவனும் எந்த ஜாதியிற்பிறந்து வந்தவனாயினும் அவன் சரீரத்தினிடத்தில் ஆத்மா எவ்வித மிருக்கின்றதோ அவ்விதமே இருந்து ஒழுகவேண்டியவனாவான்.

ஸமுதாயவாழ்க் கையும் அதன் முக்கால ஸம்ப வங்களும்.

இனி ஸமுதாயத்தினுடைய சென்ற காலத்தின் தீர்க்க ஜீவிதத்தையும் அநுபவங்களையும் எவ்வித உபாயங்களாலேனும் மறைத்து விடுவதானால், குறித்த-பழமையான ஸமுதாயமானது ஓர் புதிய ஸமுதாயம்போல் தோற்றவும் அதனால் அச்சமு தாயத்திற்கு நீக்கமுடியாத குற்றங்கள்—தோஷங்கள் ஸம்பவிக்க வும் நேருவாகும்.

ஒருமனிதனுக்கு அநேக ஜன்மங்களில் அனுபவித்திருக் கின்ற காரியங் ளெல்லாம் இந்த ஜன்மத்தினுடைய ஆரம்ப காலத்தில் ஞாபகத்திற்கு வருமேயானால் அவனுக்கு இந்த ஜன்மத்தில் புதிதாய் ஒன்றுமேபடிக்க வேண்டியதாய் வராது முன்னர் வாசித்துள்ள பாடங்களை நினைவிற்குக்கொண்டுவந்தால்

*ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் ஆரம்பத்தில், ஸ்ரீநாரத மகரிஷிக் கும் ஸ்ரீவால்மீகி முனிவருக்கும் நடந்த ஸம்பாஷணை இங்கு கவனிக்கத் தக்கது.

இனிமேல் படிக்கப்போகின்ற பாடங்களுக்கெல்லாம் எவ்வளவு உதவியாயிருக்கும்! இவ்விதமுள்ள ஒரு மனிதனுக்கு இந்த ஜன்மம் புதிதாகவோ அல்லது இவ்வுலக அனுபவங்கள் நவநவமாகவோ தோற்றப்படுவதில்லை, முன் (கடந்த) ஜன்மங்கள் முழுதையும் மறந்திருக்கின்ற ஒருவனுக்கு இந்த ஜன்மம் புதிதாகும். இவ்விதம் இருபது வயதோ அல்லது முப்பது வயதோ வாழ்ந்து வந்து உலகப்பழக்கங்களையும், கல்விப்பயிற்சிகளையும் ஸம்பாதித்திருக்கின்ற ஒரு மனிதனுடைய எல்லா ஞாபகங்களையும் அவன் தன்னுடைய இருபதாவது வயதிலோ அல்லது முப்பதாவது வயதிலோ மறந்து விடுவானுயின், அப்பொழுது அவன் புதிதாகப் பிறந்த குழந்தைபோலாகி எல்லா ஸங்கதிகளும் புதிதாகக்கற்றுக் கொடுக்கப்படவேண்டியனவாயும், அவ்விதம் பயிற்சி செய்விக்கப்படுகின்ற ஒவ்வொரு சங்கதிகளும் அக்குழந்தைக்கு (குழந்தையின் நிலைமையிலிருக்கின்ற அவனுக்கு) புதிது புதிதாகத்தோற்றவும் இடமுண்டு.

இதனால் ஒவ்வொருமனிதனுடையவும் வரப்போகின்ற எல்லா மேன்மைகளுக்கும் முக்கிய காரணமாயுள்ளது, "கடந்த ஸம்பவங்களைக் குறித்துள்ள இடைவிடாத ஞாபக சக்திதான்" என அறியப்படவேண்டியதாகின்றது. ஒருவன் எவ்வளவுதான் வித்துவானுயிருந்தபோதிலும் அவன் இதுவரை கிரஹித்துக்கொண்டிருக்கின்ற எல்லாக்கல்வியறிவையும் அவனுல் மறந்து விடக்கூடுமெனில் குறித்தவித்துவானை ஒரு முழுமூடனுகச்செய்துவிடலாம்

அதுபோல ஒரு ஸமுதாயத்தினுடைய நீண்ட (புராதன) வாழ்க்கையையும், அதற்கிடையில் நிகழ்ந்த ஸம்பவங்களையும் விமர்சிக்கின்ற சரித்திரக்குறிப்புகளை எந்தஸமுதாயம் நேர்மையாகத்தெரிந்துகொண்டு அனுசரிக்கின்றதோ அந்த ஸமுதாயத்திற்கு பெரும்பாலும் இவ்வுலகில் நிகழுகின்ற சங்கதிகள்—ஸம்பவங்கள் புதிது புதிதாகத் தெரிந்து கொள்ளவேண்டியனவாக இரா. முன் நிகழ்ந்தவைகளினுள்ள திருடஞாபகமானது தற்காலஞ் செய்ய வேண்டியகாரியங்களுக்கும் இனி வருங்காலத்தில் நடத்தவேண்டிய செயல்களுக்கும் உதவியாக இருந்து நடத்துவதற்குப்பெரியதோர் ஊன்றுகோலாகும். ஹிந்து ஸமுதாயத்தில் இதுவரை நிகழ்ந்துள்ள சகல காரியங்களையும் (சிறிதும் பிசகாவண்ணம்)

சேர்த்து எழுதப்பட்டுள்ள சரித்திரங்களே இக்காலத்திய ஹிந்துக்கள் தெரிந்துகொண்டிருக்கின்றார்கள் என்று வந்தால் அப்பொழுது பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்ற (நற்காலத்திய) ஸம்பிரதாயங்களில் (பழக்க வழக்கங்களில்) யாதொரு புதுமையும் அற்புதமும் அவர்களுக்குத்தோற்ற ஏதுவில்லை. அன்றியும ஹிந்துக்களின் மத்தியில் தினந்தோறும் தேய்ந்துமாய்ந்துமாய்க் கொண்டிருக்கின்ற பழைய ஸம்பவங்களுடைய திவ்யக்ஞானமானது ஹிந்து ஸமுதாயத்தை அநுதினமும் புதிது புதிதாகச்செய்துவரும். "ஒரு ஸமுதாயத்தைப்புதிதாகச்செய்து விடுவதிலுள்ள பரமரஹஸ்யம், அந்த ஸமுதாயத்தினுடைய பூர்வக்ஞானத்தை மறைக்கின்ற ஸம்ப்ரதாயப் பிரயோகத்தினுடைய வைபவக்கோடியைப்பற்றி நிற்கின்றது. இப்பொழுது நவீன வித்யாப்பாசமென்னும், புதிய சீர்திருத்தமென்றும்' புதிய வஸ்துக்களென்றும், ஆரவாரிக்கப்படுவதற்கு முக்கிய காரணமுமிதுதான். பந்தயம் போட்டுக்கொண்டு எல்லோருக்குமுன்னே சென்று விடவேண்டுமென விரும்பி ஓடுகின்ற ஒருவனுக்கு நடுவழியில் நேரிடுகின்ற அபாயங்களிலிருந்தும் அவன் எளிதாகத்தப்பித்துக்கொண்டு உத்தேசித்த பலத்தை (பரிசை) க்கைப்பற்றுவதில்" தான் கடந்து வந்த வழிநடுவில் நடந்த ஸம்பவங்களிலுள்ள நினைப்புக்களாகிய நேயர்களேப்போலும் ஸஹாயஞ்செய்கின்ற அரிய நண்பர்கள் அவனுக்கு வேறு எவரிருக்கின்றனர்? சுறித்த விஷயத்தில் ஹிந்துக்களுக்கு அளவற்ற நஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன என்னும் தத்துவமானது மேதாவிகளாகிய எல்லோரும் ஓரே குரலோடு ஸம்மதித்து அங்கீகரிக்கத்தக்கதாம். ஆதலால் ஹிந்து ஸமுதாயத்தை உத்தாரணஞ் செய்யக் கருதுபவர்கள் இவ்விஷயத்தில் (பழைமையான ஸம்பவங்களிலுள்ள ஞானங்களேப்பொருக்கி சேகரித்து ஸமுதாயத்திற்குப் பிரயோஜனத்தையுண்டுபண்ணுவதில்) மிகுந்த சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும்.

நான்கு உபாயங்கள்

ஒரு ஸமுதாயத்திலடங்கிய ஒவ்வொரு தொழில் வகுப்பினராலும் பரஸ்பரம்நிர்வகிக்கப்படவேண்டிய காரியங்களுக்கெல்லாம் ஸாமதானங்களாகிய முதலிரண்டுபாயங்களேயனுசரிக்கவேண்டுமேயன்றி, பேததண்டங்களாகிய கடையுபாயங்களிரண்டையும் அநுசரித்தல்கூடாது, பேததண்டோபாயங்கள் ஸமுதாயசக்தியை ஸம்ஹாரம்செய்வனவாகும்

ஒரு பிரபு, தன்னுடைய ஒரு வேலைக்காரனை, சாமதானங் களைக்கொண்டும் (அதாவது, நன்மார்க்கோபதேசங்கள் செய்தும் அவனுக்குத்தேவையுள்ள பொருள்களைக்கொடுத்தும்) மற்றொரு வேலைக்காரனைப் பேத தண்டோபாயங்களைக்கொண்டும்(அதாவது எதாகாலமும் பயத்தையுண்டுபண்ணியும் அடி, உதை, வைதல் இவை கொடுத்தும்) வீட்டு வேலைகளைச்செய்வித்து வருகின்ற னென வைத்துக் கொள்வோம். சாமதானங்கள் பிரியத்தையும் பேததண்டங்கள் பயத்தையும் ஆச்சயித்திருப்பனவாம். இந்த நியாயத்தினுல் பிரபுவினுடைய வீட்டு வேலைகள் ''பிரியத்தையும் அப்பிரியத்தையும் ஆச்சயித்தல்லவா நடைபெறுகின்றன? என் பது நன்கு விளங்கும். பிரிய அப்பிரியங்கள் மனித சுபாவங்களா கின்றன.

ஒரு மனிதனுக்கு ஞானமும் தைரியமும் விருத்தியாகுந் தோறும் பிரிய ஸ்வபாவம் பெருகியும், பயஸ்வாபம் குறுகியும் போய்விடும். இக்காரணங்களால் பிரபுவினுடைய சாமதான உபா யங்களைக் கைக்கொண்டு நடத்தப்படுகின்ற காரியங்கள், ''மூத லாவது வேலைக்காரனிடத்தில் ஞானமும் தைரியமும் விருத்தி யாகுந்தோறும் முன்னிலும் பன்மடங்கு நேர்மையாயும் அழகா யும் நடந்து வருவதற்கும்' பேததண்டோபாயங்களைக் கொண்டு நடத்தப்படுகின்ற காரியங்கள், இரண்டாமவனிடத்தில் அறிவும் தைரியமும் பெருகிவருந்தோறும் அடியோடு நின்றுபோவதற்கும் இடமாகின்றது. அதுபோல ஒரு சமுதாயம் பேததண்டோபாயங் களால் நிர்வகிக்கப்படும் பக்ஷத்தில் அச்சமுதாயத்தில் ''காயிகம் வாசிகம், மானஸிகம், ஆத்மீகம்'' என்பனவாகிய வித்யாப்யாசங்கள் விருத்தியாகி உண்மையான (நல்ல) அறிவும், தைரியமும் பெரு கும்பொழுது, பயத்தையே காரணமாக்கி நடத்தப்பட்டு வருகின்ற காரியானுகூலம் நசித்துப்போகவும், சாமதானங்களால் நடத்தப் படும் பக்ஷத்தில் பிரிய சக்தி பெருகி சமுதாயவிருத்தியங்கள் நன்கு நடைபெற்று சமுதாயம் மிக மேன்மையான பதவியைய டையுங்காரணமாவதால் சமுதாயத்தின் அபிவிருத்தியை விரும் புகின்றவர்கள், சாமதானோபாயங்கள் சமுதாயத்தில் திருடமாக பிரதிஷ்டை செய்யவேண்டியவர்களாவர்.

கிரியையும் பிரதி கிரியையும்

எந்தக்கிரியை (Action) க்கும் பிரதிக்கிரியை (Reaction) உண்டாவது அதன் இயல்பாகிய நியமமாகும். (இயற்கைச்சட்டமாகும்.) நாம் ஒரு பந்தை எவ்வளவு பலத்தோடு பூமியில் அடிக்கின்றோமோ அது அவ்வளவு பலத்தோடு வேகமாய் உயரக்கிளம்பி தலைக்குமேற் செல்லும். நாம் ஒருமனிதனை நேசித்தால் நம்மை ஒருமனிதன் நேசிப்பான். நாம் பத்துப்பேர்களை நேசித்தால் நம்மைப்பத்துப் பேர்கள் நேசிப்பார்கள். நாம் நூறுபேர்களை நேசித்தால் நம்மை நூறுபேர்கள் நேசிப்பார்கள். நாம் ஆயிரம்பேர்களை நேசித்தால் நம்மை ஆயிரம் பேர்கள் நேசிப்பார்கள். நாம் உலக முழுதையும் நேசித்தால் உலகமுழுதும்நம்மைநேசிக்கும்.; கொண் டாடும்; போற்றும்; துதிக்கும். நாம்ஒருவனை துவேஷமாக நினைத் தால், ஒருவன்நம்மை துவேஷமாக நினைப்பான். நாம் உலகத்தை துவேஷித்தால் உலகமும் நம்மை துவேஷிக்கும். நாம் ஒருவனை யோ, நூறுபேர்களையோ அல்லது உலகமுழுதையுமோ குறித்து சதியாலோசனை செய்யவாவது, தாழ்த்தவாவது, உயர்த்தவாவது, உதவிபுரியவாவது வணங்கவாவது, வெகுமானிக்கமாவது செய்வ தானால், முறையே அவர்கள் நம்மையும் அவ்விதமே செய்வார் கள். ஸ்ருஷ்டியினுடைய இந்த நியமத்தைத் தடுப்பதற்காவது, தாண்டி (ஓடி) விடவாவது ஒருவராலும் சாத்யமாகக்கூடியதல்ல.

இவ்விதம் ஸ்ருஷ்டியினுள் அநந்தகோடி சக்திகள் லயித்து (ஒடுங்கி)க்கிடக்கின்றன. இவை முக்கியமாக இரண்டு கேந்திரங் களை ஆசிரயித்துக்கொண்டு உலகமாகிய அரங்க மேடையில் நாடக மாடுகின்றன. அவைகளில் ஒன்று அநுலோம சக்தி (Co-operative force) யும் மற்றொன்று பிரதிலோம சக்தியும் (Competative force) ஆகும். ஒரு ஸமுதாயத்திலுள்ள அங்கங் கள் மற்ற அங்கங்களோடாவது அல்லது ஒரு ஸமுதாயம் முழு தும் வேறோர் ஸமுதாயத்தோடாவது அநுலோமசக்தியை உப யோகிக்கவேண்டுமேயன்றிப் பிரதிலோம சக்தியை ஒரு காலத் திலும் பிரயோகிப்பது உசிதமல்ல. அங்ஙனம் பிரயோகித்தால் அந்த ஸமுதாயம் வரவர நசித்துப்போவதாகும்.

அதாவது 100-பேர் கூடிய ஒரு ஸமுதாயத்தில் ஒருவன் 99-பேர்களையும் விழுங்கியும் தீங்கு நினைத்தும், துரோகஞ்

செய்தும், கொன்றும் (இன்னும் பலபல செய்தும்) செல்வத்தைச் சம்பாதித்துக்கொண்டு ஸுகமாய் வாழ்வதற்கு முயலுவதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால், இவ்விதம் 99-பேர்களும் தனித்தனியே ஒவ்வொருவரும் பாக்கி 99-பேர்களின் வசத்திலுள்ள திரவியங்களையெல்லாம் எந்த உபாயத்தினாலாவது கைப்பற்றிக்கொண்டு ஸுகமே வாழ்வதற்குத் துணிவார்கள். இவ்விதமானால் குறித்த ஸமுதாயத்திலுள்ள ஒரு அங்கத்தினுடைய பணம் ஸம்பாதிக்கும் வழியைத் தடுப்பதற்கும் 99-சத்துருக்கள் இருப்பதாய்க் காணப்படுவார்கள். 99-சத்துருக்களுக்கு நடுவில் ஒருவன் ஜீவனியனுய் ஸுகித்திருக்கலாமென்று மனோராஜ்யம் செய்வது கேவலம், பயனற்றதாகத் தீரவேண்டுமே யன்றி வேறு கதியில்லையல்லவா? ஆயிரம்பேர் சேர்ந்துள்ள ஒருஸமுதாயமானால் ஒருவனுக்கு 999-பேர் சத்துருக்களாயும், உலக முழுதுமானால் தனக்கன்னிய மாயுள்ள யாவரும் வைரிகளாயும் ஆவதோடு தானும், அவ்விதமுள்ள ஸமுதாயமும் வீணே நஷ்டமாகிப்போக நேரிடும். இதற்கு திருஷ்டாந்தம், ஸ்ரீராமன் வாலியை மறைந்து நின்று அஸ்திரப் பிரயோகஞ்செய்து ஸம்ஹரிக்கவும், இந்தக் கிரியையின் பிரதிக்கிரியாசக்தியானது *ஸ்ரீராமன் கிருஷ்ணனுக அவதரித்துத்தனது கடைசிகாலத்தில் (பரலோகத்தையடையும் பொழுது)—மறு ஜன்மத்தில் வேடனுகப் பிறந்துள்ள வாலியினுடைய அம்பு தைப்பதற்கு ஹேதுவாகம் ஆயிற்று. ருஷ்யாகாரர்கள் யாதொருகுற்றமுஞ் செய்யாதவர்களாகிய லக்ஷக்கணக்கான சீனர்களின் சிரசைச் சங்கரித்து ஆறுகளை இரத்தவெள்ளமாக்கி அவர்களின் சவசரீரத்தை அந்நதியிலேயே தெப்பமிட்டுச்சம்மானஞ்செய்தனர். இந்தக்கிரியையினுடைய அநியாயகாரமான பிரதிக்கிரியா சக்தியானது உலகத்தினுல், மிகத்தாழ்ந்த நிலையிலிருப்பதாயும் ஒருநிரணம்போல அலக்ஷியஞ் செய்யத்தக்கதாகவும் கணிக்கப்பட்டிருந்த ஜப்பான் ராஜ்ய நிவாசிகளின் மனக்கண்ணுடியினிடத்தில் "காகதாளி நியாயம்போல" வெகுஸமயம்பார்த்து கொண்டு பெரும்பாலும் அவர்களின் சரீரத்தின் உட்புறம் பூராவும் வியாபித்துவிட்டது. அப்பால் அது வெடித்து

*இந்தக்கதையானது, ஈசுவரனுயிருப்பினும், "தான்செய்த கிரியைக்குப் பிரதிக்கிரியை அனுபவிக்க வேண்டியதாய்வரும்" எனும் நியாயத்தை விளக்குகின்றதேயன்றி, வேறன்று.

மஸ்ரா கோர ரூபிணி (யான பத்ரகாளி) யாய் வெளிப்பட்டு, மகா பலசாலிகளும் யுத்தஸாமர்த்தியம் வாய்ந்தவர்களுமாகிய அள வற்ற ருஷ்ய தேசத்தவர்களின் ஜீவரத்தத்தைக் கலக்கியுரிந்து அவர்களை யமபுரிக்குப்பிரயாணமாக அனுப்பிவிட்டனள். ருஷ்யாக் கார்கள் ருஷ்யாக்காரர்களாலேயே கொல்லப் பட்டவர்களாயும் தோற்கடிக்கப் பட்டவர்களாயும் ஆனர்கள். மேல் நாட்டினது ஆகாச மண்டலத்தில் (வான் முகட்டில்) தனது வெற்றிக் கொடியை யுயர்த்திக்கட்டி அஹங்காரங்கொண்டிருந்த கிரீஸ். ரோம், கார்த்தேஜ் என்னும் இம்மகாராஜ்யங்களுடைய உக்ரமஸ் தகங்களை அடித்துத்தகர்த்துத் தவிடு பொடியாக்கித் தரையோடு தரையாய்ப்பரத்தியதும் இம்மகா சக்தியின் புஜங்களேயாம் இனி இதற்கு நேர் விரோதமான அநுலோம சக்தியைக்கவனிப் போம். 100பேர் கூடிய ஒருஸமுதாயத்தில் ஒருவன் 99பேர்களு டைய ஸுகக்ஷேமாதிகளின் பொருட்டு இடைவிடாமற் பாடுபடு கின்றான் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவ்வொ ருவனுக்கு 99பேர்களும் உதவிசெய்வார்கள். இவ்விதமாய் ஒவ் வொருவருக்கும் 99 பங்கு ஸகாயங்களும் அவைகளால் பரி பூர் ணஸுகமும் ஸித்திக்கும். இந்நிலைமையில் ஒருவன் லக்ஷம் பேர் களுடையவோ அல்லது கோடிப்பேர்களுடையவோ அல்லது உல கத்தினுடையவோ க்ஷேமலாபத்திற்காகப் பிரயத்தினஞ்செய்வா னாயின் அம்மனிதனுடைய மேன்மைக்கு உலகம் முழுவதும் உத விசெய்யவும் முயலவும் கடமைப்பட்டு விடுகின்றது. இதுதான் அநுலோம சக்தியினுடைய பலன்.

இனி ஸ்ருஷ்டியிலுள்ள அப்பிரத்தியக்ஷப்பிரதிலோம சக்தி யைப் (Indirect Competitive Force) பற்றிச் சிறிது ஆராய் வோம். அதாவது ஒரு ஸமுதாயத்தில் வியவஸாய விபாக நிபா யத்தையநுசரித்துஎவ்வொரு தொழில் வகுப்பினரும் ஒருவருக் கொருவர் பரம்பரையாய் ஒவ்வொரு பொருள்களையும் கைமாற்றம் (பண்டமாறுதல்) செய்துவருகின்ற ஸம்பிரதாயத்திலுள்ள பாத்ய தைகளை ஏதேனும் ஒருவகுப்பினர் அதிகமான லாபத்தினிடத் தில் மோஹித்து அலக்ஷியஞ்செய்யவும், ஜப்பான் முதலிய வித்தே சிய ஸமுதாயங்களோடு ஒப்பந்தஞ்செய்துகொண்டு மேற்படி பொருள்களை அவர்களுக்குக் கைமாற்றஞ்செய்யவும் நேர்ந்தால்

மேற்படி ஸமுதாயம் வெகு விரைவில் நஷ்டமாய்ப்போய்விடும். உதாரணமாக:—ஆயிரம் குடும்பக்காரர்கள் எகோபித்துப் பருத்தி பயிரிடுகின்றார்களென்றும் அதில் நின்றுமுண்டாகின்ற பருத்தி மூட்டை 1-க்கு 2-ரூபாய் வீதம் நூல் நூற்கின்ற மற்ற ஆயிரம் குடும்பக் காரர்களுக்கும் கொடுப்பதாகவும், அவர்கள் நூற்கட்டு 1-க்கு 4 ரூபாய் வீதம் வேறு வஸ்திரம் நெய்கின்றவர்களாகிய ஆயிரம் சேனியக் குடும்பக்காரர்களுக்கும், கொடுப்பதாகவும் வேஷ்டி கட்டு 1க்கு 6 ரூபாய் வீதம் அவர்கள் மேற்படி ஸமுதாயத்திலுள்ள எல்லோருக்கும் முறையே விற்றுவருகிறார்களெனவும் வைத்துக்கொள்வோம்.

இது அவர்களின் பூர்வீகர்காலம் முதல் பாரம்பரியமாய் நடத்தப்பட்டுவருகின்ற ஒரு ஸம்ப்ரதாயமாகும். இப்பருத்தி வியவஸாயத்தினால் இவர்கள் பெரும் பணக்காரர்களாகித் தங்களுடைய ஜன்ம உத்தேசமாகிய இகலோகபரலோகசுருத்தியங்களை வேத முறைப்படி (ஸ்ருஷ்டி நியமத்தை யனுஸரித்து) வெகு எளிதாக நடத்தி உலகத்திற்கு ஒரு மாதிரி கைமுதாயக்காரர்கள் எனப்பிரஸித்திபெற்றவர்களாயிருக்கின்றார்கள். இவர்களில், தாரித்ரியம், பெரும் வியாதி, அற்பாயுஸ், துராசாரம், ஜாதித்துவேஷம், கலஹம் முதலிய துரிதங்கள்—துன்பங்கள்—அற்பமேனும்பாதிக்காமல் எல்லாவிதத்திலும் கவனிக்கும் பொழுது ஸமுதாயம் முழுதுமுள்ள நிலைமை மிகவும் ஸ்யேச்சையாயும் ஸுகம் நிறைந்ததாயுமிருக்கும். இவ்விதம் எல்லாப்பொருள்களும் கைமாற்றஞ்செய்து சுகவாய் வாழ்ந்த காலங்களில்தான் இவர்களுக்கு (இந்துக்களுக்கு) ஆத்ம ஸம்பந்தமாயும் உலக ஸம்பந்தமாயும் உள்ள பிரபந்தங்கள் (சாஸ்திரக்கிரந்தங்கள்) வேண்டியவண்ணம்—செய்வதற்குச் சௌகரியம் வாய்த்திருந்தது. இவ்விதம் எவ்வளவோ மஹாகாரியங்களைப் புத்தி பூர்வமாக நடத்தி மாறு அவர்களுக்குச் சதாகாலமும் உதவி செய்த நண்பர்களாவரெனின்—அவர்களது தொழில்களில் அந்நியோந்யமிருந்த ஸம்பந்தமும், ஸாதனங்களை— பொருள்களை— கைம்மாற்றஞ் செய்து கொள்வதினாலிருந்த அழகிய முறைகளுமாகின்றன?. எனப்படிப்போலவருமறிவாலல்லவா?

இவ்விதமாக நடந்துவரவே ஆயிரம் குடும்பக்காரர்களால் பயிரிட்டு வரப்படுகின்ற பருத்திக்கு மூட்டை 1-க்கு 2-ரூபாய் லாபமும் 2-ரூபாய் விதம் ஏற்பட்ட விலையும் கொடுக்கின்றோ மென்று விதேசியஸமுதாயக்காரர்களாகியஜப்பானியர்கள்பேற்படி பருத்தி பயிரிடுவோரிடம் சொல்லுகிறார்களென வைத்துக்கொள் வோம். அப்பொழுது இவர்கள், ஸ்வதேசியர்களுக்குக் கொடுத்து வந்ததிலிருந்தும், பருத்தி மூட்டை 1-க்கு 2-ரூபாய் அதிகலாபங் கிடைக்குமே! எனப் பணத்தில் மயங்கி, முன்பு நடந்துவந்த வண்ணம் தங்களுடைய சுய ஜனங்களுக்குக் கொடுக்காது விதே சியர்களுக்குக்கொடுக்க ஆரம்பிப்பார்கள். இவ்விதம்வந்தபொழுது பஞ்சு நூற்பவரும், வஸ்திரம் நெய்வோருமாகிய இரண்டாயிரம் குடும்பிகளின் உபஜீவன மார்க்கம் அடியோடு அடக்கப்பட்டுப் போய்விட்டது! பருத்திகிடையாமையினல் நூல் நூற்கதற்கும், நூற்கிடையாததினல் வேஷ்டி நெய்வதற்குமாக இவ்விரண்டு வர்க்கத்தவர்க்கும் வேலு கதியில்லாததாகிவிட்டது.

இந்நிலைமையிலுள்ள இரண்டாயிரங் குடும்பிகளும் வேறு தொழில்களைச் செய்து முன்னர்ப்பழக்க மின்மையாலும் புதிய தொழில்களில் ப்ரவேசிப்பதற்கு அவர்களின் சரீர நியமங்களும் ஸமுதாய ஸம்பந்தமான கட்டுப்பாடுகளும் திடீரென்று அநுகூல செய்யாததினலும் அவர்கள் முன்புஸம்பாதித்திருந்த ஜங்கம சொத்துக்களாகிய ஸ்வர்ணபரணங்களையும் மற்றுமுள்ள பொருள் களையும் முதலில் விற்று, உபஜீவிக்கத்தொடங்குவார்கள். இங்ங னஞ்சிறிதுகாலஞ் செல்லும்பொழுது ஜங்கமசொத்துக்களெல்லாந் தீர்ந்துவிடவே அப்பால் ஸ்தாவரசொத்துக்களாகிய நிலம், தோட் டம் முதலியவைகளைவிற்று வயிற்றுப்பாட்டைப்பார்க்கவும் ஆரம் பிப்பர், இவ்விதம் கடைசியாக (அதிகமானல்) 100-வர்ஷத்திற் குள் குறித்த இரண்டாயிரங்குடும்பங்களுக்கும் அன்றுடகம் ஆஹாரஞ்செய்வதற்குங்கூட யாதொருமார்க்கமுமில்லாமல் பட்டி னிக்கும் வியாதிக்கும் கலகத்திற்குமாக இவர்களின் விலையேறிய வாழ்நாள் இறையாகிவிடவும், உயர்ந்த ஸ்திதியிலிருந்த இரண்டு கூட்டக்காரர்களின் வம்சங்களும் இப்பூலோகத்தில் பெயர் மாத் திரம் மீந்ததாய்ப்போகவும்நேரும். இதற்கிடையில், பருத்திப்பயிர்

செய்தவர்கள், கொழுத்தபணஞ்சேர்த்துப்பெரியபணக்காரர்களாக வாழ்ந்து வந்தவர்களும் சிறிதுகாலத்திற்குள் மிகமிகத்தாழ்ந்த நிலையைப்பெறவேண்டியவர்களாயினர். ஏனெனின், பிறநாட்டுப் பஞ்சுவர்த்தகர்களின் போட்டியினல் இவர்களது பருத்திக்குவிக்கு கிடையாது போயிற்று. ஆகவே, இவர்கள்கைக்கொண்டிருந்த பருத்திப்பயிரும், வயிற்றுப்பிழைப்பு மார்க்கமும் ஸமாப்தியடைந்துவிடுவதாயிற்று. இனி இவர்களுக்கும் மேற்சொன்ன நூல் நூற்பவரையும் வஸ்திரம் நெய்வோரையும் போலவே, வேறுதொழில்கள் செய்து பழக்கமில்லாமையாலும், சரீர சௌகரியமிடங் கொடாமையாலும் இவர்களும் ஜங்கமஸ்தாவர சொத்துக்களை விற்று ஜீவனம் செய்யத்தொடங்குவார்கள். இந்த நிலைமையில் சிலகாலஞ் செல்லும் பொழுது, பிதிரார்ஜித சொத்துப் பூராவும் அழிந்து விடவே, அப்பால் பட்டினியும் தாரித்திரியமும் பாதித்து முன்னே நசித்துத்துப்போன இரண்டாயிரம் குடும்பங்களைப்போலும் இவ்வாயிரம் குடும்பங்களும் உயிரிழந்தவைகளாகும். இதுதான் அப்பிரத்தியக்ஷப்பிரதிலோம சக்தியின் பலன். இந்தபயங்கரமாகியநாசம், அவரவர்களுடைய பாரம்பரியமாய்நடத்திவருகின்ற ஸாதனப்பொருள்களைக்கைமாற்றஞ் செய்வதினுள்ள லம்பிரதாயங்களை அலக்ஷியஞ்செய்ததினுல் வந்த தல்லவா?

கைத்தொழில்களும் யந்திரஸ்தாபனமும்.

ஒரு ஸமூதாயத்தில் தொழிற்பிரிவு நியாயத்தை யனுசரித்து பலவிதமான கைத்தொழில்களைச் செய்து வெகு காலமாய்-பரம்பரையாய் உபஜீவனம் செய்து வருகின்ற தொழில் வகுப்பினரின் மத்தியில், குறித்த சமுதாயத்திலுள்ள ஏதோ சில தனவான்களாகிய அங்கங்களோ அல்லது விதேசிய சமுதாயக்காரர்களோ அவர்களின் சுய நலத்தையடைவதில் மோஹித்தவர்களாய் கைகளினுல் உற்பத்திசெய்யப்படுகின்ற பொருள்களை யந்திரங்களால் உற்பத்தி செய்து மேற்படி ஸமுதாயத்தில் விநியோகிப்பதனுல் (செலவிடுவதனுல்) கைத்தொழில்காரர்களின் வேலைக்குத் தடை யொன்று தடை கோரிடவும் அதனுல் அவர்களும் அவர்களின் சமுதாயமும் "நாசமடைய ஆரம்பிக்கும்" ஆதலால், இதன் குணதோஷத்தைப்பற்றி இதனடியில் சிறிது விமர்ஜனஞ்செய்வோம்.

ஒரு சமுதாயத்திற்குத் தேவையாயுள்ள எல்லாப்பொருள்களையும் கைத்தொழில்களைக்கொண்டு உண்டாக்கவேண்டுமா? அல்லது ரோவியந்திரங்களால் உற்பத்தி செய்யவேண்டுமா? என்பதைப்பற்றி உள்ள தத்துவத்தை உண்மையாகவே அறியவேண்டுமென்றால், எந்த சமுதாயத்தை உத்தேசித்து இவ்விஷயம் விஸ்தரிக்கப்படுகின்றதோ அந்த சமுதாயத்தினுடைய சகல மர்மங்களையும் ஆதியோடந்தமாய் மிகத்தெளிவாக முதன் முதலில் கவனித்துக்கொள்ளவேண்டியது முக்கியமாதலால் அவ்விஷயத்தில் புத்தியை நுட்பமாகச்செலவிட்டுத் தெரிந்துகொண்ட பின்னரே மற்ற விஷயங்களைத்தீர்மானிக்கமுடியும்.

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கிப்பால் பூலோகத்தின் நானு பாகங்களிலுமுள்ள செல்வங்களை (க்கொழித்து) விருத்திசெய்து கொண்டிருக்கின்ற ரோவியந்திரங்கள் உற்பத்தியாகி அவைகள் வர வர விருத்தியாகவும் பிரபலமாகவும் ஆரம்பித்து அதனால் ஜனசமுதாயத்திற்குச் சித்தித்திருக்கின்ற பொருள்களின் விருத்தியும் மேன்மையும் அளவற்றதாகும்.

ரோவியந்திரங்களுடையவும் கைத்தொழில்களுடையவும் தாரதம்மியத்தைப் பிரிப்பதானால் ஆயிரம் கைத்தொழிலாளிகள் நான்கு மணிநேரங்கொண்டு உற்பத்திசெய்கின்ற பொருள்களை ஒரு ரோவியந்திரத்தின் சகாயத்தால் ஒரே நிமிஷத்தில் உற்பத்தி செய்து விடலாமெனத் தோற்றும். அதாவது கைத்தொழிற்காரர்கள் பல நேரங்கழித்துச் சில பொருள்களையும் ஆவியந்திரங்கள் சில நேரத்திற்குள் பல பொருள் குவியல்களையும் உற்பத்திசெய்வதாகக்காணப்படுகின்றன. இந்த வித்தியாசங்களால்தான் ரோவியந்திரங்களுக்குக் கைத்தொழில்களைக்காட்டிலும் மேலான சர்வ சிலாக்கியதையானது யந்திர சாஸ்திர பார்த்தர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நான்கு பக்கங்களிலும் பரவிப்போகின்ற கைத்தொழில் வேலைகளைக்காட்டிலும் வேஷ்டிமுதலான பொருள்களையுண்டுபண்ணுவதில் ஆவியந்திரங்களுடைய உபயோகங்கள் அபார குணமளிக்கின்றன. அவற்றை அளவிடமுடியாது. "தொழில்களாகிய போர்க்களங்களில் ரோவியந்திரங்களாகிய போர்வீரர்கள்" ஒப்புவமையற்ற தைரியத்தோடு பிரவேசித்து

17820

பற்பல கைத்தொழிலாளிகளாகிய யுத்த வீரர்களோடு இடை விடாது எதிர்த்து அவர்களின் மகா சமர்த்தியம் வாய்ந்த கைக ளின் பராக்கிரம சக்தியை பலாத்காரமாகப் பிடித்து இழுத்தடக் கிக்கொணர்ந்து தங்களுடைய யந்திரங்களாகிய சரீரங்களில் சிறி தும் பிரயாசமின்றிச் சேர்த்துவிடுகிறார்கள். அமெரிக்கா, ஜர்மனி, ஜப்பான், இங்கிலண்டு என்னும் இவ்விராஜ்யங்கள் ஆச்சரியகர மான பல யந்திரங்களுக்கும் இன்னும் பற்பல அற்புதங்களுக்கும் ஜன்ம பூமியாயிருப்பதோடு, மேற்குறித்த விஷயத்தில் இவை, தற்காலம் மற்ற ராஜ்யங்களுக்கெல்லாம் மாதிருகாராஜ்யங்களாயும் விளங்குகின்றன. சென்ற அரை நூற்றாண்டுகளுக்குள் மேற்படி இராஜ்யங்கள் யந்திரங்களையுற்பத்தி செய்வதில் அசாதாரணமான உயர்வையடைந்து எல்லாவற்றிற்கும் மேலானவையாய் ஜொலிப் பதோடு அக்காரணத்தால் இயந்திர சாஸ்திரங்களைப் போன்றுள்ள அந்திய சாஸ்திரங்களைத் தற்காலத்தில் கற்றவரும் மாணக்கர்க ளுக்கு எல்லையற்ற அவாவையும், மூயற்சியையும் பெருக்கத் தொடங்கிவிட்டன. ஜப்பான் பூமி, எண்ணயிரம் இயந்திர சாலைக ளால் சோபிக்கப்பட்டதாய், சர்வ அலகார வஸ்துக்களாலும் சிங் காரிக்கப்பட்டதாய் துலங்குகின்றனள். முன் சொல்லப்பட்ட பிர பலமான அபிப்பிராயங்கள் இயந்திர விஷயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாயிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் ஹிந்து ஸமுதா யத்தின்" மூன்னேற்றத்திற்கு இயந்திரங்களின் விருத்தியானது ஸர்வ ஸாதகமாகும் என்கின்ற ஒருவனுடைய பேரிரைச்சல் (பேசொலி) எவ்வளவு தூரம் சத்தியத்தினின்றும் தாண்டி நிற் கின்றது என ஒருவரும் திடீரென்று சங்கிக்கவேண்டாம். ஆனல் ஒருபதார்த்தத்தினுடைய குணத்தை மட்டும் கிரஹித்துக்கொள் ளுகின்ற சுபாவமுடையவர்க்கும் தோஷத்தைமட்டும் கிரகித்துக் கொள்ள விரும்புகின்ற சுபாவமுடையவர்க்கும் அதனுடைய வர மார்த்த தத்துவம் உள்ளவண்ணம் அறிந்துகொள்வற்குச்சாத்தி யப்படுவதில்லை. அதனல்தான் எல்லாப்பொருள்களும் யந்திரங்க ளாலேயே உற்பத்திசெய்யப்பட வேண்டுமென்றும் அவ்விதமாகச் செய்தால் மட்டுமே தற்காலத்திய ஹிந்து ஸமுதாயத்தினருக்கு உயிர்ப்பிச்சை கிடைக்குமென்றும் சில சமுதாய மேன்மையை விரும்புமன்பர்கள் (பேரிரைச்சல்) இடி முழக்கஞ்செய்கின்றனர்.

17820

இந்த காட்டினுள்ள கைத்தொழிலாழிகளுக்கு யாதொரு கேடும் விளைவிக்காத தீப்பெட்டி, சோப், கண்ணாடி, மெழுகு வர்த்தி முதலியவைகளை உற்பத்திசெய்கின்ற எவ்விதமான யந்திரங்களும் இக்காட்டினர்க்கு அனுகூலமளிப்பவைதாம்; இதற்கு விரோதமாய் உள்ளவை விபரீதத்தை விளைவிப்பனவாம். வஸ்திரம் நெய்கின்ற சாலியர்களும், வேஷ்டி வெளுக்கின்ற வண்ணார்களும், நெல்லுக் குத்துகின்ற ஸ்திரீ ஜனங்களும், மீன் பிடிக்கின்ற செம்படவர் களும், செருப்புத்தைக்கின்ற செம்மான்களும், க்ஷௌரஞ்செய் கின்ற அம்பட்டர்களும், பதனி காய்ச்சிக் கள் எடுக்கின்ற கள் வியாபாரிகளும், தங்கம், வெள்ளி, தாமரம், ஈயம், இருப்பு, கல், மாம் முதலியவைகளில் பல வேலை செய்கின்ற கம்மாளர்களும், மண் பாத்திரம் செய்கின்ற குயவர்களும், எள்ளு, கடுகு, தேங் காய், பருத்திக்கொட்டை, சீரகம், நிலக்கடலை, கசகசா, என்னு மிலைகளையும், இலுப்பை, புங்கை, மாவெட்டி. புன்னை, வேம்பு, முதலிய வித்துக்களையும் ஆட்டி எண்ணை யெடுக்கின்ற வாணியர் களும், இன்னும் பல தொழிலாளிகளாய் எவ்வளவாயிரம் ஜனங் கள் இந்து சமுதாயத்தில் மேற்படி தொழில்களை ஆசரியித்து இப்பொழுது ஜீவித்து வருகிறார்கள் என்று ஜன கணித கணக்கி னால் எல்லோருக்கும் தெரிந்து கொள்ளலாமல்லவா? இவ்வித மிருக்கின்ற இந்தியர்களின் மத்தியில் வஸ்திரம் நெய்வதற்கும் வேஷ்டி வெளுப்பதற்கும், நெல் குத்துவதற்கும், மீன் பிடிப்ப தற்கும் மற்றும் பலவற்றிற்குமாக இயந்திரங்களைத் தருவித்து விதேசியருடையவோ அல்லது சுதேசியரில் தனிகாராயுள்ளவரு டையவோ சொந்த லாபத்தைக்கருதிஸ்தாபனஞ்செய்து மேற்படி தொழில்களை நடத்துவதானால் அவ்விதத்தொழில்களையே இப் பொழுதும் புரிந்து காலக்ஷேபஞ் செய்துவருகின்ற அளவற்ற குடும்பங்களுக்கு உபஜீவன மார்க்கமின்றி பட்டினி கிடக்கவும், உயிரிழக்கவும் ஏதுவாகும்.

அதற்கு ஒரு திருஷ்டாந்தங்கூறுகின்றோம். (இத்திருவனந்த புரத்தில்) இப்பட்டணத்தில் நெல்லுக்குத்தும் யந்திரம் ஸ்தாபிக்க வேண்டுமென்சில (தக்க) அந்தஸ்துள்ள மனிதர்கள் பலமாக ஆலோசனை செய்வதாயும் முயர்ச்சிப்பதாயும் அறிகின்றோம்,

ஆனால், இந்த விஷயத்தைப்பற்றியே முதன் முதலில் ஆராய்வோம். அவர்கள் உத்தேசித்தபடியே நெல்லுக்குத்தும் யந்திரம் ஸ்தாபிக்கப்பட்டன என்று வைத்துக்கொள்வோம். நெல்லுக்குத்துதல் என்னும் தொழிலை இந்நாட்டில் செய்துவருகின்றவர்கள் சாதாரணமாய் தரித்திரர்களும் மரியாதையுள்ளவர்களுமாயிய ஸ்திரீ ஜனங்கள்தானல்லவா? அவர்களின் தொகை "இந்த சாஜ் யத்தைப் பொருத்தமட்டில் சுமார் 50000-பேரிருப்பதாக ஒரு வாறு ஊஹித்துக்கொள்வோம். இவர்கள் அந்தந்தஊர்களிலுள்ள பணக்காரர்களின் வீட்டிற்சென்று நெல்லுவாங்கிக்குத்தி அரிசியாக்கிக்கொடுப்பார்கள். இதற்குக் கூலியாய் சாதாரணமாக இந்தப்பக்கங்களில் இவ்வளவுபடி நெல்குத்தி தீட்டியரிசி கொடுத்தால் இவ்வளவு அரிசி" என்று மாமூலாய் ஒரு அநுபோகச்சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. அதன்படியே கிடைக்கின்ற அரிசியைக் கொண்டுதான் அவர்களின் எளிய (பலசிறு குழந்தைகளடங்கிய) குடும்பத்தைக் காப்பாற்றுவது வழக்கம். மேலான அந்தஸ்திலிருந்தவர்களும், இருக்கின்றவர்களுமாகிய இவ்விடத்திலுள்ள உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலாரும் இவ்விதம் நிலைமையிலிருந்த மாதாக்களின் குழந்தைகளாக இருந்தோம் என்னும் உண்மையை ஒருவரும் மறந்துவிட இடமில்லையென நம்புகின்றோம்! ஸ்திரீகளுக்குக்கொடுக்கின்ற கூலியைக்காட்டிலும் "இயந்திரங்களில் குத்தினால்" எவ்வளவோ லாபமுண்டு என்று வரும்பொழுது லாபத்திலாசைப்படுகின்ற கிராமத்தவர்களெல்லாம் "நெல்லுகளை இயந்திரங்களிலேயே குத்தத் தொடங்குவார்கள். அப்பொழுது ஸ்திரீகளுடைய ஜோலிகள் அடியோடு முடிவடைந்தது" என்று சொன்னால் போதுமல்லவா? அன்றுடகம் நெல்லுக்குத்தி பிழைத்துவருகின்ற ஸ்திரீகளுக்கு அது இடையாமம் போகுமேல் அப்பால் அர்களுடையவும், அவர்களின் குழந்தைகளுடையவுமான கதை எவ்வளவு பரிதாபகரமாயும் துக்கரமாயிருக்குமெனத் தனியே எடுத்துக்கூற வேண்டியதில்லை. அல்லது ஒருக்கால் இவைகளைக்கவனியாமல் மேற்படி இயந்திர ஸ்தாபனஞ் செய்தாலும் அதற்கும் மேலே ஸ்திரீகளின் தொழிலுக்கும் யாதொரு குறைவும் வராமல், பாதுகாப்பதற்கு வேறொரு எளிதான மார்க்கமுண்டு. அதாவது எவ்விதமென்றால், என்ன தொழில்களை நடத்துவதற்காக இயந்திர சாலைகள் ஸ்தாபிக்க

ஆரம்பிக்கின்றோமோ அந்தந்த தொழில்களில் ஜீவிப்பவர்களைப் அந்தந்தப் பக்கங்களில் எவ்வளவு பெயர்கள் இருக்கின்றார்கள் என்று ஆதியிலேயே ஒரு கணக்கெடுக்கவேண்டும். அப்பொழுது அந்தப்பக்கங்களில் எவ்வளவு தொழில்காரர்களிருக்கிறார்கள் என்று நிச்சயமாகத்தெரிந்துவிடும். இவர்களின் கைவழியாக உற்பத்தி செய்யப்படுகின்ற தொழில்களை நடத்தப்போகின்றவர்கள், அதற்கு முன்னமே இவர்களின் அன்றாடக வயிற்றுப் பிழைப்பிற்கு யாதொரு இடையூறும் வாராவண்ணமும் அவர்கள் தமக்குத்தாமே நிர்ணயித்துக்கொள்ளத்தக்க வண்ணமும், வேறு ஏதேனும் எளிதான தொழில்களை அவருக்குக்கற்றுக்கொடுக்க வேண்டியது. இதுயந்திரசாலை ஸ்தாபிப்பவரின் பேரிலுள்ளமுக்கியமான வொருகடமையாகும். இவ்விதஞ்செய்வதானால் அந்நாட்டு வாசிகளுக்கும் இயந்திர சாலை ஸ்தாபித்தவர்களுக்கும் நெற்குத்தி வாழுகின்ற ஷை ஸ்திரீகளுக்கும் யாதொரு விபரீதம் விளைவதற்கும் இடமுண்டாகாது.

இதன்றியும் குறித்த யந்திரசாலை ஸ்தாபிக்கின்ற விஷயத்தில் அநுகூல அபிப்பிராயத்தைப் பிரபலப்படுத்துவதற்கு வேறொரு நல்ல உபாயமுண்டு. இந்தியாவில் எந்தெந்தப்பிரதேசங்களில் நெல் அரிசுத்தல், வஸ்திரம் நெய்தல், முதலிய தொழில்களில் கைதேர்ந்த வேலைக்காரர்கள் இல்லாதிருக்கின்றனரோ அந்தந்தப் பிரதேசங்களில் ஷை யந்திரஸ்தாபனங்கள் கேடு விளைவிப்பனவல்ல வென்று பிரத்தியேகமாய் அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் இன்னுஞ்சிலர் தவறுதலாக நினைத்து இதன் கீழே விவரிக்கப்படுகின்றவண்ணம் அபிப்பிராயப் படுவதாகக்காணப்படுகின்றனர். லக்ஷம் நெசவு தரிகளில் கிரமமாய் வேலை நடந்து வருகின்ற ஒரு பிரதேசமாயிருந்தாலும் அவ்விடத்தில் ஒரு வேஷ்டி நெய்கின்ற யந்திரத்தை ஸ்தாபிப்பதனால் யாதொரு விரோதமும் வரப்போவதில்லை. ஆனால் ஒருசமையம் கைத்தரிகள் முழுதும் நின்றுபோகும்படி நேரிடலாம். அதையொரு பிரமாத காரியமாக கணிக்கவேண்டியதேயில்லை. அங்ஙனம் தரிகளில் வேலை செய்து வந்தவர்களுக்கு இவை அல்லாவிட்டாலும் இன்னும் எவ்வளவோ தொழில்களைத் தெரிந்துகொண்டு வேலை செய்யலாமே!" இந்த விதமான ஸமாதானமானது பணத்திலுள்ள ஆசையினால் ஸமு

தாய நியாய சாஸ்திரத்தைப் பகுத்தறிய வியலாத இயந்திரசாலை களை ஸ்தாபிப்பவர்களுக்கோ அல்லது பட்டிக்காட்டில் வாசஞ்செய் கின்ற சில உயர்ந்த புத்திக்காரர்களுக்கோ தோற்றக்கூடுமென்ப தேயன்றித் தொழில்களில் பழகியவர்களுக்கு உண்டாவது பிரய சமாகும். இதனைக்குறித்து இங்கு சிறிய உதாரணமொன்றைத் தெரிவிப்போம். திருவிதாங்கூர் கவர்ன்மெண்டு வருஷந்தோறும் உத்யோகஸ்தர்களுக்கு 40லக்ஷம் ரூபாய் சம்பளங்கொடுத்துவரு வதாக நினைப்போம். இதில்20லக்ஷம்ரூபாய் மட்டும் செலவுசெய்து ஷைகவர்ன்மெண்டு காரியங்களை முன்னிலும் மேலான படியில் அழகாயும் விரைவாயும் நடத்துவதற்கு ஏதேனும் ஒரு உபாயம் உண்டு என்று வந்தால் அந்த உபாயத்தை மேற்குறித்த கவர்ன் மெண்டு மிக்க ஆதரவுடன், சிரசினால் அங்கீகரிக்குமென்பதில் அபிப்பிராய பேதங்களுண்டாவதற்கிடமில்லையல்லவா! அதாவது கவர்ன்மெண்டு காரியங்களையெல்லாம் வெகு சாதுரியமாய் நடத் தத்தக்க யோக்யதை சித்தித்திருக்கின்ற ஒரு புதுமாதிரி யந்திரம் தற்காலத்திய மேதாவிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதென் றும் அதற்கு இருபது லக்ஷ ரூபாய்தான் விலை பிடிக்கின்றதென் றும் வரும்பக்ஷத்தில், வருஷந்தோறும் வருகின்ற 20லக்ஷ ரூபா வுக்கு மேலுள்ள லாபத்தையும் சௌகரியத்தையுமுத்தேசித்து நிச்சயமாய் அக்கணமே; அந்த யந்திரத்தை கவர்ன்மெண்டு வாங்கி உபயோகித்து விடும். அப்பொழுது கவர்ன்மெண்டு உத்தி யோகத்திலிருந்து வருகின்ற ஸர்வ ஜனங்களுக்கும் பிழைக்க வழி யில்லாமற் போவதனால் அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு வெகு கோலாஹலமாய் கவர்ன்மெண்டோடு நேரே எதிர்த்துப்பெருங்கலகமிட்டுச் சண்டை செய்து மேற்குறித்த யந் திரத்தை அடுத்த நிமிஷத்திற்குள்ளேயே எடுத்தெரித்துச் சாம்ப ராக்கி ஆகாய வீதியிலள்ளி யெரிந்துவிட வேண்டுமென வற்புறுத் தத்துணிவார்களென்பதில் கடுகளவும் சந்தேகமுண்டோ? கவர்ன் மெண்டானது நீங்களெல்லோரும் வேறு தொழில்களைப்பார்த்துக் கொள்ளுங்கள் என்று மட்டும் இவர்களுக்கு உபதேசிப்பதனால் இவர்கள் சமாதானமாயடங்கி பணிந்து அந்நியத்தொழில்களில் பிரவேசித்துக்கொள்வோமா? என்று இப்பொழுதுத்யோக நிலை மையிலிருப்பவர்கள் ஒரு முறை ஆலோசனை செய்து பார்த்துக்

கொள்ளட்டுமே? ஆனலப்படி ஒருக்காலும் லம்பவிக்கக்கூடிய தல்ல. இதுபோல்தானிருக்கும் கெல்லுக்குத்துக்காரர்கள் நெசவுக் காரர்கள் வண்ணர்கள் முதலியவர்களினவஸ்தையும் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆதலால் இந்நிலைமையிலிருந்து வருகின்ற தொழிலாளிகளின் பிரதேசங்களில் மேற்சொல்லிய வண்ணம் யந்திரங்களை ஸ்தாபிப்பது மிகவும் ஸாசகரமாகும். அல்லது ஒரு சமையம் அநேகம் கை நெசவு தரிகளால் நிறையப்பட்ட அந்தப்பிரதேசங்களிலேயே ஒரு நெசவு யந்திரம் ஸ்தாபிக்கப்பட வேண்டும், என்றால் யந்திரத்தினுலுற்பத்தி செய்யப்படுகின்ற வஸ்திரங்களை அந்தப்பிரதேசங்களில் விற்கமுடியாதாதலால் நெச வுதரியில்லாத அந்நியஸ்தலங்களுக்கு அனுப்பி விற்பனை செய்து கொள்ளவேண்டும். இப்பொழுது நடந்த வங்காளப்பிரிவோடு கூட ஸ்வதேசிய மூவ்மெண்டு (சுதேசிகள் உற்பத்திசெய்கின்ற பொருள்களை மட்டும் இந்தியர்கள் வாங்கி உபயோகித்தல்) என் னும் ஏற்பாடு ஆரம்பித்து அதனை இந்தியாவெங்கும் அநுஷ்டா னத்தில் கொண்டுவரவேண்டுமென்று சில கண்ணியமுள்ள மனி தர்கள் செய்து வருகின்ற பெரு முயர்ச்சியானது ஹிந்து ஸமு தாயத்தினுடைய வருங்கால மேன்மைக்கு ஒரு பலமான அனுக் கிரஹமாகும். ஆனலிவர்கள் கிறிது சாவதானமையும் ஸூக்ஷமமை யும் பிரவர்த்தி செய்திருப்பார்களானல் அடிக்கடிக் கோணி நடந்து எறிக்குதிக்கவேண்டிய ஆவசியகம் நேர்ந்திருக்காது ஆதியில் இவர்கள் செய்யவேண்டியது இவ்வளவுதான். அதாவது, இந்தியாவின் எந்தெந்த பாகங்களில் என்னென்ன தொழிற்காரர் கள் வேலை செய்து வருகிறார்களென்றும், அவ்விதமான தொழிற் காரர்களினல் அந்தந்தப் பிரதேசங்களுக்கு தேவையானபொ ருள்கள், (சாமான்கள்) கிடைத்து ஜனங்களின் ஆவல்நிறைவேறி வருகின்றதாவென்றும், அவ்விதம் நிறைவேறிவந்தால், அம்மாதிரி யானபொருள்கள் முழுதையும் அந்தப்பிரதேசங்களுக்கு அனுப்பிக் கொடுக்கவேண்டிய ஆவசியகமில்லையெனவும் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல், எல்லாப்பொருள்களோ, அல்லது அத்தே சத்தில்உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் செலவு நீக்கிப் போதாமல் வருகின்ற பொருள்களோ, எந்தெந்த இனங்களில் எவ்வெவ்வளவு வேண்டியதாய் வருமென்றறிந்து கொண்டு அத்

தலைவர்கள், தேவையாய வருகின்ற பொருள்களையுற்பத்தி செய்து கொடுக்கவேண்டும். இவ்வாறு கவனித்துச்செய்யாவிடில் பெரிய பெரிய குழப்பங்களுக்கிடமுண்டாகி எல்லாக்காரியங்களுக்கும் நன்மைகளுக்கும் தடங்கல் வரும். எவ்விதமென்றால், திருவிதாங்கூர் நாட்டுத்தரிகளில் உண்டாகின்ற நேரியல் முதலிய பலவித வஸ்திரங்களும், மாஞ்செஸ்டரிலிருந்து வருகின்ற வஸ்திரங்களும் பாஸ்பாம் மூஷ்டி யுத்தம் நடத்திக்கொண்டிருக்கின்ற இக்காலத்தில் வங்காளத்திலிருந்தும் நாட்டு வஸ்திரங் (சரக்கு) களை இத்தேசத்திற்கு விற்பதற்காகக்கொண்டு வருவதில் பெரிய பிரயோஜனமொன்றுமில்லையென்பதோடுமட்டுமின்று; இவ்விடத்திய வஸ்திரங்களோடு பொருதிஜயிப்பதற்கு அவைகளால் மூடியாதனவாய்த்தோல்வியுற்றும் வெட்கத்தோடு திரும்ப ஓடிப்போக வேண்டியதாயும் வந்துசேரும். இவ்விதமான தடங்கல்களை சுதேசாபிமானிகள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கவனிக்கவேண்டும். உலகத்தில் ஏதேனும் சிலர் தங்களுடைய உதாஸீனத்தன்மையினாலோ அல்லது புதிய சீர்திருத்தமாகிய பரிஷ்காரத்தின் அந்தக்கோடியிலுள்ள ரஸிகத்தன்மையினாலோ மனித சரீரங்களால் இயல்பாகவே செய்து கொள்ளக்கூடிய தொழில்களைக்கூட இயந்திரங்களிடம் ஒப்பு வித்துவிட்டு ஸுகமாக வாழ்வதற்கு முயலுகின்றார்கள். இதைக்காட்டிலும் மேலான அறிவின்மை வேறொன்றுமில்லை. கைகளினால் செய்யக்கூடிய எல்லாக்காரியங்களையும் இயந்திரங்களைக்கொண்டு செய்வதானால் முன்னிலும் பன்மடங்கு, வேலைகளுக்கு இலகுவும் சௌகரியமும் சித்திக்கும். நடப்பதற்குக்கூட இவ்வித யந்திர சகாயம் கிடைத்தபொழுது சௌகரியம் இரட்டிக்க ஆரம்பித்தது. கேட்பதற்கும் காண்பதற்கும், வாசனையறிவதற்கும், ஆகாரமூட்கொள்வதற்கும், மலஜல விஸர்ஜனஞ்செய்வதற்குமாக இவை எல்லாவற்றிற்குங்கூட யந்திரங்கள் ஏற்பட்டுவிட்டால் அந்த ஆனைச்சோம்பேரிகளாகிய ஸுக புருஷர்களுக்கு, இதனிலுமேலாய சௌக்யமளிக்கின்ற நிலைமை மற்றொன்றுமே வேண்டியதாக வராது. தற்காலத்திய ஹிந்து மாணவர்கள், விநோதத்திற்காகவோ சீர்திருத்த ருசியைதாங்களுமறிந்திருப்பதை வெளியிடுதற்காகவோ முதன் முதலில் மூக்கில் கண்ணாடி தரித்துப்பழகுகின்றனர்! பின்னர் சில நாட்

செல்லுங்கால் கண்ணுடியை எடுத்தவுடன் கண்தெரியாத நிலை மைக்கு வந்து சேருவார்கள். இந்தப்படிப்பானது நல்ல கண்ணைக் குருட்டுக் கண்ணுகச்செய்வதற்கு ஒரு புதிய வழிதானென்று அதனையனுபவித்தறிந்த பலருஞ்சொல்லுதுண்டு. எவர்கள் இயற் கைச்சட்டப்படி செய்யவேண்டியவைகளாகிய செய்ல்களையெல் லாம் இயந்திர உபாயங்களால் நடத்த ஆரம்பிக்கின்றனரோ அவர்கள் உயிரில்லாத ஒரு யந்திரத்துக்குச்சமமாக ஆகிவிடுவார் கள். மனிதனுடைய கைகால் முதலிய அவயவங்களாலியல்பா கவேசெய்யப்பட்டுவருகின்ற காரியங்கள் பிரகிருதியையனுசரித்த (தெய்வீகம் வாய்ந்த) வைகளாகின்றன. யந்திரங்களாலும், மற்ற சாதனங்களாலும் நடத்தப்படுகின்றவை, பிரகிருதிக்கு விபரீதங் கள் (கேவலம் மனிதத் தன்மையுள்ளவைகள்) ஆகின்றன. மேஞட்டு மேதாவிகளில் ஒருவராய் கணிக்கப்பட்டு பிரபல சம்ஸ் கிருத வித்வானுயும் விளங்கிவந்த மிஸ்டர், மாக்ஸ் முல்லர் இவ்வி தமெழுதுகின்றார்;- "What is Natural is Divine, the Super-Natural is human" இயல்பாக அமைந்தது எதுவோ அது தெய்வத்தன்மை வாய்ந்ததும். இயற்கையைக்கடந்து நடத்தப்ப டுவது மனிதத்தன்மை பொருந்தியதுமாகும்.

முக்யமாய் சரீர ஆரோக்கியத்தை விருத்திசெய்வதில் கைத் தொழில்களுக்குள்ள மாஹாத்மியம் மற்றொன்றுக்குமேயில்லை. பூர்வ காலத்தில் இவ்விந்திய நாட்டில் நடத்தப்பட்டுவந்த நெசவு தொழில் முதலான கைத்தொழில்களின் பதவி, மிகவும் கொண் டாடத்தக்க நிலையிலிருந்ததென்பதைத் தெளிவாய் வெளியிடுவ தற்குப் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

சில காலங்களுங்களுக்கு முன் காச்மீரதேசத்தில், வியவகார ஸம்பந்தமாய் ஒரு ஸ்திரீயானவள் நியாயாதிபதியின் முன்பாக அழைத்து வரப்பட்டபொழுது கோர்ட்டாரை அவமதித்ததாய் அந்தஸ்திரீ அக்கணமே தண்டிக்கப்பட்டாள். காரணம் யாதென் ருல் அப்பொழுது அந்தஸ்திரீயானவள் தனது இடையில் ஆடை யின்றி நிர்வாணமாய் இருந்தாள் என்பதாம். கடைசியில் அம் மாது, அந்நிய நாரிகளால் பரிசோதிக்கப்பட்ட காலத்தில் அவள் ஏழுசுற்றுப் பட்டு வஸ்திரம் தரித்திருந்தாள் என வெளியான

தால் அக்கணமே கியாயாதிபதி, அம்மாதினிடத்தில் மன்னிப் புக் கேட்டுக்கொண்டார் என அறிகின்றோம். சரீரத்தின் நிறம் முதலிய சுபாவத்தினின்றும் வேறு பிரித்தறியமுடியாவண்ணம் பட்டு வஸ்திரங்கள் நிர்மிக்கப்படவேண்டுமாஞல் அக்காலத்தில் வாழ்ந்து வந்த கைத்தொழிற்காரர்களின் கிலே மதிக்கமுடியாத புத்தி நுட்பமானது எவ்வளவுதூரம் விரிந்திருக்கின்றதென்று எவர்களும் எளிதிலுணர்ந்துக் கொள்ளலாம். அதலால் ஹிந்து ஸமுதாய அபிமானிகள், குறித்த சமுதாயத்தில் ஒவ்வொரு பிர தேசங்களிலும் தனித்தனியே தொழில் செய்பவர்களாலேயோ அல்லது இந்தியா முழுதிலுமுள்ள கைத்தொழிலாளிகளா லேயோ உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் வரவுசெலவு (Supply and Demand) வித்தியாசங்களே ஸூக்ஷமமாய்த் தெரிந்துகொண்டு உசிதம்போல் கைத்தொழில்களே, மீண்டுமுத் தாரணஞ்செய்து நிலே நாட்டவும் அத்தியாவசியகமாயின் தேவை யுள்ள இடங்களில் நூலியந்திரங்களே ஸ்தாபிக்கவும் வேண்டிய வராவார்.

ஸ்வாத்மாச்ரய சக்தியும்பராத்மா ச்ரய சக்தியும்

இனி ஸ்ருஷ்டியினுள்ளே மறைந்து கிடக்கின்ற ஸ்வாத்மாச்ரய (Self-dependence) பராத் மாச் ரய (Over – dependence) சக்திகளேப்பற்றி ஆராய்வோம். எந்த ஸமுதாயம் பூரணமான மேன்மையோடு ஸதா காலமும் விளங்க வேண்டுமெனக்கருது கின்றதோ அந்த ஸமுதாயமானது மேற்குறித்த ஆத்மாச்ரய சக் தியை (ஒரு சமுதாயம், அதன் எல்லா அங்கங்களாலும் நன்கு வேலே செய்யப்பட்டு ஜீவித்திருத்தலே)க் கைக்கொள்ள வேண்டும். இதற்கு விரோதமாய் பராத்மாச்ரயசக்தியை (ஒருஸமுதாயம், அன்னிய ஸமுதாயங்களால் முயர்ச்சிசெய்து ஸம்பாதிக்கப்பட்ட பொருள்களாகிய பலன்களேயுண்டு உயிர்வாழ்வதை) அனுஸரித்துக் காலக்ஷேபஞ்செய்து வருவதாஞல் குறித்த ஸமுதாயம் அதி விரைவில் நாசமடைய வேண்டியதாய் விடும்.

ஒருகாட்டில் புலி, கரடி, சிங்கம், செந்நாய் முதலிய மாம்ச பக்ஷிணிகளாகிய துஷ்ட மிருகங்களும் யானை, மான், முயல், ஆடு'' என்பன வாதி (சாக பக்ஷணிகளாகி) ய சாது மிருகங்களும்

வாழ்ந்து வருகின்றன. இவற்றில் மாம்ஸ பக்ஷணிகளாகிய மிருகங்கள் சாகபக்ஷணிகளாகிய மிருகங்களை வேட்டையாடிப்பிடித்துத் தின்கின்றன. சாகபக்ஷிணிகளாகிய ஸாது மிருகங்களோ வென்றால் அவற்றினின்றும் உயிர்தப்பித்துக்கொள்ள விரும்பினவாய், ஸதாகாலமும் கண் கொட்டாது விழித்துக்கொண்டே இருக்கின்றன. காட்டிலுள்ள எல்லாமிருகங்களும், அநேகமாய் மூன்று விதமான புத்தி (விருத்தி)களை பிரதானமாய்க்கைக் கொண்டு அவைகளின் ஜீவனைக் காப்பாற்றிக்கொண்டுவருகின்றன. அவையாவன:-

1. சத்துரு புத்தி
2. உபஜீவன புத்தி
3. மித்திர புத்தி

அதாவது ஒரு மிருகத்திற்கு சத்துரு வர்க்கங்கள் இன்ன இன்னவையாகுமென அது அறிந்துகொண்டு அவற்றினின்றுந் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதாலும், அதற்கு (சத்துரு இன்னதென்றறிகின்ற) சத்துருபுத்தியும், தந்தமக்குவேண்டிய இரைகளை அவை தமக்குத்தாமே தேடிக்கொண்டு தின்ன வேண்டியிருப்பதனால் அவற்றிற்கு இயல்பாகவே அமைந்த உபஜீவனபுத்தியும், இன்ன இன்ன மிருகங்கள் தம்மை ஹிம்ஸிப்பவையல்லவென்று நீண்டகாலப்பழக்கத்தினால் உணர்ந்து அந்தப்பிராணிகளிடத்தில் அவை வெளியிடுகின்ற மித்திர புத்தியும் அவைகளின் உயிர் வாழ்க்கையென்னும் மாளிகையைத்தாங்கி நிற்கின்ற பிரதான ஸ்தம்பங்களாகும். இங்கு தெரிவித்த மூன்றுவித புத்திகளாகிய சக்திகளும் அரணியத்தில் வாழ்ந்து வருகின்ற ஒவ்வொரு மிருக வர்க்கங்களுக்குள்ளும் அளவிட்டுக் கூறமுடியாவண்ணம் வெகு காலத்திற்கு முன்னமேயே தொடங்கி அச்சிறிய நிலையினின்றும் முறையே வளர்ச்சிபெற்று வெகு அழுத்தமாய்ப் பதிந்து கிடப்பவையாகும்.

இவ்விதமான சக்திகளை ஆச்சரயித்து அல்லது ஸ்ருஷ்டியின் இயல்பாகிய நியமமாஹாத்மியத்தை மாத்திரம் கைக்கொண்டு, வரவரமேல் நிலையை அடைந்து போவதைத்தான் இங்கு "ஸ்வாத்மாச்சரயம்" என்னும் காரணப்பெயரால் குறிக்கப்பட்டது.

பராத்மாச்ரயசக்தி (Over-dependence)

மனிதர்கள், மேற்குறித்த மிருக வர்க்கங்களில் இருந்து ஏதேனும் மிருகங்களைப் பிடித்து நாட்டிற்குக் கொண்டுவந்து அவரவர்களின் வீடுகளில் கட்டிவளர்க்கின்றார்களெனவைத்துக்கொள்வோம். அவைமுன்பு, ஸ்வயமாகவே இரை தேடிக்கொள்வதற்கு பதிலாக இப்பொழுது அவைகளை வளர்க்கின்றவர்கள் தான் தினி போடவேண்டும்! அவைகளை எதிர்ப்பதற்காக வருகின்ற சத்துருக்களில் நின்றும் அவைகள் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொண்ட நிலைமையொழிந்து அவற்றைக்காப்பாற்றி வருகின்றவர்களை இப்பொழுது அவைகளைத்தடுத்தல் வேண்டும். அவற்றின் நண்பர்களோ வென்றால் அவைகளுடன் ஸதாகாலமும் பழகியும் இணங்கியும் வருகின்ற போஷகர்களேயாவர். இந்தமிருகங்களிடத்தில் முன்னர் இயல்பாயமைந்திருந்த மூன்றுவித புத்திகளும் நாள் தோறும் நாள் செல்லச்செல்லச் சோர்ந்தும் தேய்ந்தும் வந்து இரண்டு மூன்று தலைமுறைக்குள் பெயர் மாத்திரமே மிஞ்சினவாயும் ஆகிவிட்டன. அதாவது அவைகளின் பூர்வவாசனைகளும் (மூன்றுவித ஸூக்ஷ்ம புத்திவிருத்திகளும்) சிறிது சிறிதாக மாறிக் கடைசியில் ஒன்றுமில்லாது சூன்யமாயிற்று. அப்பால் அவைகளைக் காப்பாற்றி வருபவர்களின் அபிப்பிராயங்களுக்கு இணங்கிய தொழில்களை மேற்படி மிருகங்களைக்கொண்டு செய்விக்கத்தக்க நிலைமையில் அவைகளை ஒவ்வொரு புதிய ஸம்பிரதாயங்களில் (வழக்கங்களில்) பழக்கப்படுத்தி (முன்பும் பின்பும் செல்லுதல், ஓடுதல், இரு கால்களால் நடத்தல், முன்னங்கால்களைத் தூக்கிக்கொண்டு பின்னங்கால்களால் நடத்தல், ஒற்றைக்காலால் நிற்றல், முதலிய சர்க்கஸ் வித்தைகளைப்பழக்கிவைத்தல்) வரவும் ஆரம்பிப்பார்கள். கடைசியில், முன்பு அவைகளுக்குண்டாயிருந்த மூன்றுவித புத்திகளையும் அவை முற்றிலும் மறந்து விடுவதுமன்றிப் புதிய தொழில் வித்தைகளில் நல்ல சாமர்த்தியம் வாய்ந்தனவாயும் ஆகவேண்டியிருக்கின்றன. இந்த நிலையையடைந்த மிருகங்களுக்கு ஒரு சமயம், அவைகளை வளர்ப்போர்கள் தினி போடாவிட்டால் (அவைகள் முன்னர், தமக்குத்தாமே இரைதேடியுண்டு ஜீவித்துவந்த ஸம்பிரதாயம்) உபஜீவனபுத்தி அடியோடு நசித்துப்போய்விட்டதால் அப்பொழுது அவை இரை தேடப் போகாமல் வீணே பட்டினி கிடந்து இறக்கவேண்டியதாகி வரு

கின்றது. அல்லது ஒருக்கால் இந்த மிருகங்களைக்கொல்வதற்காக எதேனும் சில சத்துரு மிருகங்கள் வந்து எதிர்க்கும்பொழுது அவைகளைக்காப்பாற்றுபவர்கள் ஓடிவந்து காப்பாற்றிவிடின் அப்பொழுதும் இவை, சத்துருக்களின் வசப்பட்டு உயிர் விடவேண்டுமேயன்றி வேறு கதியில்லை யென்பதோடுமட்டுமில்லை. சத்துருக்களையறியும் வண்ணம் முன்னரமைந்திருந்த புத்திமுழுதும் அழிந்துவிட்டமையால் அச்சத்துருக்களிடமிருந்தும் உயிர் தப்பிக்கொள்வதற்கு அவைகளால் நினைக்கக்கூட சாத்தியப்படுவதில்லை.

அரண்ணியத்தில் வாசஞ்செய்த காலத்தில் ஸ்வாதீனாச்ரய சக்தியைப் பிரதானமாக வைத்துக்கொண்டு ஸுகமே வாழ்ந்து வந்த மேற்படி மிருக சமுதாயம் இப்பொழுது நாட்டின் கண் வந்து பராச்ரய சக்திக்கு அடிமைப்பட்டுப் போனதாலல்லவா அவைகளுக்கு இவ்வித ஆபத்துக்களையும் ஸங்கடங்களையும் அனுபவிப்பதற்கு இடமாயிற்று? என மேலே விஸ்தரிக்கப்பட்ட ஓவ்வொருதிருஷ்டாந்தங்களானும்ஸ்பஷ்டமாய்துலங்குகின்றதல்லவா?

ஸ்வாதீனாச்ரய புத்தி. ஹிந்துக்களின் உயிர்நிலை

இவ்விதந்தான் முன்னோர்களாகிய ஹிந்துக்கள் தங்களுடைய ஸமுதாயத்திற்கு உலகசம்பந்தமாயும் ஆத்மார்த்தமாயும் என்ன என்ன பொருள்கள் தேவையாயிருந்தனவோ அவைகளை அவர்கள் வியவசாய விபாக நியாயத்தையனுசரித்து தமக்குத்தாமே ஸம்பாதித்துக்கொண்டும் தங்களுடைய ராஜ்யத்தையாவது அல்லது சமுதாயத்தையாவது அல்லது ஸமுதாய அங்கங்களையாவது எதிர்ப்பதற்காக வருகின்ற சத்துருக்களை இடைவிடாது எதிர்த்துச் சண்டை செய்து அவர்களைத்தோற்கச் செய்தும் தங்களுடைய சுதேச ஜனங்களாகிய நண்பர்களிடங்களில் உயிர் நேசம பாராட்டியும் அவர்களுக்குப் பலவித ஸகாயங்கள் புரிந்து கொண்டும் ஒருவருக்கொருவர் பேருபகாரிகளையும் ஸ்யேச்சையுள்ளவர்களாயும் வாழ்ந்து வந்தனர். "ஹிந்து சமூதாயமானது ஸ்வாதீனாச்ரய புத்தியை (Self-Conscience) மட்டும் கைப்பற்றி ஜீவிதத்தை உத்தமமாதிரி நடத்தி வருவதாகும்" என உலகமுழுவதும் கீர்த்தி பரவிஇருந்ததும் அக்காலத்தில்தான் அவர்கள் தமது ஆஹாரமுகலிய பொருள்களைச்சம்பாதித்துக் கொள்கின்ற மார்க்கங்கள் சிறிதும் குற்றமற்றவைகளா

யும் மிகச் சுலபமுளளவைகளுமாயிருந்தன. அவர்கள் தங்களுடைய சத்துருக்களை எதிர்த்து ஜயிப்பதற்காக உபயோகித்துவந்த * அஸ்திர சஸ்திரப்பிரயோகங்கள் வெகு மேன்மை வாய்ந்தனவாயும் மிக ஆச்சரிய கரங்களாயுமிருந்தன, தங்களுடைய ஸ்வயஜனங்களோடு பரஸ்பரம் வெளியிட்டுவந்த உள்ளங்கிந்த அன்பின் முதிற்சி இவ்வளவவ்வளவென்று எடுத்துக்கூறுதற்கியலாதிருந்தது. இவர்களிடத்தில் ஆயுஸ், ஆரோக்யம், ஸூக்ஷ்ம ஆலோசனை சக்தி, (நுண்ணிதாய ஆராயுந்திறன்) மூகமலர்ச்சி, (பிரசன்னதை) முதலிய உத்தம குணங்கள் உடன் பிறந்தவைகள் போலும் அமைந்து விளங்கலாயின. இவர்களின் இருதயங்களாகிய குஹாத்துவாரங்களினின்றும் தடையற்ற வெள்ளம் போலும் கரைபுரண்டோடிக்கொண்டிருந்தனவாயினும் தவெள்ளமானதுமரித்து உழலும் மானிடாது கொடிய அறியாமையெனும் தாபஜ்வாலையைத்தணித்து விடுவதற்கோர் அரிய லித்தவுஷதமாயிருந்தது. இவைபோன்றவ்வொரு சங்கதிகளாலும் அவர்கள் ஸ்வாத்மாச்ரயசக்திக்கு உட்பட்டிருக்கின்றவர்களென்று மிக்க விஸ்தாரமாக நிரூபித்திருக்கின்றோம்.

பூர்வ நிலைமையில் மாறுதல்.

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள வண்ணம் வாழ்ந்துவந்த ஹிந்து சமுதாயத்திற்கு அல்லது சமுதாய அங்கங்களுக்கு எவை யெவை தேவைகளாகின்றனவோ அவைகளையெல்லாம் தமக்குத்தாமே நிறைவேற்றிக்கொள்ளாது அவைகளுக்கு வேண்டி ஜப்பான், அமெரிக்கா முதலிய வெளி நாட்டு ராஜ்யங்களையே சரணமாக அடையவும் தேவையாயுள்ள பொருள்களை அவ்விடங்களிலிருந்தே சிறிது சிறிதாகத் தருவித்துக்கொள்ளவும் ஆரம்பித்தனர். இப்பொழுது எல்லாப்பொருள்களும் அவர்களின் சகாயமின்றி நிரைவேற்றிக்கொள்ள முடியாது என்னும் நிலைமைக்கு வந்திருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் மேல் நாட்டினர் இந்திய சமுதாயத்தினர்க்கு யாதொரு பொருள்களையும் அனுப்புவதில்லை" யென்று ஒரு தீர்மானஞசெய்துவிட்டால் இந்தியர்கள் மிகவும் துன்பப்படவேண்டும்.

---

*இவற்றை அதர்வண வேதத்தில்பரக்கக்காண்க.

யோத்ரு வாணி பரித்யஜ்ய, அத்ருவம் பரிஷேவதே |
த்ருவாணி தஸ்ய நச்யந்தி அத்ருவம் நஷ்டமேவ ச ||

மனிதன் தனக்கு எது இயல்பாகவே கிடைத்திருக்கின்றதோ அதனை விடுத்துப் பிறர் வசத்திலுள்ள பொருளை விரும்புவானுயின் அப்பொழுது அவனுக்குப் பிறர் வசத்திலுள்ள பொருளும் கிடையாமற் போவதோடு தன் கையிலுள்ள பொருளையும் இழந்தவனுவான்.

இது தான் ஸ்வாத்ம புத்தியை அல்லது ஸ்வராத்மாச்ரயத்தை விடுவதனுல் வருகின்ற பலன் என்று எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு சமுதாயத்தின் அங்கங்களின் சுவாதீனத்திலிருக்கின்ற பூமி சொத்துக்கள் அந்தந்த சமுதாய அங்கங்களிலேயே இருக்கவேண்டுமன்றி மேற்படி பூமி சொத்துக்களினின்றும் எக்காரணத்தாலும் அச்சமுதாய அங்கங்களை வெளியேற்றுதல் கூடாததாகும். இதற்கு மாறுகச்செய்வதனுல் அச்சமுதாயம் வெகுசீக்கிரத்தில் நாசமடைந்து விடும். இதற்கு இங்கோருதாரணம் வரைகின்றேம். முன்னர் 34-வது நூற்றுண்டில் கேகய தேசத்திலே வாழ்ந்துவந்த ஒருபிரபு, தன்னுடைய வேலைக்காரர்களைக்கொண்டு வீட்டுக் காரியங்களை நடத்திவரும்படி ஏற்பாடு செய்திருந்த பொழுது அவ்வேலைக்காரர்கள் சரிவர வேலைசெய்யாமல் இருந்து வந்தனர். உடனே பிரபு அவர்களை மாற்றி வேறு சில வேலைக்காரர்களை அமர்த்தினர். அவர்களும் அவ்விதமே செய்பலாயினர் மீண்டும் அவர்களை மாற்றிப் பின்னும் சிலரை நியமித்தார். இவ்வாறு அவர் பன்முறை மாற்றி மாற்றி வேலைக்காரர்களை நியமித்து வருவது வழக்கமாய் வந்தது. இவ்விதமே வெகுகாலம் நடந்து வரும்பொழுது ஒருநாள் பிரபு நிதான புத்தியமைந்தவராய் இவ்விதம் ஆலோசிக்கலானர். "வருகின்ற வேலைக்காரர்களெல்லாம் எதனுல் வேலைசெய்ய முடியாதெனக் கூறுகின்றனர்? இதன் காரணத்தை அவர்களிடம் விசாரித்துத்தெரிந்து கொள்ளவேண்டியதும், பின்னர் அக்காரணத்தை நீக்கவேண்டியதும் உசிதமாயிருக்க நாம் அவ்விதஞ் செய்யாதிருப்போமாயின் வேலையாளர்

இனி ஒரு காலத்திலும் வேலைக்கு வரமாட்டார்கள். இவ்விதஞ் செய்யவேண்டியதற்குப் பதிலாக நாம் அவர்களை அடிக்கவும் ஹிம்சித்தும் மாற்றியும் வந்தால் நம்முடைய உத்தேசம் ஒருநாளும் முடிவுறாது'' என நம்முடைய தற்கால அனுபவமே மிகஸ்பஷ்டமாயிருக்கின்றதல்லவா?

பிரபு வேலைக்காரர்களிடத்தில் வேலைசெய்யும்படிக்கு உத்தாவிடும்பொழுது அவர்கள் சாதாரணமாய் இரண்டு காரணங்களைச்சொல்லி வாதிப்பதுண்டு. அவையாவன:—

1. ''வேலைசெய்ய இஷ்டமில்லை'' யென்பது.
2. ''வேலை செய்யச்சக்தியில்லை'' யென்பது.

இவ்விதஞ்சொல்வதைக்கேட்டவுடன் பிரபு, கோபமிகுந்த வராய் பணியாளர்களையடித்துரத்திவிடுவதுதான் வெகுநாளாகச் செய்துவந்தபழக்கம். ஆனால், இப்பொழுது பிரபுவானவர் வேலைக்காரர்களை வரவழைத்துக்காரணத்தைக்கேழ்க்கலாயினர். உங்களுக்கு நன்றாக வேலைசெய்யத்தக்க சரீரபலமிருந்தும் நீங்களெதற்காக வேலைசெய்ய இஷ்டப்படுவதில்லை? அதற்குபதிலாக முதலாவது வேலைக்காரர்கள் சொல்வதாவது:—

''ப்ரபு ஸதாகாலமும் பாவத்தொழில்களை ஸ்ருஷ்டி நியமங்களுக்கு விரோதமான செயல்களைச் செய்துகொண்டிருப்பதனால் அத்தகைய தொழில்களுக்கு உதவிசெய்ய எங்களுக்கியலாததுதான்'' ஆனால் பாவத்தொழில்களை நீக்கிவிட்டால் நாங்கள் மிக்க மனமகிழ்ச்சியுடன் வேலைபார்த்து வாத்தயாராயிருக்கின்றோம், இதைச்செவியுற்ற பிரபு அக்கணமே 'நான் இனிமேல் பாவத்தொழில்களைச்செய்வதில்லை' யெனக்கூறி அந்தநிமிஷமேபாபகிருத்தியங்களைவிட்டுவிட்டார். அப்பால் பிரபு, இரண்டாவதுவேலைக்காரர்களைநோக்கிக்கேட்டதாவது: ''உங்களுக்கு வேலைபார்க்கமனமிருந்தும் நீங்களேன் வேலைபார்க்க முடியாதென்று வீணைவாதாடுகின்றீர்கள்? இதற்கு அவர்கள் கூறியவிடை, ''எங்களுடைய சரீரநோயினாலும் தாங்களளித்துவருகின்ற சம்பளம் எங்களுடைய வயிற்றிற்குப் போதாமையினாலும் நாங்கள் வேலைபார்க்க

முடியாதவர்களாக இருக்கின்றோம். ஆனால் எங்களுடைய ரோகத்திற்கு வயித்தியஞ்செய்து ஸ்வஸ்தப்படுத்தியும், எங்கள் வயிறு நிறைய அன்னமிட்டும்வந்தால் நாங்கள் எங்களுடைய வேலைகளைச் சரத்தையோடுசெய்து வாத்தபார்" இதனைக்கேட்டபிரபு இவ்விதமானகாரணங்கள் வேலைக்காரரிடமிருந்து வந்திருக்க, அவைகளை நீக்காது, வீணே அவர்களையடித்தும், தூத்தியும வந்தது என்னுடைய மடமையேயன்றி மற்றொன்றுஞ் சொல்வதற்கில்லை, என மனத்தில் நினைத்துக்கொண்டு உடனேரோகங்களைச்சொஸ்தஞ் செய்வித்து, மேற்கொண்டும் வேண்டிய பொருளுதவி புரிந்து அவர்களின் இஷ்டத்தை நிறைவேற்றிவைத்தார். குறித்தபடி இரண்டுவிதவாதங்களுக்கும் காரணங்களையுணர்ந்து பரிகாரஞ் செய்தபின்னர் பிரபுவினுடைய உயிருள்ள வரையில் வேறுவேலைக் காரர்களைத்தேடவேண்டிய சிரமம் பிரபுவுக்கு ஒருநாளும் நேரவேயில்லை.

இவ்விதமாகவே ஒரு ஸமுதாயத்திற்குமாம்.

இனி ஒரு ஸமுதாயத்தில் வியவஸாயவிபாக நியாயத்தையனுஸரித்துப்பலவிதங்களான தொழில்களைச்செய்து பொருள்களைக் கைம்மாற்றஞ்செய்கின்ற விஷயத்தில் ஸாத்யஸாதனங்களைக்கைம் மாற்றஞ் செய்யவேண்டுமேயன்றி ஸாதனஸாதனங்களைக்கைம் மாற்றஞ் செய்வது உசிதமல்ல ஸாதனஸாதனங்களைக்கைம்மாற்றஞ்செய்வதற்கு ஆரம்பித்தகாலத்தில் தான் ஹிந்து ஸமுதாயத்திற்குப் பெருங்குழப்பங்களும் மஹாதரித்திரமும் வரக்காரணமாயிற்று. அதுஎவ்விதமென்றால் ஒருவியவஸாயிக்குக் கலப்பை, மண்வெட்டி, கால்நடைகள், உரங்கள், நிலங்கள் இவ்வளவும் ஸாதனங்களாகும். பயிர்செய்து அதில் கிடைக்கின்ற தானியம் முதலியவை ஸாத்யங்கள். ஒரு சாலியனுக்கு எந்திரங்கள் தரிகள் முதலானவை ஸாதனங்கள். வஸ்திரம்ஸாத்யம். வைசியனுக்கு நிராசுபடிக்கல் முதலியனஸாதனங்கள். சரக்குகளை விற்றுப்பணமாக்குவதுஸாத்யம். க்ஷத்திரியனுக்குக்கத்திகள், துபாக்கிகள், ஸைன்யங்கள், (யானை குதிரை ஒட்டகங்கள்) என்பன, ஸாதனங்கள். அவைகளைப்பரிபாலனஞ் செய்தல் ஸாத்யம். ப்ராஹ்மணனுக்கு வேதம், வேதாந்தம், தவம், நிஷ்டை முதலியன ஸாதனங்கள். ப்ரஹ்மக்ஞானானுபவம் ஸாத்யம்.

இவைகளில் முன்விவரிக்கப்பட்டகர்ஷகன் சாலியன், வைசியன், க்ஷத்திரியன். ப்ராஹ்மணன், ஆகிய இவர்களுடைய ஸாத்யங்களாகிய பொருள்களே ஸமுதாயத்தின் பொதுவில் கைம்மாறஞ்செய்யவேண்டுமேயன்றி கலப்பை முதல் வேதவேதாந்தம் ஈறுகவுள்ள ஸாதனங்களாகிய பொருள்களேக்கைம்மாற்றஞ் செய்வது உசிதமில்லாததாகும். கர்ஷகன் தானியத்தையும், சாலியன் வஸ்திரத்தையும், வைசியன் சரக்குகளையும், க்ஷத்திரியன் ஆக்ஷியையும் (பரிபாலனத்தையும்) ப்ராஹ்மணன் ப்ரஹ்மோபதேசத்தையும் தங்களுடைய ஸமுதாய அங்கங்களுக்குக்கொடுப்பதானால் எல்லாஜனங்களுடைய அபீஷ்டங்களும் ஒரேமாதிரியாக நிறைவேறிவிடும். இந்த நியமத்தை அடிப்படையாக அமைத்துதான் பூர்வகாலங்களில் வேதாத்யயனஞ் செய்வதில் ப்ராஹ்மணனுக்கும் ராஜ்யபரிபாலனஞ்செய்வதில் க்ஷத்திரியனுக்கும், வியாபாரஞ்செய்வதில் வைசியனுக்கும், கிருஷிசெய்வதில் கர்ஷகனுக்குப், தான் அதிகாரமுண்டென்று ஸமுதாய சாஸ்திரகர்த்தாக்கள் தீர்மானஞ் செய்தனர். கர்ஷகன் கிருஷிவிஷயத்திலும் வைசியன் வியாபாரத்திலும் க்ஷத்திரியன் ஆக்ஷிபுரிவதிலும் ப்ராஹ்மணன் ப்ரஹ்மவித்யாப்யாஸஞ் செய்விப்பதிலும் சிரத்தையில்லாதவர்களாகவோ பாராமுகர்களாகவோ இருக்கும் பக்ஷத்தில் அவர்களால் குறித்த ஸமுதாயத்திற்கு ப்ரமாதமான (அளவுக்கு மிஞ்சிய) கஷ்டநஷ்டகளுண்டாகும்.

எந்த எந்தத் தொழிலாளிகள் அவரவர்க்குப் பாத்யப்பட்ட தொழில்களேயுதறி அன்னியர்த்தொழில்களில் ப்ரவேசிக்கின்றார்களோ அவ்விதங்கையிடப்பட்ட அந்தந்தத்தொழில்களே நடத்தவேண்டி இதரத்தொழில்களேப்பாத்யதையோடு செய்துவருகின்ற அங்கங்களே ப்ரவேசித்து ஸமுதாயகாரியங்களே நிர்வகித்துவரவேண்டும். கர்ஷகனுடைய கலப்பைகள், மண்வெட்டிகள், சாலியனுடைய இயந்திரங்கள் தரிகள் வைசியனுடைய தராசு படிக்கற்கள் க்ஷத்திரியனுடைய துப்பாக்கிகள் கத்திகள்என்பனபோன்ற ஸாதனங்களே அவர்களிடமிருந்து எவரும் விரும்பாது, முறையே தான்யத்தையும் வஸ்திரத்தையும் ஸாமான்களேயும் பரிபாலனத்தையும் எவ்விதம் தேவையெனக்கருதுகின்றார்களோ அவ்விதந்

தான் ப்ராஹ்மணனுடைய வேதோபநிஷத்துக்களை எவரும்விரும் பாமல் ப்ரஹ்மோபதேசத்தை மட்டுமே விரும்புவார்கள். இது ஸ்ருஷ்டியின் நியமத்திற்கு எவ்வளவுதூரம் பொருத்தமாகவும் அழகாகவுமிருக்கின்றது?

ப்ராஹ்மணன் வேதோபநிஷத்துக்களை கிரஹித்து ப்ரஹ்மோபதேசஞ்செய்யாமல் அன்னிய தொழில்களைச்செய்வதாலும் இதரர்கள் வேதோபநிஷத்துக்களையறிந்து ப்ரஹ்மோபதேசஞ் செய்யவேண்டியவர்களாவார்கள். இந்தஸூக்ஷ்மதத்துவத்தையறி யாது சிலஅறியாமையுடைய ப்ராஹ்மணர் தங்களுடைய வேதோப நிஷத்துக்களை கிரஹித்து ப்ரஹ்மக்ஞானானுபவம் பெற்று இதர அங்கங்களுக்கு ப்ரஹ்மோபதேசஞ் செய்யாமலும், அன்னியர் தொ ழில்களில் பிரவேசித்து மிருப்பார்கள். அப்பொழுது இதரர்கள் வேதோபநிஷத்துக்களை யப்யஸிப்பதாலும், குறித்த ப்ராஹ்மணர் கள் உபநிஷத்துக்களெல்லாம் தங்களுடைய அதிகாரத்திற்குட் பட்டவைகளென்றும், அவ்விதமான காரியங்களுக்கு இதரர்கள் அதிகாரிகளல்ல வெனவும், அவர்களோடு சண்டையிட ஆரம்பிப் பார்கள். இவ்விதமே க்ஷத்திரியர் வைசியர் முதலாயினோரும் தம்தம்தொழில்களைப்பிறர்கைக் கொள்ளும்பொழுது கோபமுரு வர். இந்தியர்களின் மத்தியில் இப்பொழுது நடந்துவருகின்ற வியவகாரங்களுக்குப் பெரும்பாலும் இதுவே ஹேதுவாகும். ஆத லால் இந்திய ஸமுதாயத்தில் வரவு செலவு நியமங்களை யனுசரித்து அந்தந்தத்தொழிற்காரர்கள் அவரவர்க்கு வேண்டிய சாதனப் பொருள்களைச்சம்பாதித்துக்கொள்ளவும், அவைகளினின்று முண் டாகின்ற ஸாத்யங்களாகிய பலன்களை ஸமுதாயத்தின் பொதுவில் விநியோகித்துவரவும் வேண்டும். பூர்வீக இந்தியாவில் இவ்வித மே நடைபெற்று வந்தது. அப்பால்சில க்ஷத்திரியர் களாகிய சிற்றரசர்கள், மேற்குறித்த வண்ணம் ஸமுதாயத்தேவைகளை யறி ந்து அதன்அங்கங்களைக் கொண்டே அதனை நிறைவேற்றி வரா மலும் தமது பொருப்புள்ள கடமைகளை நேர்மையுடன் கவனியா மலும் "அளவற்ற ஸ்திரீகளை மணந்துகொண்டு சுயபோகத்தில் மூழ்கியவர்களாய் தமது அரியவாழ்நாளையும் தேசத்தையும் அழி த்து நாசஞ்செய்துவிடவே அதுகண்ட பிரகிருதிதேவிக்கு மனம் பொறுது அக்கணமே வைசியர்களாகிய வியாபாரிகளாகிய ஐரோப்

பிய மேதாவிகளே இந்திய மாதாவிடம் அனுப்பி இராஜ்யபாரஞ் செய்யும்படி யமைத்தனள். ஆனால் இன்னஜாதியினர்தான் ஆள வேண்டுமென்பதல்ல. ஒரு தேசமானது அராஜகமாய் அல்லது அரீதியில் மூழ்கி ஒரு நியாயபரிபாலனத்தை விரும்பியதாய் தவிக்கும் பொழுது அத்தேசத்தினை, வீரியம், பராக்கிரமம், சம்பாவனை, அன்பு, சாந்தம் முதலிய உத்தம குணங்கள் வாய்ந்த யாதொரு சமுதாய அங்கங்களும் ஆக்ஷிபுரியலாம். அதனாலேயே கடவுளும் ஆங்கிலேயர்களே இந்திய பரிபாலனத்தைப்புரிந்து வரு மாறு அருள்புரிந்தனர்!

மதாசாரியன். ஒரு சமுதாயத்திலுள்ள எல்லா அங்கங்களும்ஒரு மதாசாரியனுடைய ஆக்ஞைக்கு அடங்கி நடவாவிடில் அச்சமுதாய அங்கங்களில் பலவிதமான துற்குணங்கள் உற்பத்தியாகி ஐக மத்தியத்தையும் ஆத்மசௌக்கியத்தையும், அடியோடு அழித்து முடிவில் அச்சமுதாயத்தையே நாசஞ்செய்து விடும்.

சரீரத்தில் ஒவ்வொரு அங்கங்களும் சரீர ஸமுதாயசுகத்திற்காகப் பொதுவில் முயல்கின்றன. இந்த விஷயத்தில் இவ்வங்கங்களைப்பிரதானமாய் நடத்திவைப்பதற்குக் காரணஸ்வரூபமாக இருப்பது ஜீவஹிதசக்தி (Vital Force) ஆகும். குறித்தசக்தியானது சுரோத்திரமுதலிய ஞானேந்திரியங்களுடையவும், வாக்கு முதலிய கர்மேந்திரியங்களுடையவும், பிராணன் முதலிய வாயுக்களுடையவும் மனஸ்முதலிய அந்தக்கரணங்களுடையவும் பிரவர்த்திகளே சரீரநியமத்திற்கு மிகவும் அனுஸரித்தவிதத்தில் நடத்தி வைக்கின்றது. சரீரஸமுதாயத்தின் முழுதையுமாவது அல்லது அதன் அங்கங்களின் ஏதேனும் ஒரு பாகத்தையாவது ஹானிசெய்யத்தக்க விதத்திலுள்ள ஏதேனும் சில அணுக்களோ சக்திகளோ எதிர்த்து வந்து சரீரத்தினுள் பாகத்தில் பிரவேசிப்பதற்காக முயலுமாயின் அந்த ஜீவஹித சக்தியானது அந்தக்ஷணத்திலேயே அவைகளுடன் சண்டை செய்து சரீரசமுதாயத்தைப்பாதுகாக்கும். சரீரசமுதாயத்திற்குத்தேவையில்லாததும் தோஷத்தை யுற்பத்திசெய்வது பாகிய மலஜலாதிகளே அந்தந்தக்காலங்களில் (தவிறாது) வெளியில் தள்ளி விடும். அன்றியும் சரீரம் நிலைத்து நிற்பதற்கு மிகவுமூடயோக

முள்ளதாகிய ஜீவவாயுவினையும் ஜீவ (பரிசுத்த) அணுக்களையும் வெளியேயுள்ள ஆகாயத்தினின்றும் கிரஹித்து எதாகாலமும் உள்ளே அனுப்பிக்கொண்டிருக்கும், சரீரத்தினுடைய ஏதேனு மோர்பாகத்தில் கத்தியினாற் சிறிது அறுத்து அதில் யாதொரு மருந்து முபயோகிபாமலும் அதைக்கைகளினால் சேர்க்காமலும் இருக்கும்போழுது அந்தநிமிஷமே இரண்டுதோலும் சுருங்கி வந்து மூடிக்கொள்வதற்குக்காரணம். சரீர (தர்ம) இயற்கைக்கு விபரீதமான அனுபவமானது அதில் நேரும் பொழுது அதனைக் கண்டுசகிக்க மூடியாமல் உடனே அந்தக்குற்றத்தை ஜீவஹித சக்தி வந்து நீக்கிவிடும். சரீரஸமூதாயத்தில் ஜீவஹிதசக்தியா னது பூரண பெளவனத்தை யடைந்திருக்கும் பொழுது அந்த மனிதனுக்கு இஹபர ஸம்பந்தங்களாகிய எல்லாக்காரியங்களையும் செய்துகொள்ளும்படியான திரணுண்டாகிவிடும். ஒருவனுக்குமூற் றிலும் மலவிஸர்ஜனமேசெய்ய முடியாமற்போய்விட்டது, என்று வரும்பக்ஷத்தில் குதேந்திரியத்தை பிரேறணைசெய்து (அசைத்து) வேலைசெய்கின்ற ஜீவஹிதசக்தியானது குறைந்துபோய் விட்ட தென அறிந்து கொள்ளவேண்டியதாகும். அப்பொழுது அதை நீக்குவதற்காக அந்தகுதேந்திரியத்தை எவுகின்றதாகிய ஜீவ ஹிதசக்தியைப்போஷிக்கத்தக்க லித்தெளஷதங்களைக் கொடுத் தால் அது முன்போலவே நல்ல வலிமைவாய்ந்ததாகித் தேவை யுள்ளவண்ணம் மலசோசனத்தை உண்டு பண்ணுவதாகும். இந்த நியமத்தைத்தான் (Homeopathic) லித்தெளஷதசாஸ்திர மூணர் ந்தவர்களும் முக்கியமாயங்கீகரித்திருக்கின்றூர்கள். இவ்விதமாக ஒவ்வோரிந்திரியங்களுக்கும் அவைகளின் பிரவர்த்தி முற்றிலு மில்லாமற் போய்விட்டது என வரும்பொழுது இவ்விதமுள்ள சரீர ஸமூதாயத்தில் ஜீவஹிதசக்தி அடியோடு அழிந்துவிட்ட தாய் ஊஹிக்கத்தக்கதாகும் இதனைத்தான் மரணம் என வேறூர் பெயரால் வழங்கிவருகின்றோம்.

இவ்விதமாக மனித சமூதாயத்தில் பற்பல தொழில்காரர்க ளாகிய அங்கங்களுக்கு அவரவர்கள் செய்து வரவேண்டிய தொழில்களை நன்றாக வுணர்த்தி உயர்ந்த பதவியை யடைவிப்ப தற்கு சரீர சமூதாயத்திலுள்ள ஜீவ ஹித சக்தியே போதும்; மேற்படி மனித சமூதாயத்திற்கு மதாச்சாரியன் அவசியமுண்டா

யிருக்கவேண்டும். சரீர சமுதாயத்தை நாசஞ்செய்யவேண்டி வெளியே யிருந்துவருகின்ற வஸ்துக்களோடு எதிர்த்தும் உள்ளே யிருக்கின்ற கசடுகளாகிய மல ஜல மூதலியவற்றை வெளியே தள்ளியும் எவ்விதம் ஜீவ ஹித சக்தியானது சதாகாலமும் காப்பாற்றி வருகின்றதோ அதுபோலவே மதாச்சாரியன் ஒரு சமுதாயத்தை யழிக்கவேண்டி அந்நிய சமுதாயங்களிலிருந்தும் ஒட்டுவாரொட்டி வியாதிபோலும் கழிந்து வருகின்றதும் ஹிந்து சமுதாயத்திற்கு தேவையில்லாததுமாகிய மதுபானம், கோமாம்சபக்ஷணம், அசத்தியம், பிறர்பொருளைக்கவருதல், சௌச முதலிய ஆசார நியமமின்மை, என்பனபோன்ற குணங்களோடு எதிர்ப்பதும், தமது சமுதாயத்தின் மத்தியில் சரீரத்திலுள்ள மல மூத்திரங்களைப் போல குற்றமுள்ளவைகளாகி யிருக்கின்ற நாஸ்திகர், சஜ்ஜன நிந்தகர், வேதங்களை நாசஞ்செய்பவர், விக்ரகிகங்களையுடைப் போர், இந்தியர்களின் உள்வகுப்பினர்களாகிய பிரஹ்ம க்ஷத்திரிய வைசியாதிப்பற்பல தொழில்காரர்களையும் தங்களுக்குள் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளும்படிக்குத் தூண்டிவிட்டு அதனால் கிடைக்கின்ற பொருள்களைக்கொண்டு வயிறு வளர்ப்பதாய்க்காப்புக்கட்டிக்கொண்டு பொது ஜனப்பிரதிநிதிகளென வெளியில் நடிக்கின்றவர் வித்துவான்களையும் ஸாதுக்களையும் விருத்தர்களையும், (பெரியோர்களையும்) பாலர்களையும் அங்க ஹீனர்களையும் கண்டு பரிஹஸித்து உபத்திரவிப்போர் தங்களுக்கும் தங்களுடைய தேசத்திற்குமென்பதல்ல; மனித வர்க்கம் மூழுதிற்குமே பேரவமானம் ஸித்திக்குப்படிக்கு மஹா நிந்திய கர்மங்களைச்செய்து பூஜ்யர்களென வெளியே மயக்குகின்றவர்களாம். நாச வஸ்துக்களை வெளியே தள்ளுவதற்கும் மதாசாரியனுடைய ஆக்ஞையானது எவ்வளவு தூரம் ஆச்வாசமளிக்கின்றது? சரீரத்தினது உள்ளினையும் புறம்பினையும் இரக்ஷித்து வருகின்ற ஜீவ ஹித சக்தியைப் போல மதாசாரியன் சமுதாயத்தினுடைய உள்ளிலும் வெளியிலும் ஸம்பவிக்கின்ற கேடுகளைத்தீர்த்து சமுதாயத்திற்குப் பரிபூரணமான ஸுகத்தை சதாகாலமும் அளித்து வருவான். சரீர அவயவங்களில் ஏதேனும் ஒருபாகத்தைச்சிறிது அறுக்கும்பொழுது, பிரகிருதி நியமஸ்வரூபமாகிய ஜீவ ஹித சக்திக்கு அதனைக்கண்டு மனஞ்சகியாது எவ்வண்ணம் அக்கணமே அந்த இட-

தை யெல்லிய இழையிட்டுச்சேர்த்து விடுகின்றதோ அவ்வண்ணமே ஒரு சமுதாயத்தில் நேருகின்ற ஹானிகளைக்குறித்து மதாசாரியன் மனப்பூர்வமாய்த் தானுமந்த நிலைமையிலிருந்து தெரிந்து கொண்டு மனமுருக வேண்டியவனுவான். குதேந்திரியத்தையசைத்துத்தொழில் நடத்தி வருகின்ற ஜீவ ஹித சக்தியினுடையஸாந்நித்யமானது அவ்விந்திரியத்தினின்றும் சிறிது பின் வாங்கிய பொழுது குதேந்திரியத்திற்கு மலத்தை வெளியே தள்ளச்சக்தியில்லாமற்போகவும் அதனுல் சரீரசமுதாயத்திற்குப் பெருங்கேடுவிளேந்துவிடவும் நேர்ந்தது. மதாசாரியனுடைய பார்வையானது ஏதேனுமோரவயவமாகிய வர்க்கத்தில் இல்லாமல் போய்விடுமாயின் அவ்வர்க்கத்திற்கும் அதனுல் ஸமுதாயமுழுதிற்கும் நாசம் ஸம்பவிப்பதாகும். சரீரஸமுதாயத்தில் அங்கங்களாகிய எல்லா அவயவங்களுக்கும் அவ்வவற்றின் தொழில்களே நடத்துவதற்கு ஜீவஹிதசக்தியின் இன்மையினுலெங்ஙனம் முடியாமற் போய் மரணம் என்னும் நிலைமைக்குச் சரீரஸமுதாயம் அதீனமாகிவிடுகின்றதோ அங்ஙனமே ஒரு ஸமுதாயத்தில் மதாசாரியனில்லாமற் போய் விட்டால் அச்சமுதாயம் அறியாமையினுலும் ஜாதிப் பொருமையினுலும் ஒற்றுமையின்மையாலும் மஹாதரித்ரத்தினுலும் மறுகணத்தில் நாசமடைந்து தீர்ந்துவிடும். ஆதலால் சரீரத்தில் ஜீவஹிதசக்தியானது பூரணயௌவனதசையையடைந்திருக்கும்பொழுது சரீரஅவயவங்களைக்கொண்டு இஹபரஸாதகங்களாகிய எல்லாக்காரியங்களேயும் நடத்துவதற்கியல்வது போல, ஒரு ஜனஸமுதாயத்திற்கு பூரணஸாமர்த்திய பலம்வாய்ந்த ஒரு மதாசாரியன் உண்டாயிருந்தால் அந்தஸமுதாயத்திற்கு பரிபூரணமான ஸௌக்யங்கிடைப்பதாகும். பூர்வகாலத்தில் எல்லாஸமுதாயங்களும் ஒவ்வொரு மதாசாரியர்களின் ஆக்ஞையையனுசரித்து வந்ததாயறிகின்றோம். தேவசமுதாயம் பிருஹஸ்பதியையும், அஸுரஸமுதாயம் சுக்ராசாரியரையும், ஸூர்யவம்சத்தரசர்கள் வஸிஷ்டரையு மாசாரியராய் அங்கீகரித்திருந்தனர். ஸ்ருஷ்டியின் ஆரம்பகாலம் முதல் அந்திய (கடைசி) காலம்வரை உலகத்தில் கடவுளின் அம்சம் வாய்ந்தவர்களாகிய மதாசாரியர்கள் அவதரித்துக்கொண்டே யிருப்பார்கள். இம் மஹான்கள் அக்ஞானமாகிய

பேரிருளில் கிடந்தழலுகின்ற மனிதகோடிகளை மஹாபரிசுத்தர்களாக்கிலோக (ஸ்ருஷ்டியினுடைய) ஹிதத்தை நிறைவேற்றிவைப்பார்கள் ஸ்ரீபுத்தபகவான், ஸ்ரீசங்கரபகவத்பாதர், ஜிஸஸ்கிரிஸ்து மஹான் முஹமத்நபி, ஸ்ரீராமானுஜாசாரியர் முதலானவர்கள் இதற்கு உத்தம திருஷ்டாந்த பாத்ரங்களாவார்கள். மேலும் முக்யமாய்,

யதாயதாஹ தாஹிதர்மஸ்யக்லானிர்பவதிபாரத |
அப்யுத்தா நமதர்மஸ்ய ததாத்மாநம்ஸ்ருஜாம்யஹம் ||

ஹே அர்ஜுந! எந்தஎந்தசமயத்தில் தர்மத்திற்குக்குறைவும் அதர்மத்திற்கு விருத்தியும் உண்டாகின்றதோ அந்தஅந்த ஸமயங்களிலெல்லாம் என்னை யான் ஸ்ருஷ்டிசெய்துகொள்கின்றேன்.! (அதாவது மனிதர்கள் பரஸ்பரம் செய்துவரவேண்டிய நியாயமான வேலைகளையும் நிறைவேற்றிவர வேண்டிய கடமைகளையும் எப்பொழுது மறந்து உதாஸீனஞ்செய்து அகங்காரத்தால் அவிவேகத்தால் புறக்கணிக்கின்றார்களோ அப்பொழுதுதான் தர்மத்திற்குக்குறைவு வருங்காலமாகும். அவ்வக்காலந்தோறும் நான் என்னைப்பற்பல ரூபத்தோடு படைத்துக்கொண்டு வெளியேதோன்றுவேன்! நியாயங்களையும் கடமைகளையும் சீர்படுத்தி ஜனசமுதாயத்தில் நன்கு நடைபெறச்செய்வேன்! என்பதாம்)

பரித்ராணயஸாதூநாம் விநாசாயசதுஷ்க்குருதாம் |
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||

நல்லோரினைப்பாதுகாத்தற்கும் கொடியோரினை நசிப்பித்தற்கும் தர்மத்தினை நிலைநாட்டுதற்கும் நான் பன்முறை அவதரிக்கின்றேன், என்பது கண்ணனருளிய திருவாக்காகும்.

தற்காலத்தில் சீர்திருந்திய உலகங்கள் எனக்கருதப்பட்டு வருகின்ற மேல்நாட்டவரின் மத்தியிலும் மதாசாரியர்களின் ஆக்ஞையானது எவ்வளவோ மேன்மையுள்ளதாய்க்கொண்டாடப்படுவதோடு அவர்களின் ஸமுதாயக்கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்கு அஸ்திவாரமாகவும் விளங்குகின்றது.

மந்திரி சிரேஷ்டர்களிலெல்லாம் உயர்ந்த மஹாமேதாவி யென்று உலகப்பிரசித்திபெற்றிருந்த மிஸ்டர் க்ளாட்ஸ்டன் ஒரு சமயம் தனது உற்ற நண்பன் கேட்டகேள்விக்குப்பின்வருமாறு விடையளித்தார்.

நான் தேவனது ஆலயத்திற்குப்போகும் பொழுதெல்லாம் ஆசாரியனை வணங்கிப் பிரார்த்திப்பது எதற்காகவெனில் எனது சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்தவேண்டுமென்பதற் கும், எனது ஆத்துமாவினை ரக்ஷிக்கவேண்டுமென்பற்குமாம். இவ் விரண்டிற்கும் மேலாக அத்திருமேனியினின்றும் பெற்றுக் கொள்ள வேண்டியதாய் ஒன்றுமில்லை இதைக்கேட்டநண்பன் மிகவும் களிப்படைந்து அங்ஙனமே தானுஞ் செய்து கிருதார்த் தனுயினன். மேற்சொல்லப்பட்ட இரண்டு சங்கதிகளையும் அவர் களுடைய சமூகத்தின் மத்தியில் பலப்படுத்துவதற்காக மேல் நாட்டு அரசர்கள் ஒவ்வொருவரும் சிம்மாஸன ஆரோஹணஞ் செய்யுங்காலங்களிலெல்லாம் அவர்களின் மதாசாரியர்கள் "அவ் வரசர்களைப்பார்த்து ஆக்ஞைசெய்கின்ற சம்பிரதாயங்களில் நமது ஆங்கிலேய அரசர்களின் முறையைப்படிப்போருக்கு எளிதில் விளங்கும் வண்ணம் இதனடியில் தெரிவிக்கின்றோம். ஆர்ச்பிஷப் (சூலகுரு) அரசனைப்பார்த்துச்சொல்லுகின்றார் நீர் இந்த பிரிட்டன் ராஜ்பத்திலும், இதன் அரசாக்ஷிக்குள்ப்பட்ட மற்றராஜ்யங்களி லும், உள்ள ஜனங்களை, பார்லிமெண்ட் மகாசபையின் அங்கீ காரம் பெற்றுத்தீர்மானிக்கப்பட்ட சாசுவதமான சட்டங்களை யனுசரித்து அந்த அந்த ராஜ்யங்களினது சட்டங்களையும் நட படிக்கைகளையும் பின்பற்றி ராஜ்பரிபாலனஞ்செய்து வருவே னெனப்பயபத்தியோடுகூட வாக்குத்தத்தஞ்செய்து ஸத்தியஞ் செய்ய முடியுமா?

அரசன்:- நான் அவ்விதமாகவே செய்து வருகின்றேன் என்று பயபத்தியுடன் வாக்குதானம் செய்து கொள்கின்றேன்.

குரு:- உமக்கு எவ்வளவு தூரம் அதிகாரஞ்செலுத்தமுடியுமோ அவ்வளவு தூரம் அதிகாரஞ்செலுத்தி உம்முடைய எல்லாத்தீர்ப்பு களிலும் சட்டமும் நியாயமும் தயவும் பிரகாசிக்கத்தக்கவண்ணம் நீர்செய்வீரா?

அரசன்:– நான் அவ்விதமேசெய்து கொள்ளுகின்றேன்.

குரு:– உமக்கு எவ்வளவு வரையில் அதிகாரஞ்செலுத்தலாமோ அவ்வளவுவரையில் அதிகாரஞ்செலுத்தி, நீர் கடவுளின் நியமங்களையும் (Gospel) ஸத்திய வேதத்தினுடைய உண்மையான அங்கீகாரத்தையும் அனுசரித்து ஏற்படுத்தப்பட்டும், சீர்திருத்தப்பட்டும் விளங்குகின்ற ப்ராட்டஸ்டாண்ட் மதத்தை (Reformed Protestantism) யும் காத்து ரக்ஷித்து வருவீரா?

இந்த ராஜ்யத்திலுள்ள குருக்களும் கோயிலதிகாரிகளுக்கும் (Bishops and Clergy) அவர்களின் ஸ்வாதீனத்திலுள்ள கோயில்களுக்கும் அவர்களிடங்களிலாவது ஏதேனும் ஒருவருக்கோ அல்லது ஒன்றுக்கோ சட்டப்படி இப்பொழுதுள்ளதும் இனி உண்டாகப்போவதுமாகிய ஸகல பாத்யதைகளையும் சுதந்தரங்களையும் நீர் விட்டுக்கொடுப்பீரா?

அரசன்:– அவைகளையெல்லாம் நான் செய்துகொள்வதாய் வரக்களிக்கின்றேன்.

இதன் பின்னர் அரசன் பரிசுத்தமான வேதபுஸ்தகத்தில் கை வைத்து அடியிற்கண்ட வண்ணம் சத்தியஞ்செய்வார்.

அரசன்:– நான் இவ்விடத்தில் வாக்குத்தானஞ்செய்துள்ள விஷயங்களையனுஷ்டித்து நிலை நிறுத்திக்கொள்கின்றேன். அதனால் ஓ கடவுளே! என்னைக்காத்தருள்வீராக. இவ்விதம் சொல்லியதன் மேல் அரசன் வேத புஸ்தகத்தை (Holy Bible) க்கையிலேந்தி மிகுந்த பயபக்தி விசுவாசங்களோடு கூட அதனைத்தனது முகத்தோடணைத்து முத்தமிடுவார்.

இச்சடங்குகளெல்லாம் முடிந்த பின்னர் குரு கிரீடத்தையெடுத்து அரசனது முடிமீது வைத்து ஆசி கூறுவார்.

இதனால், சீர்திருந்திய சமுதாயங்களுக்குக்கூட எவ்வளவு தூரம் மதாசாரியன் தேவையாயிருக்கின்றனென்பது நன்கு புலப்படும்.

இனி ஸ்ருஷ்டி நியமத்தின் உள்ளே பொதிந்து கிடக்கின்ற பரண (பரிபாலன) சக்தியைப்பற்றி ஆராய்வோம்.

பரண சக்தியானது புண்ணிய பாவங்களையனுசரித்து உத்தமம் மத்தியமம் அதமம் அதமாதமம் என நான்கு பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் உத்தமபரணத்தை உலகமானது "எல்லாவற்றினும் மேலாய உயர்நலமமைந்த ஆக்ஷியென அங்கீகரிக்கவேண்டியதும், மத்தியம அதம அதமாதமங்களாகிய பர்ணங்களின் குணதோசங்களைப்பகுத்துணர்ந்து அவைகளைச்சமையமுணர்ந்து நீக்கவேண்டியதுமாகும்.

1. உத்தமபரணம் ஒரு குடும்பத்தில் பத்துப்பெயர்களிருக்கின்றார்களென வைத்துக்கொள்வோம். இவர்களில் தாய் தந்தையரிருவர் தவிற, மற்றயோர் அவர்களது புதல்வராவர் இந்நிலைமையில் மாதாபிதாக்கள் ரக்ஷிப்போரும், சந்தானங்கள் இரக்ஷிக்கப்படுவோருமாகின்றார்கள். அந்த மாதாபிதாக்கள், தங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுகின்றவிதமும், அக்குழந்தைகள் தாய்தந்தையர்களைப் பெருமைப்படுத்தி வணக்கத்துடன் நடந்துகொள்கின்ற முறையும் இவ்விதமாம். அதாவது:- "தாய் தந்தையருடையவும் குழந்தைகளுடையவுமாகிய மனோ வாக்குக் காயகர்மங்கள் மிகப்பரிசுத்தத்தோடும் ஒற்றுமையோடுங்கலந்து விளங்கலாயின. அவர்கள் ஸத்தியம், தர்மம், ஸதாசாரம் என்பன வாதி ஸத்குணங்களை யாசரித்தும் அவைகளைத்தமது புதல்வர்களுக்கு ஸத்குருக்களைப்போலும் ஸதாகாலமுமுபதேசித்தும் வந்தனர். குழந்தைகளின் இகபர நன்மைகளுக்கான எல்லா விஷயங்களையும் தமக்குத்தாமே ஊகித்துணர்ந்து அத்தாய் தந்தையோர் (தமது புதல்வர்களின் வேண்டுகோளில்லாமலேயே) நிறைவேற்றி வந்தனர். சிறுவர்களோவெனில் தம்மைப்பாதுகாத்துவரும் மாதாபிதாக்களின் உள்ளக்குறிப்புகளை அவர்கள் தெரிவிக்குமுன்பே தெரிந்துகொண்டு அதனையனுசரித்து 'ஏவாமக்கண்மூவாமருந்து' எனும் வாக்கிற்கிலக்காகி ஊசியும் நூலும், உடலும் உயிரும், மனிதனும் நிழலும் போல இடைவிடாது பின்பற்றி நடந்துவந்தனர். குடும்பத்தினது சுப சௌக்கியங்களுக்குத் தேவையாகிய சகல பொருள்களையும் இவர்கள் "தொழில் பிரிவு நியாயத்தையனுசரித்து" ச்சம்பாதித்து வருபவர்களாய்ப் பேரானந்தத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அதாவது குடும்பத்திலுள்ள எல்லா அங்கங்

களும் ஒரு சரட்டில் கோர்த்தமணிகள் போலுமிருந்து வந்தார் கள். இக்குழந்தைகள் அன்னை பிதாக்களிருவரையும் கடவுளைப் போலக்கருதி உள்ளங்கசிந்த அன்பும் இனிமையும் பொருந்தி மென் மேலும் அம் மாதா பிதாக்களுக்குப் பரம ஆனந்தமளிப்ப னவாகிய அருஞ்சொற்களால் துதித்துப்பன்முறை வலம் வந்து வந்தனை வழிபாடுகளியற்றவும் இன்னும் பல வணக்க வொழுக்கங் களால் அவர்களை மகிழ்ச்சியுறவுஞ்செய்தனர். அம்மாதா பிதாக் கள், சிறுவர்களின் தாழ்மையையும் விவேகமுதிர்ந்த உத்தமகு ணங்களையும் அபாரமான புத்தி சாமர்த்தியங்களையும் குடும்பகாரி யங்களில் அவர்கள் வெளியிடுகின்ற கௌரவத்தையும், அனுஷ் டித்து வருகின்ற தர்மகாரியங்களையும் கண்டு அளவற்ற சந்தோ ஷமடைந்தவர்களாய் மெய் மறந்து குழந்தைகளை வாரியெடுத்த ணைந்து பேருவகைக்கடலுள் மூழ்குவாராயினர்.

தாய்தந்தையாது புன்சிறிப்புலாவிய வதனத்தைக்கண்டு வா லிபர்களும் மந்த ஹாஸம்புரிவார்கள். சூழந்தைகளில் எவரேனு மொருவர் " விசனஎண்ணங்களின் குறிகளை முகபாவனையிலுற் சிறிது வெளியிடுவாராயின், அவ்வேதனையானது எல்லா அங்கங் களையும் ஓரேமாதிரியாகப்பாதிக்கும். குழந்தைகள், கிருஷி, கை த்தொழில், வியாபாரம், வேதாத்தியயனம் முதலிய பற்பல தொ ழில்களைச்செய்து வருவோராவரென முன்னரே குறிப்பாக வுண ர்த்தியிருக்கின்றோமல்லவா? இவர்கள் எல்லாத்தொழில்களையும் ஓரேமாதிரியாகப் பெருமைப்படுத்து கின்றவர்களாக இருந்தது மன்றிக்காலநியமத்தை யனுஸரித்துத் தந்தம் தொழில்களிலே யே கண்ணுங்கருத்து மாயிருந்து வந்தனர். இக்குடும்பத்திலிரு ந்து வருகின்ற எல்லா அங்கங்களுடையவும் முடிவான உத்தேசம் ஒன்றே உண்டு. அதாவது: "அந்த அந்த அங்கங்களுக்கு மிரு ந்து வருகின்ற அந்நியோந்நிய பாத்தியதைகளையும் பொதுப்பா த்தியதைகளையும் சிறிதும் விடாது திருடமாப்பிடித்துக் கொ ண்டு பிரவிர்த்திசக்கிரத்தைச் சிருஷ்டியின் நியமித்தை யனுஸரி த்து (பயனெதிர்பாராமையாகிய நிஷ்காம இச்சையுடன்) மிகச் சுலபமாய்ச்சுழற்றிவிட்டு ஞானாதத்தின் மீது ஆரோஹணித்த மர்ந்தவர்களாய் மோக்ஷபதவியை யடைவது,, என்பதாம்.

சாந்திஸமபாவனை, ஆத்மஞானம், கடவுளிடத்திலன்பு, (சுக வரபக்தி) ஜீவகாருண்யம் என்பன போன்றநறு மணம்நிறைந்த அருமலர்களால் அவர்களது ஹிருதயஸபையில் தலைபூண்டு விளங்குகின்ற பரமாத்மஸ்வரூபத்தை இடைவிடாது அவர்கள் அர்ச்சித்து வருவார்கள், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆத்ம சத்துருக்களுக்கு அவர்களின் ஸமீபத்தில் நெருங்குவதற்குக்கூட அவர்கள் அனுமதிகொடுப்பதில்லை! நோயற்றவாழ்வு, பலம், தீர்க்காயுள், திவ்யஞானம் என்பவற்றுலவர்களது ஸர்வஅங்கங்களும் அலங்கரிக்கப் பெற்றுத்துலங்கலாயின. அவர்கள் ஒருநிமிஷ நேரத்தையாவது வீணைகளவதில்லை. கடவுளின் படைப்பிலுள்ள எல்லாப்பொருள்களையும் அவர்கள் நன்றுக ஆராய்ந்து அவற்றின் இயல்புகளை உணர்ந்து தமது வாழ்க்கையாகிய கொடியை "எல்லா வற்றினுக்கும் மேலாய் உயர்த்திப் பிரகாசிக்கச் செய்யவேண்டி அப்பொருள்களை உபயோகித்து வருவார்கள் அவர்கள் உலகத்தையும் தங்களையும் கடவுளினது சுவரூபமாகவே பார்த்து வருவதால்" ஒருவரையும் தங்களுக்குப் பகைவர்களாய் கருதுவதில்லை இவ்விதமாய்" மாதா பிதாக்களாகிய இருஷிகர்களும் குழந்தைகளாகிய இருஷிணியர்களும் சேர்ந்து ஒருமனதுடன் செய்துவந்த யோகக்ஷேமவாழ்க்கையானது பரமஆனந்தகரமாய் சோபித்து வாலாயிற்று. அது போல பூலோகமாகிய குடும்பத்திற்கு தாய்தந்தையர்களைப்போல பரணஞ்செய்வோர் (காப்பாற்றுபவர்கள்) அரசர்களாவார்கள் பரணீயர்களாகிய (காப்பாற்றப் படவேண்டிய) குழந்தைகள் சர்வஜனங்களுமாவார்கள்.

அயம்பந்துரயம் நேதிகணநாலகு சேதஸாம் |
உதார சரிதாநாந்து வஸுதைவகுடும்பகம் ||

இவன் நமது உறவினனவன். இவன் நமது உறவினனல்லன், என எண்ணுவது புல்லறிவுடைய பேடிகளினியல்பாம். ஆனால் மகாமேதாவிகளாகிய உதாரகுணம் வாய்ந்த புருஷர்களோவெனில்,, பூலோக முழுதையுமே தமது குடும்பமெனக்கருதுவார்கள் இம்மேலோரது நன்மொழி இங்கு எத்துணையோ பொருத்தமுடையதாம் மேற்கூறிய குடும்பத்திலுள்ள மாதா பிதாக்கள்

தமது குழந்தைகளிடமும் குழந்தைகள் தம் பெற்றோரிடமும் எவ்விதம் நடந்து வந்தனரோ அவ்விதமே அரசர்களும், பிரஜைகளும் பரஸ்பரம் நடந்து வரவேண்டியவர்களாவார்கள். மாதா பிதாக்களாகிய ஆளுவோரும் குழந்தைகளாகிய ஆளப்படுவோர்களும் அவர்களின் மனோவாக்குக் காயங்களாகிய மூவிதகாரணங்களாலும் எல்லா விஷயங்களிலும் தம்மை ஏகைக பாவமாகக் கருதியதன் பெருமையினால் அவர்கள் நித்தியானந்தக்கடற்குள் மூழ்கியவராயும் அவர்களிவாழ்க்கையானது எல்லோராலும் ஒரு உத்தமமாதிருகை யென அங்கீகரிக்கத்தக்க வண்ணம் பரிசுத்த நிலை வாய்ந்ததாயுமிருந்தது. மேலேவிவரிக்கப்பட்ட பரணசக்தியானது பூரண புண்ணியத்தினுடைய மாற்றுருவம் வாய்ந்த தோர் உருவகப்பொருளாகும். அதுபோல அரசர்களும் பிரஜைகளும் இருந்து வந்தால் அதற்கு உத்தமபரணமென்று பெயர். ஆனால் இங்கு முக்கியமாய் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது, மனிதர்களுக்கும் பசு பக்ஷி விருக்ஷம், கொடிசெடி புல்பூண்டு முதலியவை களுக்கும் பரஸ்பர ஸகாயங்கள் இன்றியமையாது (வேண்டி) யிருத்தலால் அவற்றையும் காலதேசவர்த்தமானங்களுக்குரியவண்ணம் பரிபாலித்து வரவேண்டுமென்பதாம்

ஆதலின் இவையெல்லாவற்றையும் ஸமமாகப்பரிபாலித்து வந்தால் தான் அதுஉத்தமபரணமாகும்.

2 மத்யமபரணம் மேற்சொல்லிய வண்ணம் பத்துப்பெயர்கள் வாழ்ந்து வந்தகுடும்பத்தில் சிலகுழந்தைகள் தங்களுடைய பாத்யதைப்பட்ட தொழில்களையும் நியமங்களையும் உதறிவிட்டுக் குடும்பக்ஷேமத்திற்கு விரோதமான கிருத்தியங்களில் தலையிட்டு வந்தார்கள். அப்பொழுது குடும்பத்தின் பூர்வநிலைமையில் ஒரு பெரிய மாறுதலுண்டாயிற்று. குழந்தைகள் துன்மார்க்கர்களாய்ப் போனதனால் மாதா பிதாக்கள் மிகவும் விசனமுற்று அவர்களை ஸாமதான பேததண்டோபாயங்களால் ஸன்மார்க்கிகளாக்கிவிடுவதற்கு மஹாப் பிரயத்தினஞ்செய்தார்கள். குழந்தைகளோவென்றால் தாய் தந்தையருடனும் மற்றுமுள்ள ஸாதுக்களாகிய தங்களுடைய சகோதரர்களுடனும் ஸதாகாலமும் போராடி அவர்கள் வசத்திலிருந்த செல்வங்களைப் பலவிதத்தாலும் கைப்பற்றிக்கொண்டு சுகமாய் வாழ்வதற்கு முயன்றனர்.

"கு புத்ரஸ்து குலம் ஹந்தி"

"கெட்டபிள்ளை குலத்தைக்கெடுப்பான்" என்ற பழமொழிப் படி மேற்படி குடும்பத்திற்குப் பெருங்கேடு விளைவிப்பதாயிற்று. மாதா பிதாக்களும் மீதியுள்ள சத்புத்திரர்களும் ஒன்று சேர்ந்து குடும்ப சமுதாயத்தைப்பரிபாலிக்கின்றார்கள். உத்தம பரணத்தி லிருந்த மாதாபிதாக்களுடைய குணங்களனைத்தும் இங்கே கூறப் படுகின்ற இரகூஷகர்களுக்கும் ஸத்புத்திரர்களுக்கும் இருந்துவரு கின்றனவாயினும் துர்மார்க்கிகளாகிய சில புத்திரர்களுடைய கலகத்தினல் இக்குடும்பத்திற்குப் பூர்ண சுகம் சித்திப்பதில்லை. ஸத்புத்திரர்கள் ஒற்றுமையுடன் வேலை செய்து உண்டாக்கின்ற சொத்துக்கள் முதலிய வற்றை ஒரு கொடிப்பொழுதில் மற்ற சகோதரர்கள் அழித்துவிடுவார்கள். இவ்விதமான நஷ்டங்களுக்கு இடமில்லாதிருத்தல் வேண்டி அளவற்ற நிர்ப்பந்தங்களை யேற்ப டுத்தி மாதாபிதாக்கள், வீட்டு வேலைகளை நன்முக நடத்திவந்த னர். அது போல சமுதாயத்தின் ரகூஷகர்களாகிய அரசர்களும் பிரஜைகளில் ஸத்குணம் வாய்ந்த அங்கங்களும் சேர்ந்து ஒத்து மையுடன் ஜன சமுதாயத்தைக் காத்துவருவார்கள். மற்றுமுள்ள அங்கங்கள் சமுதாய பாத்யதையை உதரி விட்டுத்தமக்கும் சமு தாயத்திற்கும் நாசம் விளைவிப்பதாகிய கொடுஞ்செயல்களைச்சதா காலமும் செய்தார்கள். இந்த சமுதாய நியமத்தைக் கடந்து நடக் கின்ற அவிவேகிகளாகிய அங்கங்களையடக்கி அவர்களை நல் வழிக் குக்கொண்டு வரவேண்டி அரசர்களும் அரசர்களின் சபைகளு மாகக்கூடிப்பற்பல சட்டங்களை வெளியிடுவார்கள். இவ்விதச்சட்ட ங்களாகிய கயிறுகளினல் நல்ல பிரஜைகளைக்கொண்டு கெட்ட பிர ஜைகளை சிக்ஷை செய்வித்து அரசர்கள் ராஜியபரிபாலனம் புரிவார் கள். அரசர்களுக்கும் சத்பிரஜைகளுக்கும் அந்த ராஜியத்தினு டைய புகழை விருத்தி செய்யத்தக்கவண்ணம் வேண்டியமட்டில் புத்தி சாமர்த்தியமும் மிகப்பிரசித்தி பெற்ற செல்வமுமிருப்பத னல் இவர்கள் முன் விவரிக்கப்பட்ட குடும்பத்தினது தாய் தந் தைகள்போலும் அதிகக்கஷ்டமின்றி ராஜியத்தைப்பரிபாலித்து வருவார்கள். ஆயினும் பிரஜைகளாகிய அங்கங்களில் சத்துருக்கள் மித்திரர்கள் என இரண்டு வித சக்திகள் உற்பத்தியானதால் ராஜி

யம் முழுதும் சுக துக்கங்களாகிய இரண்டு தொட்டில்களிற் கிடந்து இங்குமங்குமாய் அடிக்கடி சலித்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

இவ்விதமுள்ள நிலைமையானது முக்கால் பாகம் புண்ணியத் தினையும் கால்பாகம் பாவத்தினையும் வெளியிடுகின்றது. இவ்வித மாயளப்படுகின்ற முறையைத்தான் மத்தியமபரணமென்று கூற வேண்டும்.

3. அதமபரணம். மூன்தெரிவித்தவண்ணம்பத்து அங்கங்களோடு கூடிய குடும்பத்தில் பரிபாலிப்போராகிய மாதா பிதாக்களே தங்களுடைய அவிவேகத்தால், காப்பாற்றவேண்டிய தாகிய தங்களுடைய சுதந்தரத்தையுதறிவிட்டு அந்த குடும்பத் தைகாசஞ்செய்வதாகிய பிரவர்த்திகளைச்செய்கின்றார்கள். எதே னும் சில புத்திரர்கள், மாதா பிதாக்களுடைய இவ்விழி தொழி லுக்கு வசப்பட்டவர்களாய் தங்களுடைய குடும்ப பாத்தியதைக ளேமுற்றிலும் விடுத்து வெட்கம் வினவிப்பனவாகிய ஒவ்வொரு காரியங்களையுஞ்செய்கின்றார்கள். நீதியுள்ள சிரேஷ்டாகிய அங் கங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டவர்களாய் குடும்ப பாரத்தினது முன்னேற்றத்தைப்பற்றி ஆலோசிக்கலாயினர். மாதா பிதாக்க ளுக்கு, மேற்படி குடும்பத்தை நியாயமாய்ப் பரிபாலித்து வர வேண்டியமார்க்கங்களைத் தங்களேயறிந்து கொள்வதற்கு சாமர்த் தியமின்மையாலும், ஸத் புத்திரர்கள் தெரிவிக்கின்ற அபிப்பிரா யங்களை நன்றாக மனதிற்கு வாங்கிக்கொண்டு அவ்விதமே செய்து வர மனம் வாராததாலும் ரக்ஷகர்களாகிய மாதாபிதாக்களுக்கும் ரக்ஷணீயர்களாகிய ஸத் புத்திரர்களுக்குமாய்ப் பரஸ்பரம் கல கமுண்டாகின்றது, இதனால் பொதுவாய்க்குடும்பத்திற்கும் பிரத்தி யேகமாய் ஒவ்வோரங்கங்களுக்கும் ஸஹித்தற்கரிய சங்கடமுண் டாகக்காரணமாகின்றது. குடும்ப க்ஷேமத்திலேயே கண்ணுங்க ருத்துமுடையவர்களும் புத்திமான்களுமாகிய ஸத் புத்திரானவ ருமொன்றுசேர்ந்து ஆலோசனை புரிந்து தங்களுடைய ரக்ஷகர் களாம் மாதா பிதாக்களை அந்த ஸ்தானத்தினின்றும் நீக்கி அந்த ஸ்தானத்தினில், தமக்குள் உத்தமனாகிய ஒருவனைத்தேர்ந்தெ டுத்துப்பரிபாலனப்பிரதிஷ்டை செய்வார்கள். அப்பால் துர்க்கு

ணிகளும் குடும்ப நியமத்தைக்கடந்து நடப்பவர்களுமாகிய தங்களுடைய மற்ற சகோதரர்களின் சங்கத்திலேயே தம்முடைய சகாக்களாக இருந்து வந்த மாதா பிதாக்களையும் (இராணுவீரர்களாக) ஒன்று சேர்த்து இவர்கள் சிக்ஷித்தும் பரிபாலித்தும் வருகின்றனர். பிரஸ்தாபித்த வண்ணம் பரணஸ்தானத்திலமர்ந்த புத்திரன் மேற்படி மாதா பிதாக்களைப்போல குடும்ப க்ஷேமங்களை விருத்தி செய்வதில் மனமில்லாதவனுடைய அவனையும் முன் போலவே அந்த ஸ்தானத்தினின்றும் நீக்கிவிடுவார்கள். இவ்விதமாகவுள்ள குடும்பமானது பலவிதமான உள் கலகங்களாலும் அங்கங்களுக்குள் அந்நியோந்நியமான உள்ளன்பு இல்லாமையாலும் விஷங்கலந்த உணவுபோலும் அளவற்ற சங்கடங்கள் நிறம்பிய சுகத்தையனுபவிக்கின்றனர்.

இது போல் ஒரு சமுதாயத்தில் பரணகர்களாகிய அரசர்களுக்குத்தங்களுடைய சமுதாயத்தினது நன்மைக்குப் பிரத்தியக்ஷமாயும் அப்பிரத்தியக்ஷமாயும் வேண்டி வருகின்ற தேவைகளைத்தாமாகவே உணர்ந்துகொண்டு பிரவர்த்திக்கவோ அல்லது பிரஜாங்கங்களில் யோக்கியர்களாயுள்ளோர் உபதேசிக்கின்ற வண்ணம் கேட்டு நடப்பதற்கோ சாத்தியமில்லை" யென வருகின்றது அந்த சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்ற பிரஜாங்கங்களில் அறியாமையுள்ளவர்களும் ராஜ்ய க்ஷேமத்தைக் கனவிலும் கண்டறியாதவர்களுமாகிய அங்கங்கள், மேற்குறித்த நிலைமைக்கு வந்துள்ள ராஜாக்களுக்கு உபதேசக்குருக்களாயும் உற்ற நண்பர்களாயுமாகின்றார்கள். இராஜ்யம் இந்த நிலைமைக்கு வரும் பொழுது பராயீர்களாகிய ஸத் பிரஜைகளுக்கு முற்றிலும் விபரீதமாக அரசர்களும் பரணகர்களாகிய அரசர்களுக்கு விபரீதமாக ஸத்பிரஜைகளும் பிரவர்த்திப்பார்கள். இது பிரஜைகளுக்கும் அரசர்களுக்குமாக அந்நியோந்நிய கலகம் விளைவித்துத் தாங்கமுடியாத நாசத்திற்கு ஹேதுவாகும். இது விருத்தியாக ஆரம்பிக்கும்பொழுது, யோக்கியர்களாகிய பிரஜாங்கங்கள் ஒருங்கே சேர்ந்துகொண்டு அவ்விதமுள்ள அரசர்களை அவர்களது ஸிம்ஹாசனத்தினின்றும் முன் சொன்ன மாதாக்களைப்போல நீக்கிவிட்டு அவ்வரசர்களையும் தமது பிரஜாங்கங்களில் சேர்த்தும் அவ்விதமான ஸ்தானங்களில் மேற்படி பிரஜாங்கங்களிலிருந்தும்

போக்கியர்களைத் தெரிந்தெடுத்து ஸ்தாபித்தும் வருவார்கள். இவ்விதமுள்ள பரணுநபவமானது பாதிபுண்ணியத்தையும் பாதி பூவத்தையும் தெரிவிக்கின்றது. இவ்விதமாகப்பலவித துரிதங்களை அனவரதமும் அனுபவித்து வருகின்ற ஜன சமுதாயத்தின் பரணமானது அதமமென அறிந்துகொள்ளத்தக்கதாம்.

4. அதமாதம பரணம்

முன்னர் விஸ்தரித்திருக்கின்ற குடும்பத்தில் இப்பொழுது பத்துப்பெயர்களிருக்கின்றார்களென வைத்துக் கொள்வோம். இவர்களில் மாதாபிதாக்கள் பரணகர்களும் குழந்தைகள் பரணீயர்களுமாவார்களல்லவா? குறித்த குடும்பத்தினது முன்னேற்றத்தினுக்கு உசிதம்போற் செய்ய வேண்டியனவாகிய எல்லாக்காரியங்களும் மேற்படி பத்துப்பெயர்களுக்கும் தெரிய வராது. ஓர் சமையம் ஒரு புத்திரன் தனது ரக்ஷகர்களைப்பார்த்துப் பின்வருமாறு வினவலாயினன். "எனக்கு வயிற்றில் மிக்கவேதனையுண்டாகி இன்றைக்கு இரண்டுநாளாகின்றது, அது நிமிஷந்தோறும் அதிகமாகி என்னை மிகவும் துன்புறுத்துகின்றது. இக்கணமே ஔஷதமாகும் படிக்குச் செய்யாவிடில் நான் இப்பொழுதே இறந்து விடுவேன்" இதனைக்கேட்டவுடன், மக்கண் மேற்காதலுள்ள மாதாபிதாக்கள் அந்த நிமிஷத்திலேயே அப்பட்டணியழைத்து வந்து வயிற்று நோயால் வருந்துகின்ற புதல்வனுக்குத் தலை சிறைத்துவிடும்படி ஆணையிட்டனர். வேறோர் தனயன், கண்ணோயினல் பெருந்துன்பமுற்றுக்கதறுங்கால் அது நீங்குதற்காகப்பெற்றோரைப் பார்த்து இவ்வண்ணங்கூறலாயினன். "என்னைப்பாதுகாத்து வரும் பெற்றோர்களே! எனக்குக்கண்ணோய் பொருக்கமுடியாமையினல் இப்பொழுதே எனது இடக்காலினை வெட்டி முறித்து சோகசமனஞ் செய்து கொடுக்கவேண்டுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்" தாய்தந்தையோர் அவனைப்பார்த்து "சீ! போ! உனக்கு யாதொரு காரியமும் தெரியவராது! காலை முறித்து விடுவதனல் நோய் தீர்ந்துவிடுமோ? இதோபார் உன்னுடைய நோயைத் தீர்த்து சுகப்படுத்திவிடுகின்றேன்" எனப்புகன்று ஒரு கத்தியையும் சிமிட்டாவையும் தருவித்து நோயாளியினுடைய நனி மூக்கையும் வாயின் முன்புறத்திலுள்ள மேற்பற்களிரண்டையும் முறையே கத்தியினலறுத்தும் சிமிட்டாவினைக்கொண்டு வேறோடு பிடுங்கியும் எரிந்துவிட்டனர்! படிப்போர்களே! இதனை மனத்தி

ஞல் உருவகப்படுத்தி நோக்குமின்! மற்றோர் குமாரனுக்குப்பசி வேதனை தாங்கமுடியாத, ஐயே! பசி தாங்கமுடியவில்லையே! பசி தாங்கமுடியவில்லையே'' யென உரத்தச்சத்தமிடும்பொழுது அதனைச்செவியுற்ற தாய் தந்தையோர் மல்லிகை முல்லை ரோஜா முதலிய நறு மணங்கமழும் அருமலர்களால் ஒரு பெரும் மாலை தொடுத்துக் குழந்தையின் பசியினைத்தீர்த்துக்கொள்ளுமாறு ஸம்மானித்தனர். அப்பால் இன்னுமோர் புத்திரன் கழுத்தில் கயிற்றினால் சுருக்கிட்டுக்கொண்டு மோக்ஷமடைய வேண்டும்! மோக்ஷமடையவேண்டும் எனப் பெற்றோர்பால் வேண்டிக்கொண்டனன். பெற்றோரும் புத்திரனுடைய புத்தி சாமர்த்தியத்தையும் துட்பமான ஆலோசனையையும் மெச்சிக்கொண்டவர்களாய் அவ்வாறே செய்து கொள்ளுமாறு மிக்க மகிழ்ச்சியோடனுமதியளித்தனர். இனியுமோர் சமையத்தில் அம்மாதா பிதாக்கள், தமது புத்திரர்களையும் புத்திரிகளையும் பார்த்து ''எமது அருமைப்புதல்வர்களே எம் ஆருயிர்ப்பெண்மணிகளே! நீங்களெல்லோருமாக ஒன்று சேர்ந்து எங்களை கனமுள்ளவர்களாகச்செய்வது எக்காலம்?''என நாங்கள் மிகவும் ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.'' ஆதலால் நீங்கள் யாவரும் எங்களுடைய அபிஷ்டத்தை நிசைவேற்றி வைப்பீர்களென நாங்கள் மனப்பூர்வமாக நம்புகின்றோம். என மொழிந்தனர். இக்கோரிக்கைகளைக்கேட்ட மக்கள் யாவரும் ஒருங்கே கூடி ''நாம் நம்முடைய மாதா பிதாக்களை கனமுள்ளவர்களாகச்செய்து அதனால் நாம் கிருதார்த்தர்களாய் விடுவதற்கு என்ன உபாயம்'' எனச்சிந்திக்கவும் அப்பால் யெல்லோரும் ஒசேவிதமாக அபிப்பிராயப்பட்டும் அடியிற்கண்ட வண்ணஞ் செய்யலாயினர்.

அதாவது மிகப்பாரமுள்ள ஒரு கருங்கல்லினை எல்லோருமாகப்புரட்டி யெடுத்து மகாப்பிரயாசத்துடன் தாங்கிக்கொணர்ந்து மாதா பிதாக்களின் உத்தமாங்கமாகிய சிரசில் பயபக்தி விசுவாசத்துடன் சமர்ப்பித்து கனமுள்ளவர்களாக்கித் தீர்த்த விட்டனர். கருங்கல் சமர்ப்பிக்கப்பட்டவுடன் பெற்றோரிருவரும் பாரினையின் காற்பட்டு நசுக்குண்ட சிற்றெரும்பே போலும் நொருங்கித்தமது விலை யேரிய ஆருயிரை வீணே இழந்தனர் எனும் பரிதாபசம்பவத்தைப் படிப்போருக்கெடுத்துரைக்க நம் மனம் நடுங்குகின்றது.

அம்மட்டோ இவ்விதமுள்ள பற்பல அவிவேகக்ருத்தியங்களால் அக்குடும்பத்தவர் உயிர் வாழும்பொழுதும் பாஸ்பரம் அனுபவிக்கும்படி நேர்ந்த கஷ்ட நஷ்டங்கள் அளவிலடங்கா வென்பதையும் விசனத்துடன் தெரிவிக்கின்றோம்.

இந்தப்பிரகாரமாகவே, பரணஞ் செய்வோராகிய அரசர்களும், பரணீயர்களாகிய பிரஜைகளும் அவர்களின் பேரறியாமையினல் சிருஷ்டி நியமத்தையனுசரித்துச்செய்யவேண்டியனவாகிய சகல காரியங்களையும் உதறி யெறிந்து பிரகிருதிக்கு விரோதங்களாகிய செயல்களைச் சதா காலமும் செய்து வருவார்கள். எவ்விதம் பிரஜைகளைப் பரிபாலிக்கவேண்டுமென அரசர்களுக்கும் எவ்விதம் ராஜ்ய காரியங்களை நிர்வகிக்கவேண்டுமெனப் பிரஜைகளுக்கும் அற்பமேனும் அறிவின்றி வயிற்று வலியைச் சமனஞ்செய்ய வேண்டி விரும்பிய பொழுது தலைக்கு க்ஷௌரஞ்செய்தது போலும் கண் நோய் தீர்ப்பான் வேண்டி நுனிமூக்கையறுத்துப் பற்களைப்பிடுங்கி யெறிந்தது போலும் தாங்கமுடியாத பசியை நீக்கிவிடக்கருதி "உயர் வாசனையமைந்த உத்தம புஷ்பமாலையை கொடுத்தது போலும்" பிரஜைகளினது ஒவ்வொரு சங்கடங்களையும் நிவர்த்திசெய்ய விரும்பி மேற்படி அரசர்கள் ஒவ்வொன்றுக்கும் விபரீதமாகவே பரிகாரம் செய்து வருவார்கள். மூலபோகத்தால் வருந்திய புதல்வன் அத்துன்பத்தையகற்ற விரும்பித் தனது செவிகளையறுத்து விட வேண்டுமெனப் பெற்றோர்பால் வேண்டலும் அவர்கள் அங்ஙனமே செய்தருளியதைக்கண்ட அப்புதல்வன் பெருமகிழ்ச்சியடைந்ததைப்போலும் குணதோஷங்களைப்பகுத்துணரத்தக்க விவேக ஞானமில்லாத பிரஜைகள் தங்களுடைய சங்கடங்களை நிவர்த்தி செய்யவேண்டித் தங்களுக்கு வேறோர் பெருஞ்சங்கடத்தை உண்டாக்கத்தக்கனவாகிய காரியங்களை அரசர்களிடம் கேட்பதும் அரசர்கள் அக்கணமே அவ்விதம் செய்யும் வண்ணம் அனுமதியளிப்பதும் அதைக்கேட்ட பிரஜைகள் உடனே பரம ஸந்தோஷமடைவதுமாகிய சம்பவங்களை இடை விடாது நடத்தி வருவர். பெற்றோர்களைக்கனமுள்ளவர்களாகச்செய்ய விரும்பி அவர்களின் சிரசில் பெரும்பாரமுள்ள பாராங்கல்லை யேற்றி அவர்களது உத்தம ஜீவிதத்தைக் கதையாகச் செய்த புதல்வர்களைப்போல அவிவேகிகளாகிய பிரஜைகள் அர

சர்களை வெகுமானித்துப் பெருமைப்படுத்துகின்ற சம்பிரதாயங்கள் மேற்படி அரசர்களின் எல்லா நன்மைகளையும் கண் நேரத்தில் நாசஞ்செய்து விடுவதற்கு ஹேதுக்களாய் முடியும். இவ்விதமுள்ள சமுதாயத்தினது ஸ்வானுபவம்" இன்ன விதமாக இருக்குமெனப்பிரத்தியேகமாய் விவாணஞ்செய்யவேண்டிய ஆவசியகமில்லையல்லவா?

இம்மாதிரியான நிலைமை சமூதாயத்தினது மூன்று பாகம் பாபத்தையும் ஒருபாகம் புண்ணியத்தையும் வெளியிடுகின்றது. புண்ணியம் முற்றிலும் நஷித்துப்போய் விடுமேல் மனிதஜென்மம் சித்திப்பதில்லையென அறிதல் வேண்டும். மேற்புகன்ற வண்ணம் ஒரு ராஜ்யத்திலுள்ள பாணகளுகிய அரசனுட் பாணீயர்களாகிய அதன் பிரஜைகளும் அனுசரித்து வருவார்களானால் அதமாதம பாணமென்று அறிந்துகொள்ளவேண்டும்.

இங்கு விஸ்தரிக்கப்பட்ட திருஷ்டாந்தங்களால் அதமாதம பாணமும் அதனால் விளைகின்ற அனர்த்தங்களும் இவ்விதந்தானிருக்குமெனப் படிப்போர்க்கு விளங்கியிருக்குமாதலால் இனி உத்தம க்ஷத்திரியனுகிய அரசன் தனது பிரஜா பரிபாலன விஷயமாய் அனுஷ்டித்து வரவேண்டிய சில விருதானுஷ்டானங்கள் உண்டென்றும் சாஸ்திரங்களையனுசரித்து க்ஷத்திரியனிடத்தில் இயல்பாயமையவேண்டிய செயல்கள் இவையாயிருக்குமெனவும் இதனடியில் தெரிவிப்போம்.

ஒரு க்ஷத்திரியன், இந்திரன், சூரியன், வாயு, இயமன், வருணன், சந்திரன், அக்கினி, பூமி என்பவராகிய தேவதைகளின் தொழில்களைச் சதா காலமும், அனுஷ்டித்து வரவேண்டியவனுவான்.

(1) இந்திரன், தனது சப்த (ஏழு) மேகங்களில் ஒன்றுகிய ஜலமேகத்தைக்கொண்டு பூமியின் கண்ணே அவ்வக்காலங்களையனுசரித்துப்போதிய வண்ணம் மழை பொழிவித்து சராசரப்பொருள்கள் அனைத்தினுக்கும் ஒருங்கே குளிர்ச்சியளித்து அவைகளுக்குப் புஷ்டி, இன்பம் என்பன போன்ற சௌக்கியங்களையுண்டாக்கிப் பெருமகிழ்ச்சி பெறுவிப்பதுபோல, அரசன் தனது அர

...குள்ப்பட்ட சகல உயிர்களுக்கும் அபேதமாய் (வேற்று யின்றி) ஜனங்களின் மனத்தைக் களிப்பிக்கும் வண்ணம் சற் ருத்தியங்களைச் செய்து வருபவனும் (எல்லா நன்மைகளையும் நிறைவேற்றி வருபவனும்) ஆகுமி புரிந்து வருவது க்ஷத்திரியனு டைய இந்திர விருதமாகும்.

(2) சூரியன், தனது (உஷ்ண) கிரணங்களினால் புவியிலுள்ள ஜலங்களைச்சிறிது சிறிதாய் ஆறுமாத காலம்வரை மேல்நோக்கி இழுத்து (பனிக்கிரணங்களால்) ஆவியுருவமாய் மாற்றி ஆகாய மாம் பெரும் பாத்திரத்தினுள் நிரைத்து வைத்துக்கொள்வதும் அவற்றை மீண்டும் பிராணி வர்க்கங்களின் சுக க்ஷேமாபி விருத்தியின் பொருட்டு "வர்ஷக் கிரணங்களினால் ஜல உருவமாய்ப் பொழிந்தும்" வருவது போல அரசன் தனது பிரஜைகளிடத்தி னின்றும் "வரிகளை (ஒரே கடிவில் அவர்களை ஹிம்சித்து வசூல் செய்யாது) சூரியனைப்போல சிறிது சிறிதாக வசூல்செய்து" அர சாங்கப்பொக்கிஷத்தில் நிறைத்து வைத்துக்கொள்வதும் பின்னர் அவற்றைச் சமயோசிதம்போல் பொது ஜனங்களின் ஆயுளாரோக் கியக்கல்வி செல்வ சுகாதிகளின் பொருட்டு எடுத்து விநியோ கித்து வருதலுமாகிய செய்கை க்ஷத்திரியனுடைய சூர்ய விருத மாகும்.

(3) வாயு, சகல ஜந்துக்களுடைய உள்ளிலும் புறம்பிலும் பிராணரூபங்கொண்டு ஒரே விதமாய் பிரவேசித்து சர்வ அவய வங்களும் நாசமடையா வண்ணம் ரக்ஷித்து வருவதுபோல அர சன் மாறுவேஷம் பூண்டு தனது இராஜியத்திலுள்ள பிராம்ம ணன் முதல் சண்டாளன் வரையிலுள்ள எல்லாஜனங்களுடையவும் வாசஸ்தானங்களில் நுழைந்து சஞ்சரித்து அவர்களின் யோக க்ஷேமங்களையும் நியாயா நியாயங்களையும் பொய் மெய்களையும் உள்ளது உள்ளவாறு நன்கறிந்துகொண்டு எல்லாப் பிரஜைகளுக் கும் சேடு வராவண்ணம் பரிபாலித்து வருவது க்ஷத்திரியனு டைய வாயு விரதமாகும்.

(4) இயமன், பாவம் செய்கின்ற எல்லா ஜனங்களையும் இவன் நண்பன் இவன் பகைவன் எனக்கருதாது ஒரே விதமாய் சிறிதும் கருணை பாராட்டாது தண்டிப்பதுபோல, அரசனும் குற் றஞ்செய்த பிரஜைகளை "தனவானென்றும் தரித்திரனென்றும் கினையாது பக்ஷபாதமின்றி சிக்ஷிப்பது க்ஷத்திரியனுடைய இயம விருதமாகும்.

(5) வருணன் தன்னால் தண்டிக்கத்தக்க பாவம்புரிந்தவர்க ளைத்தனது பாசங்களைக்கொண்டு நிடமாய் ஹிம்சிப்பதுபோல அர சன் "தனது ராஜியத்தினுடைய க்ஷேமாபி விருத்திகளுக்கு

விரோதங்களாகிய பற்பல பயங்கரகிருத்தியங்களைச்செய்து மே
டிருக்கின்ற துஷ்டர்களை இருப்புச்சங்கிலி கொண்டு பலமா
வரிந்து அவர்களைச் சிறையிலிடுவது க்ஷத்திரியனுடைய வருண
விருதமாகும்.

(6) பூர்ண சந்திரன், சர்வ ஜனங்களும் தன்னைக்கண்டு இன்
புற்று மகிழும் வண்ணம் மிக்க சீதளமாயும் பளபளவென்ற காந்தி
யோடும் எல்லோரிடத்திலும் சமமாய் பிரகாசித்துக்கொண்டிருத்
தல்போல அரசன் மந்திரிமுதல் இரப்போன் ஈராகவுள்ள சகல
பிரஜைகளும் தனது உத்தம குணங்களைக்கண்டு ஆனந்திக்குமாறு
நடந்து வருவது க்ஷத்திரியனுடைய சந்திர விருதமாகும்.

(7) அக்கினி, உஷ்ண சுவரூபமாயுள்ளதாய் உலர்ந்த புற்கள்
காய்ந்த கட்டைகள் முதலியவற்றை எரிப்பதுபோல அரசன்
"சிறிதும் சோம்பலின்றியவனுய் உற்சாகத்தோடும் பிரதாபத்தோ
டும் கூடியவனுய் துஷ்டப்பிரஜைகளையும் கைக்கூலி வாங்கி
துரோகஞ்செய்கின்ற மந்திரி முதலான உயர்ந்த உத்தியோகஸ்த
களையும் அவரவரின் குற்றத்திற்கேற்ற வண்ணம் சிக்ஷித்து அட
கிவருவது க்ஷத்திரியனுடைய அக்கினி விருதமாகும்.

(8) பிருதிவி, சராசர ஸ்வரூபமாகிய சர்வப்பிராணி வர்க்கங்க
ளையும், உயர்ந்தவை, தாழ்ந்தவை, சமமானவை என்பனபோன்ற
பேதங்களைச் சொர்ப்பமேனும் கருதாது, எல்லாவற்றையும் சம
மாகத் தாங்கிவருவதுபோல அரசன், பண்டிதன், (சாதாரணமான)
பாமரன் முதலிய சர்வ ஜனங்களுடைய ரக்ஷணையுந் தானே
வகித்து ஏற்றுக்கொண்டு அவர்களைச்சமரசமாய்ப் பரிபாலனம்
செய்து வருவது க்ஷத்திரியனுடைய பிருதிவி விருதமாகும்.

க்ஷத்திரியனிடத்தில் உடன் பிறந்தனவாய்க்காணப்படுகின்ற
செயல்களைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் இவ்வண்ணம்
குறிப்பிடுகின்றார்.

சௌர்யம் தேஜோ திரிதிர்தாக்ஷ்யம்யுத்தே சாப்ய பலாயனம் |
தானமீச்வர பாவச்ச க்ஷாத்ரம் கர்மஸ்பாவஜம்

பராக்கிரமம், தேஜஸ் (காந்தி) தைரியம், சாமர்த்தியம்,
போர்க்களத்தில் பின்வாங்காமை, தானம்(கொடை) பரிபாலனஞ்
செய்கின்ற திறன் ஆகிய இவைகள் க்ஷத்திரியனிடத்தில் இயல்
பாயமைந்து விளங்கும் செயல்களாம்.

முற்றுப்பெற்றது.

128209